# யோபு

## ஆ! ஆ! எப்பேர்பட்ட புத்தகம்

## Job! Oh! What a Book!!

### A Study



# யோபு!

## ஆ! எப்பேற்பட்ட புத்தகம்!!

## JOB!OH!WHAT A BOOK!!

யோபு 31:35


"ஆ, என் வழக்கைக் கேட்கிறவன் ஒருவன் இருந்தால் நலமாயிருக்கும்;
இதோ, சர்வவல்லவர் எனக்கு உத்தரவு அருளிச்செய்யவும்,
என் எதிராளி தன் வழக்கை எழுதிக்கொடுக்கவும்
எனக்கு விருப்பமுண்டு."

# யோபு! ஆ! எப்பேற்பட்ட புத்தகம்!!

## JOB!OH!WHAT A BOOK!!

### பாகம் 1

யோபு புத்தகத்தில் வசனத்துக்கு வசனம்; அதிகாரத்திற்கு அதிகாரம், ஆராய்ச்சி என்று நினைக்க வேண்டாம். மாறாக இது ஒட்டுமொத்த யோபு புத்தகத்தின் ஆராய்ச்சி. இதை நாம் எப்படிப் பார்க்க வேண்டும்? எப்படிப்பட்ட பார்வையில் பார்க்க வேண்டும்? எப்படிப்பட்ட விதத்தில் பார்க்க வேண்டும்? எந்த விதத்தில் இந்த புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது என்ற இந்த புத்தகம் பற்றியதான ஒரு பார்வையை நாம் பார்க்கலாம். நாம் தனிப்பட்ட விதத்தில் அதில் இருக்கிற அதிகாரங்களை எடுத்து படித்துப் பார்த்தால் தான் நமக்குப் புரியும். இப்புத்தகம் எந்த அடிப்படையில் எழுதப்பட்டது என்ற ஆராய்ச்சியை நாம் ஆரம்பிப்போம்.



யோபு புத்தக ஆதார வசனம்

**யோபு 31:35**

**“ஆ, என் வழக்கைக் கேட்கிறவன்”**

இந்த வசனத்தின் முக்கியத்துவம் பார்க்குமுன், யோபு புத்தகம் பற்றி ஆராய்ச்சி பண்ண தேவன் அனுமதி கொடுத்திருக்கும்போது, தேவனிடம் சிலாக்கியம் பெற்றதற்காக மிகவும் நன்றி தெரிவிக்கிறேன். அநேகர் இந்த புத்தகத்தை தியானம் செய்திருக்கிறார்கள். அநேகர் இந்த புத்தகத்தைப் பற்றி கருத்துகள் கொடுத்திருக்கிறார்கள். இந்த புத்தகத்தின் சிறப்பு அம்சங்களைப் பார்க்கும் போது மிகவும் சந்தோஷப்படுகிறேன். இந்த புத்தகத்தை ஓரளவு புரிந்து கொள்ள தேவன் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். தேவன் ஏன் இந்த விசேஷ பார்வையைக் இப்பொழுது கொடுத்திருக்கிறார்?

**வெளி 3:20 – "இதோ, வாசற்படியிலே..... "**

உண்மையில், நம் பிதாவினுடைய வார்த்தையின் ஆவிக்குரியப் புரிதல் மற்றும் யுகங்களைப் பற்றின தெய்வீகத் திட்டத்தின் புரிதல் 1874 ஆம் ஆண்டில் நம்முடைய

கர்த்தர் திரும்பியதிலிருந்து அதிகரித்து வருகிறது! கர்த்தருடைய பிரசன்னத்தில் அவரோடு கூட போஜனம் பண்ணுகிற சிலாக்கியம் நமக்குள்ளே இருக்கும் போது, இக்கால கட்டத்தில் நாம் தேவனுடைய வசனத்திற்குள் இருக்கிற விசேஷ விளக்கத்தை பார்க்கிறதற்கு வாய்ப்பு ஏற்படும். இது நம்மிடம் இருக்கிற திறமையினால் இல்லை. கர்த்தருடைய கிருபை. ஆம்! இந்த யோபு புத்தகத்திற்கு பயபக்தியுடன்கூடிய சாட்சியம் கொடுக்க கிடைத்த இந்த வாய்ப்பிற்கு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், நன்றி கூறுகிறோம் !!

இந்த ஆராய்ச்சியின் தலைப்பு :-

## யோபு! ஆ! எப்பேற்பட்ட புத்தகம்!!

இந்த ஆராய்ச்சியை முடிக்கும் போது, தலைப்பின் அர்த்தம் புரியும். யோபு புத்தகத்தை பல கோணத்தில் பார்க்கலாம். அது மிக சிறப்பான விசேஷமான புத்தகமாக இருக்கும். பொதுவாக மக்கள் மத்தியில், உலகத்தில், இன்னும் சொல்லப்போனால் இந்திய தேசத்தில், **M . A** ஆங்கில இலக்கியத்தில் யோபு புத்தகத்தை பாடமாக பயன்படுத்தியிருக்கிறார்கள். இதுவரையில் இப்படியொரு புத்தகத்தை பார்க்கவில்லையாம். ஆங்கில மொழியின் நடை, இலக்கணம் மற்றும் இலக்கிய பாணி அனைத்தும் இந்த ஒரே புத்தகத்தில் இருக்கிறது. இது ஒரு காட்சி பெட்டகமாகும். இதில், பலவிதமான அழகான பொருள்கள் அடுக்கி வைத்து இருப்பது போல் இருக்கிறதாம். யோபு புத்தகத்தில் மிகவும் ஆச்சரியமான விதத்தில், ஆங்கில மொழியில் இலக்கணம், இலக்கியங்களில் இருக்கிற வித்தியாசங்கள் காணப்படுகிறது. அதாவது பெயர்ச்சொல், வினைச்சொல் மற்றும் உரிச்சொல் [Noun, Adverb & Adjective] போன்ற சிறப்பான அம்சங்கள் யோபு புத்தகத்தில் காணப்படுகிறது.

**M.A** ஆங்கில இலக்கியம் படித்தவர்களிடம் இன்னும் கூடுதல் விவரம் கேட்டு, உரையாடி தெரிந்து கொள்ளலாம். இரண்டாவது இந்த புத்தகம் யாருக்கு மிகச் சிறப்பாக இருக்கிறது என்றால், விஞ்ஞானிகள் தேவன் பேரில் விசுவாசம் வைப்பது இல்லை. விஞ்ஞானிகள் ஏதேனும் ஒன்றை நம்ப வேண்டுமெனில், அது அவர்கள் கண்ணில் காணப்பட வேண்டும். நிரூபிக்கப்பட வேண்டும். தேவன் பற்றியதான விசுவாசம் அவர்களிடம் இல்லை. அதிகமான விஞ்ஞானிகள் நாத்திகர்கள். தேவன் பேரில் நம்பிக்கை இல்லை, நம்புகிறதும் இல்லை. இந்த யோபு புத்தகம் மூலமாக அநேக விஞ்ஞானிகள் சாட்சி கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் தேவன் பேரில் விசுவாசம் வைக்கிறார்கள். விசுவாசம் வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

யோபு புத்தகத்தில் இருக்கிற விஞ்ஞான கண்ணோட்டத்தில் படிக்கும் போது, அவர்கள் என்ன முடிவுக்கு போய் விட்டார்கள் என்றால், இது போன்ற அறிவு, இது போன்ற வார்த்தைகள், விஞ்ஞான சம்பந்தப்பட்ட சத்தியம் பார்க்கும்பொழுது, எந்த மனிதனும் இதை எழுதுவதற்கு வாய்ப்பே இல்லை. இந்த வார்த்தைகளை அந்தந்த இயற்கையின் சக்தியை உருவாக்கினவர்தான் இது போன்று இருக்கிற அளவிலே எழுத முடியும். யோபு புத்தகம் வழியாக இந்த ஒரு முடிவுக்கு போய்விட்டார்கள். யோபு புத்தகம் பைபிளில் இருப்பதால், அவசியமாக நாம் பைபிள் படிக்க வேண்டும். வேதம் பற்றியதான அறிவில் இன்னும் தெளிவு

பெற வேண்டும் என கருதுகிறார்கள். யோபு புத்தகம் மூலமாய் நிறைய விஞ்ஞானிகள் விசுவாசத்திற்குள் வர ஆரம்பித்திருக்கிறார்கள்.

யோபு புத்தகத்தில் உள்ள விஞ்ஞான சத்தியங்கள் மற்றும் கொள்கைகளைப் பார்க்கலாம்.

**யோபு 26:7**

***"அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்."***

இது மிகப்பெரிய சத்தியம்.

அநேக காலமாக ஒரு வாக்குவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த பூமி எப்படி நிற்கிறது? சில மதங்களில் அவர்களின் கருத்து வெளிப்படுகிறது. இந்து மதம், கிரேக்க மதங்களுக்குள் வித்தியாசமான கருத்து இருக்கிறது. பூமி எப்படி நிற்கிறது? நாலு யானைகள் மேல் நிற்கிறது. நாலு யானைகள் ஒரு பெரிய பாம்பின் மேல் நிற்கிறது.

இது போன்ற செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆச்சரியமான விதத்தில் இந்த வசனம் கூறுகிறது. *"அந்தரத்திலே தொங்க வைத்திருக்கிறார்;"* வேதம் ஆச்சரியமாய் இருக்கிறது. இந்த விஷயத்தை எந்த மனுஷன் கண்டு பிடிப்பான்? எந்த மனிதனுக்கும் இந்த அறிவு இல்லையே. எந்த மனுஷருக்கும் இது தெரியவே இல்லை. இந்த வார்த்தைகளை விஞ்ஞானிகள் பார்க்கும் போது ஒரு முடிவுக்கு வருகிறார்கள். தேவன் உருவாக்குகிறவர் அவர் மட்டுமே எழுத முடியும் மற்றும் ஒரு உதாரணம்.

**யோபு 9:9, & 38:31,32**

***"அவர் துருவச் சக்கர...",***

***"அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ?"***
***"இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவச்சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழிநடத்துவாயோ?"***

இந்த வார்த்தைகள் நட்சத்திரங்களைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லுகிறது. இந்த அறிவை சமீபத்தில்தான் மனுஷர்கள் மட்டும் கொஞ்சம் கொஞ்சமாக புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

நட்சத்திரத்தைப் பார்க்க பல வருஷமாக டெலஸ்கோப் (தொலைநோக்கி கண்ணாடி) பயன்படுத்துவார்கள். அந்த டெலஸ்கோப் பூமியில் இருக்கும். அது மிகப் பெரிய அளவில் இருக்கும். ஆனால் பார்வை அவ்வளவு பெரிதாக இருக்காது. ஆனால் தற்போது விண்வெளியில் அந்தரத்தில் பார்வை போய் கொண்டிருக்கிறது. **SPACE VISION** விண்வெளியில் **STATION** அமைத்து இருக்கிறார்கள். அங்கிருந்து காட்சிகள் வரும் போது ஆச்சரியமாகப் பார்த்தார்கள். நம்மை சுற்றி இருக்கிற அண்டசராசரங்கள் எவ்வளவு

வேகமாக ஓடுகிறது. இந்த காரியங்களை மனுஷர் காண்கையில்; மிகவும் ஆச்சரியப் படுகிறார்கள். ஆனால் இந்த வார்த்தைகள் 3000 வருஷங்களுக்கு முன்பு இவ்வளவு தெளிவாக எழுதியிருக்கும் போது விஞ்ஞானிகள் என்ன முடிவுக்கு போகிறார்கள்? இதை எழுதினவர் யார் ? இந்த நட்சத்திரத்தை உண்டாக்கினவர் தான் இந்த புத்தகத்தை எழுத முடியும். இந்த விதத்தில் யோபு புத்தகம் அநேக விஞ்ஞானிகள் தேவன் மேல் விசுவாசத்திற்குள் வருவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் மற்றும் ஒரு விஞ்ஞான சம்பந்தப்பட்ட சத்தியமாகும்.

## யோபு 37:3,4

**“அவர் வானத்தின் கீழெங்கும் அந்தத் தொனியையும், பூமியின் கடையாந்தரங்கள்மேல் அதின் மின்னலையும் செல்லவிடுகிறார். அதற்குப்பின்பு அவர் சத்தமாய் முழங்கி, தம்முடைய மகத்துவத்தின் சத்தத்தைக் குமுறப்பண்ணுகிறார்;”**

இந்த விஷயம் நமக்குத் தெரியும். மழை பெய்யும் போது மின்னல் முதலில் காணப்படும். பிறகு இடி சத்தம் கேட்கும். ஒலி மற்றும் ஒளி ஆகியவற்றின் வேகத்தை 100,200 வருஷங்களுக்கு முன்பு தான் கண்டு பிடித்து இருக்கிறார்கள். ஒளியின் வேகம் அதிகமாக இருப்பதால், மின்னல் சீக்கிரமாய் கண்ணுக்குத் தெரியும். ஒலியின் வேகம் குறைவாக இருப்பதால் பிற்பாடு காதுக்கு அதனுடைய சத்தம் வந்து சேரும். இரண்டும் ஒரே சமயத்தில் நடக்கிறது. இடி மின்னல் ஒரே பக்கத்தில் இருக்கும்போது அதன் வேகத்தில் வித்தியாசம் இருப்பதால் அது கண்ணுக்கும் காதுக்கும் வருவதற்கு ஒரு இடைவெளி ஏற்படுகிறது. மிகப் பெரிய விஞ்ஞான சத்தியம்.

## யோபு 28:26, & 36:27,28

**“மழைக்கு......”**

**“அவர் நீர்த்துளிகளை அணுவைப்போல ஏறப்பண்ணுகிறார்; அவைகள் மேகத்திலிருந்து மழையாய்ச் சொரிகிறது. அதை மேகங்கள் பெய்து, மனுஷர்மேல் மிகுதியாய்ப் பொழிகிறது.”**

மழை எப்படி உருவாகுகிறது? கீழேயிருந்து தண்ணீர் மேலே சென்று, மேலிருந்து தண்ணீர் கீழே விழுகிறதா? அப்படி இல்லையென்றால் ஒரு பெரிய தொட்டித் தண்ணீரை மேலே கொண்டு போய் அங்கிருந்து தூக்கி அடித்து மழை மாதிரி விழுமா? எந்த வேகத்தில் விழும்? கீழேயிருக்கிற ஜனங்களுக்கு எவ்வளவு அடிபடும்? எப்படி தண்ணீர் - துளி மாதிரி விழுகிறது? துளித்துளியாக பெய்கிறது அது என்ன முறை? அதைத்தான் வசனம் சொல்லுகிறது ஆச்சரியமான காரியம். எப்படி மழையை தேவன் உண்டாக்குகிறார்? ஒரு முறை தண்ணீர் கீழிலிருந்து மேல், மேலிருந்து கீழ் சுற்றிக்கொண்டே வரும். இதைப் பற்றி சங்கீதத்தில் நிறைய இடங்களில் வசனங்கள் உள்ளது.

## யோபு 28:5

**"பூமியின்மேல் ஆகாரம் விளையும், அதின் கீழிடங்களிலிருக்கிறவைகளோ, அக்கினியால் மாறினதுபோலிருக்கும்."**

இதுவரை மேலே வானம் பற்றினதான சத்தியங்கள் பார்த்தோம். இப்போது மனுஷன் நிற்கிற பூமி அங்கே என்ன இருக்கிறது என்பதைப் பற்றி பார்க்கலாம். காலுக்கு கீழே பூமியில் பயிர் போடுவோம். அந்த பூமியின் கீழே ஆழத்திற்கு போகும் போது அங்கு எப்படி இருக்கும்? **அது அக்கினி, ஒரு குழம்பு மாதிரி தான் இருக்கும்.** அதற்கு பெயர் லாவா **[LAVA]** குழம்பு.

இந்த எரிமலை வெடிக்கிற போதெல்லாம் லாவா குழம்பு வெளி வரும். இது கீழே இருக்கிறது. அங்கு அடுக்குகள் உள்ளது. மேலே லாவா இருக்கிறது. அது என்ன வேலை செய்கிறது அது எதற்காக இருக்கிறது? இது எல்லாம் மிகப்பெரிய அறிவு. இது யாருக்குத் தெரியும்? பூமிக்கு கீழே லாவா குழம்பு இருக்கிறது என்று எந்த புத்தகத்தில் எழுதியிருக்கிறது? இது எங்குமே எழுதப்படவில்லை. இது அப்பாற்பட்ட அறிவு. சமீபத்தில் 30, 40 வருஷம் முன்பு தான் இந்த ஒரு அறிவு வெளிப்பட்டது. மிகப்பெரிய சமுத்திரங்களைப் பற்றியும், சமுத்திரத்தில் வாழும் உயிருள்ள ஜீவன்கள் பற்றியும், எப்படிப்பட்ட அறிவு இருக்கிறது. இதற்கு பெயர் **MARINE BIOLOGISTS** பிராணி, தாவர ஆராய்ச்சிக்கலை மற்றும் கடல் சம்பந்தமான ஆராய்ச்சி.

## யோபு 38:16 – "நீ சமுத்திரத்தின் அடித்தலங்கள்மட்டும் புகுந்து ஆழத்தின் அடியில் உலாவினதுண்டோ?"

சமுத்திரத்தில் ஒரு தனி உலகம் இருக்கிறது. எப்படி ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோமோ மலைகள், குன்றுகள், நதிகள், காற்று, மரங்கள் பலவிதமான பறவைகள், மிருகங்கள் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ அதுபோல, இது ஒரு உலகம். இதேபோல ஒரு உலகம் சமுத்திரத்தில் குன்றுகள், நதிகள் மற்றும் உப்புக்கடல் மத்தியில் நல்ல தண்ணீர் ஓடும். அங்கே பலவித மிருகங்கள், பறவை மாதிரியான மீன்கள் சமுத்திரத்தில் இறக்கை வைத்துக்கொண்டு பறக்கிறது. இந்த விஷயங்கள் மிகவும் ஆச்சரியமாக உள்ளது.

இப்போது தான் ஜனங்கள் இதைக் கண்டு பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். இது ஒரு தனி விஞ்ஞானம். **[SEPARATE SCIENCE]** ஒழுங்கு இருக்கிறது. **SYSTEM [MARINE BIOLOGISTS].** இப்படி யோபு புத்தகம் இருப்பது விஞ்ஞானிகளுக்கு உறுதியாக புரிகிறது. இந்த வார்த்தைகளால் அவர்கள் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். எந்த மனுஷனும் கண்டுபிடிக்க வாய்ப்பில்லை, எழுதுகிறதற்கும் வாய்ப்பில்லை. கண்டிப்பாக ஒரு தேவன் இருக்க வேண்டும். அவர் தான் இதை எழுதியிருக்கிறார். நாம் பல கோணத்தில் பார்க்கிறோம். யோபு புத்தகம் எவ்வளவு சிறப்பான புத்தகம் என்று இன்னொரு கோணத்தில்

பார்க்கலாம். யார் யார் வேதாகமத்தை எடுத்து படிக்கிறார்களோ, எப்பொழுதெல்லாம் அவர்கள் வேதாகமத்தை எடுத்து ஆராய்கிறார்களோ, தியானம் பண்ணுகிறார்களோ அவர்களுக்குத் தான் இந்த யோபு புத்தகம் ஆச்சரியமான புத்தமாக இருக்கிறது. யோபு புத்தகத்திலிருந்து சில விலையேறப்பெற்ற சத்தியங்கள் வெளிப்படுகிறது.

## யோபு 14:14,15

**"மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்." "என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்;"...**

எப்போதும் ஒரு மிகப்பெரிய கேள்வி, மனுஷன் இறந்தப் பின்பு என்ன ஆவான்? எந்த மனிதன் மத்தியில் போய்கேட்பது? மதத்தை விட்டுவிடலாம். இது ஒரு பொதுவான கேள்வி. எல்லா மனுஷருக்கும் ஆர்வம் இருக்கும். மனுஷன் இறந்துப்போன பின் பிழைப்பானோ? திரும்பவும் உயிர் வருமா? இந்தக் கேள்விக்கு பல விநோதமான பதில்கள் வேதத்தை விட்டு வெளியே இருக்கிறது. ஆனால் வேதம் என்ன சொல்கிறது? வசனத்தில் பார்க்கலாம்.

**"எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்."**

குறிக்கப்பட்ட நாள் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நாள் வரைக்கும் காத்திருக்க வேண்டும். ஏன்? அந்த மாறுதல் எப்போது வரப்போகிறது? இந்த வசனம் முழுவதுமாக சொல்லவில்லை. ஒரு பகுதியை மாத்திரம் சொல்லுகிறது. இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமும் பார்க்கவேண்டும், இதே யோபு புத்தகத்தில்.

## யோபு 19:26,27

**"இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்து போகிறது."**

இந்த வசனம் கேள்விக்கு பதில் சொல்கிறது. மரணம் என்பதின் அர்த்தம் உயிர் போகுதல்; பின்பு அடக்கம். அப்போது என்ன நடக்கிறது? நம் தோல் மாம்சம் முழுவதும் அழியப் போகிறது. பல வருஷங்கள் கழித்து கல்லறைகளில் திறந்து பார்க்கும்போது (ஜான் விக்ளிப் கல்லறையில் அப்படிச் செய்தார்கள்) ஒன்றும் இருக்காது எலும்பு தான் இருக்கும். தோல் மாம்சம் மரித்து அடக்கமாகி கொஞ்சகாலம் சென்று, வசனம் சொல்கிறது நான் மாம்சத்தில் என்று. மாம்சம் அழியப்போகிறது, நான் திரும்பி மாம்சமாகி தேவனைப் பார்ப்பேன். பொதுவாக தேவனைப்பார்ப்பேன் என்ற விசுவாசம், ஜனங்கள் மத்தியில் பரலோகம் போனால் தான் தேவனைப்பார்க்க முடியும் என்று இருக்கிறது. பூலோகத்தில்

இருந்தால் தேவனை எப்படி பார்க்க முடியும்? அந்தக் கொள்கை அவர்களுக்கு தெரியவே தெரியாது. ஆனால் வசனம் சொல்லுகிறது. நான் மாம்சத்தில் இருந்து தேவனை நான் பார்ப்பேன். இதுதான் தேவன் கொடுக்கும் பதில். மரித்துப் போனபின்பு என்ன நம்பிக்கை **“உயிர்த்தெழுதலின் நம்பிக்கை”.**

## யோபு 9:26,27ல் – “இந்த என் தோல்...”

இந்த வார்த்தை என்ன சொல்லுகிறது? என் அடையாளம்; என் ஞாபகம்; நான் யார்? நானே பார்த்தேன்; அந்நிய கண்கள் அல்ல. வஞ்சகம் என்று சிலர் நினைக்கலாம். இது வஞ்சகம் இல்லை வாஞ்சை.
என்ன மாதிரி ஆச்சரியமான சத்தியம் மரணம் குறித்து.

## யோபு 33:22–24

**“அவன் ஆத்துமா பாதாளத்துக்கும், அவன் பிராணன் சாவுக்கும் சமீபிக்கிறது. ஆயிரத்தில் ஒருவராகிய சாமாசிபண்ணுகிற தூதனானவர் மனுஷனுக்குத் தம்முடைய நிதானத்தை அறிவிக்கும்படிக்கு, அவனுக்கு அநுசாரியாயிருந்தாரேயாகில், அவர் அவனுக்கு இரங்கி, அவன் படுகுழியில் இறங்காதபடிக்கு: நீர் அவனை இரட்சியும்; மீட்கும் பொருளை நான் கண்டுபிடித்தேன் என்பார்.”**

மரண தண்டனை மனுஷன் மேல் வந்த பின்பு, இந்த மனுஷ ஜாதியை மரணத்திலிருந்து காப்பாற்ற ஒரு மீட்பு நடக்க வேண்டும். ஒரு மீட்கும் பொருள் வேண்டும். அந்த மீட்கும் பொருள் பற்றி - இந்த வசனம் சொல்லுகிறது. ஆயிரத்தில் ஒருவராகிய ஒரு தூதனானவர் வந்து இறங்குகிறார்.

ஒரு மீட்கும் பொருள் கொடுக்க வேண்டும்; நமக்குத் தெரியும் நீதி கேட்கும்போது ஜீவனுக்கு ஜீவன்; எந்த ஜீவன் போனது? ஒரு பரிபூரணமான மாமிசீக ஜீவனுக்கு இன்னொரு பரிபூரணமான மாம்சீக ஜீவன் கொடுக்க வேண்டும். இந்த வசனம் சொல்லுகிறது **“ஆயிரத்தில் ஒருவராகிய”**, இதில் ஒரு ரகசியம் இருக்கிறது. அந்த தூதன் சாதாரன தூதனானவர் இல்லை. அவர் மிகவும் சிறப்பு வாய்ந்த தூதனானவர். ஆயிரத்தில் ஒருவராகிய என்பது எதைக் குறிக்கிறது என்றால், இஸ்ரயேல் ஜனங்களுக்கு பிரசன்னம் - மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிற சாட்சிபெட்டியின் மேலே இருந்தது. அந்த ஷெக்கினா ஒளி தான் தேவனுடைய பிரசன்னமாக இருந்தது. இஸ்ரலேருக்கு அங்கே இருக்கிற மகா பரிசுத்த ஸ்தலத்தின் அளவு முழம் கணக்கில் - அதனுடைய நீளம், அகலம், உயரம், எல்லாம் 10 முழம். இதைப் பெருக்கினால் **10x10x10=1000.** அந்த மகா பரிசுத்த ஸ்தலம் எதற்கு அடையாளமாக இருக்கிறது என்றால் பரலோகத்திற்கு அடையாளம். பூலோகத்திலே, பரலோகத்திற்கு அடையாளம் மகா பரிசுத்த ஸ்தலம். அந்த பரலோகத்தில் ஒருவராகிய பெரியவர் - தேவனுடைய ஒரே பேரான குமாரனைப் பற்றி பேசுகிறது - **“மீட்கும் பொருள் நான் கண்டு பிடித்தேன்."**

இந்த ஒரு தூதனானவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன்; இந்த யோபு புத்தகத்தில் மிகப்பெரிய போதனை கோட்பாடு சம்பந்தப்பட்ட விவரங்கள் எப்படிப்பட்ட விதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது!

## யோபு 5:19

**“ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மை தொடாது"**

இந்த வசனம் தேவனுடைய சிருஷ்டிப்பின் ஒவ்வொரு நாளிலும் 7- பிரிவுகள்; அந்த 7-ல் ஆறு இக்கட்டுகள்; 7-இல் பொல்லப்பு உனக்கு நேரிடாது என சொல்வதை பார்க்கிறோம். 7யை குறித்து விவரமாக வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் 1000 வருட அரசாட்சி. வேதத்தில் இருக்கிற கடைசி நாள்; அது தான் நியாயத்தீர்ப்பின் நாள். அது ஒரு 1000-வருஷம் கணக்காய் இருக்கும் போது, மீதி இருக்கிற ஆறு இக்கட்டுகள் கணக்கு எப்படியெனில் அது 6000, இந்த 6000- மும் இந்த ஒரு 1000-மும் சேரும்போது வருவது 7000. இந்த 7000 கணக்குத்தான் காண்பிக்கிறது, இந்த ஓய்வு நாள்; அதற்குள் நாம் இருக்கிறோம். அந்த 7-ம் சிருஷ்டிப்பின் நாளில் கணக்கு 7000 வருஷம். இந்த வசனம் மிக முக்கியம்.

நமக்கு அடுத்து மிகப் பெரிய தெய்வீக திட்டம்

## யோபு 15:15

**“இதோ, தம்முடைய பரிசுத்தவான்களையும் அவர் நம்புகிறதில்லை;”**

இது ஒரு ஆச்சரியமான வசனம். தம்முடைய பரிசுத்தவான்களை தேவன் நம்புகிறது இல்லை. ஏன் இப்படி எழுதியிருக்கிறது? தமிழ் மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட ஒரு தவறு. மற்றொரு வசனத்தை ஒப்பிடும் போது அர்த்தம் புரியும்.

## யோபு 4:18

**“கேளும், அவர் தம்முடைய பணிவிடைக்காரரிடத்தில் நம்பிக்கை வைப்பதில்லை;”**

அவர் பணிவிடைக்காரர் மேல் நம்பிக்கை வைக்கிறது இல்லை. யார் இந்த பணிவிடைக்காரர்கள்? பரிசுத்தவான்களுக்கு பதிலாக பரிசுத்தமுள்ளவர்கள்; அவர்கள் தேவதூதர்கள். தேவனுடைய தூதர்கள் மேல் அவர் முழுநம்பிக்கை வைக்கிறது இல்லை. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் மீறின சில தூதர்கள் பாவத்தில் விழுந்திட்டார்கள். இந்த வகையில் அவர்கள் விழுந்து போன தூதர்கள். இந்த பெரிய சத்தியம் பரலோகத்தைப் பற்றி, பரலோக ஜீவிகள் பற்றி, பரலோகத்தின் தூதர்களில் சிலர் விழுந்து போன தூதர்கள் பாவத்தில் விழுந்தார்கள் என்பதைப் பற்றிச் சொல்கிறது. (2பேதுரு–2:4ல் “பாவஞ்செய்த தூதர்களை...”)

## யோபு 10:8–12

**“உம்முடைய கரங்கள் என்னையும் எனக்குரிய எல்லாவற்றையும் உருவாக்கிப்.... களிமண்போல என்னை உருவாக்கினீர்...... நீர் என்னைப் பால்போல் வார்த்து, தயிர்போல்**

உறையப்பண்ணினீர் அல்லவோ? தோலையும் சதையையும் எனக்குத் தரித்து, எலும்புகளாலும் நரம்புகளாலும் என்னை இசைத்தீர். எனக்கு ஜீவனைத் தந்ததும் அல்லாமல், தயவையும் எனக்குப் பாராட்டினீர்;.."

இந்த வசனங்கள் தேவன் சிருஷ்டிப்பின் முறையில் எப்படி மனுஷனை உண்டாக்கினார் என்பதைப் பற்றிச் சொல்கிறது. பேர் கிறிஸ்தவ சபைகளில் வீடியோக்களில் பார்ப்போம். ஆதாமின் படைப்பு எப்படி காண்பிப்பார்கள்? மனுஷனை மண்ணில் உண்டாக்கினார். மண் சின்ன குன்று மாதிரி இருக்கும். அந்த மண்ணிலிருந்து அசைந்து ஒரு மனுஷன் ஏறுவார். அப்படியே உட்காருவார். மண் கொட்டிக் கொண்டே இருக்கும். ஆனால் இது அப்படி இல்லை.

வசனம் மிக தெளிவாக சொல்லுகிறது தேவன் எப்படி மனுஷனை உண்டாக்கினார் என்று; படிப்படியாக. பால் போல் வார்த்து தயிர் போல் உறைய பண்ணுகிற விஷயம் காண்பிக்கிறது, மனுஷனின் எலும்புகள் கால்சியத்திலிருந்து உண்டாக்கப்பட்டிருக்கிறது. எலும்புகளுக்கு ஒரு வடிவம் இருக்கிறது. வடிவம் வர வேண்டும் என்றால் அது குறிப்பிட்ட விதத்தில் இருக்க வேண்டும். இதை தேவன் எப்படிச் செய்கிறார்? கட்டிடம் கட்டுமுன் அஸ்திபாரம், பிறகு தூண் கட்ட வேண்டும். அதே போல் எலும்பு மேல் சதை, நரம்பு மற்ற எல்லா விஷயமும் தேவை. தேவன் ஒரு குறிப்பு கொடுக்கிறார். **தேவன் மனுஷனை எப்படி படைத்தார்** என்று ஆதாமை படைத்த விவரம் தான் இங்கே பார்க்கிறோம்.

ஆவிக்குரிய அடுத்த சத்தியம் நியாயத்தீர்ப்பு தேவன் தீமையை அனுமதித்த பின் பெரிய வேதனை, துன்பம் உலகத்தில் நடக்கிறது. இங்கே இருக்கும் பாவிகள் **(துன்மார்க்கன்)** மேல் தேவன் நியாயத்தீர்ப்பு பண்ணப் போகிறார். தேவனுடைய பார்வையில் நியாயத்தீர்ப்பு பற்றி சில ஆச்சரியமான விஷயங்களை யோபு புத்தகம் சொல்லுகிறது.

## யோபு 21:7–16 – "துன்மார்க்கர் ஜீவித்து...."

துன்மார்க்கர் சந்தோஷமான வாழ்க்கை வாழ்கிறார்கள். எல்லாவிதமான ஆசீர்வாதம் அவர்களுக்கு இருக்கிறது.

இன்னொரு பார்வை-

' **யோபு 27:13–19 – "பொல்லாத மனுஷனுக்கு"....** *"அவன் ஐசுவரியவானாய்த் தூங்கிக் கிடந்து ஒன்றும் பறிகொடாதே போனாலும், அவன் தன் கண்களைத் திறக்கும் போது ஒன்றுமில்லாதிருக்கும்."* மிகப் பெரிய ஐசுவரியவான்கள் மிகப்பெரிய சொத்துக்களோடு இறந்திருக்கிறார்கள். ராஜ்யத்தின் காலத்தில் உயிர்த்தெழுந்து வரும் போது பேர் இருக்கும்; புகழ் இருக்காது. சொத்து இருக்காது. தேவன் கொஞ்சக் காலம் அனுமதி கொடுத்தார்; எல்லா சொத்தும் தேவனுடையது.

**யோபு 20:15–19– ல் "......அவன் விழுங்கின ஆஸ்தியை கக்குவான்"** தேவன் அதை அவன் வயிற்றிலிருந்து வெளியே தள்ளிவிடுவார். அநியாயமான ஆஸ்தியை எடுத்து கக்குவான். இவைகள் நியாயத்தீர்ப்பு சம்பந்தப்பட்ட வார்த்தைகள். இப்போது இந்த

வார்த்தைகளை ஆராய்ச்சி செய்யவில்லை, நியாயத்தீர்ப்பு சம்பந்தபட்ட சத்தியங்கள் யோபு புத்தகத்தில் இருக்கிறது என்று.

**யோபு 20:27—29— "வானங்கள் அவன் அக்கிரமத்தை வெளிப்படுத்தி, பூமி அவனுக்கு விரோதமாக எழும்பும்...."** நியாயத்தீர்ப்பின் நாளில் நாம் இருக்கிறோம். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் நடந்து கொண்டு இருக்கிறது. சீக்கிரமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பு உலகத்திற்கு வெளிப்படும். உலகத்தில் வெளிப்படும்போது இந்த வசனத்தின்படி பெரிய நியாயத்தீர்ப்பு வெளிப்படும். எத்தனை சந்ததிகள் இறந்திருக்கிறார்கள். எத்தனை சந்ததிகள் எழுந்து வருவார்கள். எவ்வளவு பெரிய நியாயத்தீர்ப்பு உலகத்தில் வெளிப்படும். உலகத்தில் இருக்கிற வேத மாணவர்களில் யார் யார் பைபிள் படித்துக் கொண்டிருக்கிறார்கள்? யோபு புத்தகம் படிக்கும்போது அவர்களுக்கு மிகவும் ஆச்சரியம். யோபு புத்தகம் சத்தியத்தின் சுரங்கமாயிருக்கிறது. மிகப் பெரிய சத்தியம் யோபு புத்தகத்தில் உள்ளது. தேவன் எப்படிப்பட்ட விதத்தில் இதை எழுதியிருக்கிறார்? எதற்காக உண்டு பண்ணினார்? எவ்வளவு இடத்தில் யோபு புத்தகம் குறித்து வாக்குவாதம் போய் கொண்டு இருக்கிறது. நிறைய விமர்சனங்கள் போய்க் கொண்டிருக்கிறது.

மிகப் பெரிய கல்விமான்கள் வித்துவான்கள் இந்த புத்தகத்தைப் பற்றி அநேக கருத்துகளை வெளியிட்டு இருக்கிறார்கள். யோபு புத்தகம் ஒரு கவிதை, கதை, ஒரு கட்டுக் கதை, உவமை மற்றும் ஒரு நீதிக்கதை என்று சிலர் சொல்கிறார்கள். சிலர் யோபு உண்மையில் இருந்தவர் இல்லை. யோபு கற்பனையான மனுஷர் கதாபாத்திரம். யோபு இருந்த இடம் "ஊத்ஸ்" பற்றி நிறைய வாக்கு வாதம் நடக்கிறது, இந்த புத்தகம் யார் எழுதினது என்று. எந்தக் காலக் கட்டத்தில் எப்பொழுது எழுதப்பட்டது? என்று. பொதுவாக உரையாளர், வர்ணிப்பவர் மத்தியில் நடக்கிற விஷயம் இது.

இந்த வாதங்களையும் விவாதங்களையும் படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கு, மற்றவர்கள் மத்தியில் பூல் மற்றும் பார்ன்ஸ் மற்றும் கில் மற்றும் ஸ்கோஃபீல்ட் மற்றும் மத்தேயு ஹென்றி ஆகியோரின் விரிவுரைகளை அவர்கள் பார்த்துக்கொள்ளலாம்.

இன்னும் விரிவாக தெரியவேண்டும் என்றால் உங்கள் கையில் இருக்கும் கைபேசியில் இருக்கும் **MY SWORD BIBLE APP** யை கொண்டு அநேகருடைய **Commentaries DOWNLOAD** செய்து பார்க்கலாம். வித்தியாசமான கருத்துகள் யோபு மேல் வெளிப்படுகிறது.

வேதத்தில் உள்ள சத்தியத்தின் அடிப்படையில் யோபு உண்மையாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மனுஷன். வேதத்தில் இந்த விஷயம் மிகவும் தெளிவாக இருக்கிறது. இவ்விஷயம் பற்றி பழைய ஏற்பாட்டில் ஒரு வசனம், புதிய ஏற்பாட்டில் ஒரு வசனம் பார்க்கலாம்.

**எசே 14:20**

**"நோவாவும் ,தானியேலும் யோபும் அதின் நடுவில் இருந்தாலும் அவர்கள் தங்கள்**

நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல் குமாரனையாகிலும் குமாரத்தியையாகிலும் தப்புவிக்க மாட்டார்கள் என்று ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்"

தேவன் பேசும் போது 3 பேர் பற்றி பேசுகிறார் நீதிமான் என்று....

**நோவா, தானியேல், யோபு**

நீங்கள் உன்னிப்பாய் கவனித்து இருந்தால் யோபு பற்றி ஒரு விஷயம் புரிந்து கொள்ளலாம். இந்த வசனத்தின்படி தானியேல், நோவா முற்பிதாக்கள் என்றால், யோபு ஒரு முற்பிதா. இதில் **மிகப் பெரிய சத்தியம் யோபு ஒரு முற்பிதா என்று அறிந்து கொள்ளலாம்.**

## யாக் 5:11

"இதோ பொறுமையாயிருக்கிறவர்களை பாக்கியவான்களென்கிறோமே. யோபின் பொறுமையைக்குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள்"

யாக்கோபு, யோபுவை புது சிருஷ்டியின் ஒரு தூண்; ஒரு அஸ்திபாரம் என்கிறார். அவர் யோபுவின் குணலட்சணங்கள் குறித்து சாட்சி கொடுக்கிறார்.

சகோ.ரஸல் -**BIBLICAL COMMENTS**-ல் விசேஷமாய் யோபு முதல் வசனம் **யோபு1:1 – "ஊத்ஸ் தேசத்திலே"**... குறித்து சொல்லும்போது யோபு முற்பிதாக்கள் யுகத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்கிறார். முதலாம் உலகத்தில் ஜலப்பிரளயம் வந்தது. ஜலப்பிரளயத்திற்குப்பின் யூதயுகம் துவங்கும் வரை உள்ள இடைப்பட்ட காலக்கட்டம்தான் முற்பிதாக்கள் யுகம். சகோ.ரசல் சொல்கிறார் யோபு முற்பிதாக்கள் யுகத்தில் வாழ்ந்து இருக்க வேண்டும். ஏன்? எப்படி? எந்த அடிப்படையில் என்று ஒன்றும் சொல்லவில்லை. அவர் கருத்து மட்டுமே சொல்லுகிறார். உறுதியாக சொல்லுகிறார்கள். அவர் மோசேக்கு முன்னாடி வாழ்ந்து இருக்க வேண்டும். இவர் ஆபிரகாம் மெல்கிசேதேக் உடன் வாழ்ந்திருக்க வேண்டும். இது **EBC - BIBLICAL COMMENTS** யோபு 1:1- ல் வாசிக்கிறோம். இதை நீங்கள் ஆராயலாம்.

யோபு புத்தகம் ஆதியாகமத்திற்கு முன் எழுதப்பட்டது. ஆதியாகமத்திற்கு வெகு நாள் முன்பு இல்லை. ஆனால் ஆதியாகமத்திற்கு முன் எழுதப்பட்டது. யோபு முற்பிதாக்கள் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். அதாவது, யூத யுகத்துக்கு முன்பு. இங்கு 3 சாட்சியங்கள் உண்மையென்று உறுதி கூறுகிறது.

## சாட்சி – 1

யோபு வாழ்ந்தது முற்பிதாக்கள் யுகத்தில். யோபு புத்தகம் மோசேக்கு முன்பு எழுதப்பட்டது. ஆம் யோபு புத்தகம் முழுவதும் நியாயப்பிராணம் பற்றி ஒன்றும் பேசப்படவில்லை. ஜலப்பிரளயத்திற்குப் பின் சில பலிகள் செலுத்தியிருக்கிறார். ஜலப்பிரளயத்திற்குமுன் ஆபேல் பலி செலுத்தினார். பலிகள் எல்லாம் வழக்கமாக இருந்தது. நியாயப்பிரமாணத்தின்படி அதில் இருக்கிற பலிகள் இந்த புத்தகத்தில் எதுவும்

இல்லை. காரணம் இந்த புத்தகம் நியாயப்பிரமாணம் கொடுப்பதற்குமுன் எழுதப்பட்டது. யோபு புத்தகம் மோசேக்கு முன்பே எழுதப்பட்டது என்பதற்கு இது ஒரு சாட்சி. யோபு புத்கத்தில் நியாயப்பிரமாணம் பற்றி ஒரு வார்த்தைகூட எழுதப்படவில்லை.

### சாட்சி – 2

இரண்டாவதாக பார்க்கும்போது, யோபு புத்தகம் முழுவதும் இஸ்ரயேல் தேசம் பற்றி எங்கும் எழுதப்படவில்லை. இதின் அர்த்தம் யாக்கோபுக்கு முன்பு இப்புத்தகம் எழுதியிருக்க வேண்டும்.

### சாட்சி – 3

யோபுவின் வயது, யோபு 1 மற்றும் 42:16 ஆகிய வசனங்களிலிலிருந்து கணக்கிட்டால், அவருடைய வயது 200 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கும், இது மீண்டும் அவர் மோசேயின் தலைமுறையைச் சேர்ந்தவர் அல்ல, மாறாக ஆபிரகாமின் தந்தை தேராகுவின் தலைமுறையையும் அதற்கு முந்தைய தலைமுறையையும் சேர்ந்தவர் என்பதைக் குறிக்கிறது. (ஆதியாகமம் 11: 18 – 25) பேலேகு- 239 வருடம் / ரெகூ - 239 வருடம் / செரூகு - 230 வருடம் / நாகோர் - 148 வருடம் / தேராகு - 205 வருடம் (வ .32).

### யோபு 42:16

“இதற்குப் பின்பு யோபு நூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான்.”

இந்த தீமையான அனுபவத்திற்கு பின் யோபு 140 வருஷம் வாழ்ந்தார் என்று, இந்த வசனம் தெளிவாகச் சொல்லுகிறது.

இதில் ஒரு கேள்வி, யோபு 140 வருஷம் வாழ்ந்தார் என்றால் இந்த தீமையான அனுபவத்திற்கு முன், தீமை ஆரம்பிக்கும்போது அவரது வயது என்ன? தீமையின் அனுபவம் அவருக்கு எத்தனை வருடம் இருந்தது? இந்த 2 விஷயங்கள் நாம் கண்டு பிடிக்க வேண்டும். முதலாம் அதிகாரத்தில் தீமை ஆரம்பிக்கும் வசனங்களுக்கு முன் யோபு, அவரது குடும்பம் மற்றும் அவரின் 7 குமாரர்களின் திருமணங்கள்(தயவுசெய்து வச.13 இல் கவனியுங்கள் - *“தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்து, திராட்சரசம் குடிக்கிறபோது”* - அதாவது ஒரு தனி வீடு மற்றும் அநேகமாக திருமணமானவர் என்று பொருள்) பற்றி குறிப்பிடப்பட்டிருப்பதை பார்க்கிறோம். அதற்கு பின்பு தான் தீமையான அனுபவம் ஆரம்பித்தது.

இந்தக் காலக்கட்டத்தில் முற்பிதாக்களின் திருமணங்கள் எந்த வயதில் நடந்தது?

ஆதியாகமம் 11 ஆம் அதிகாரத்தில் ஜலப்பிரளயத்திற்குப் பிந்தைய தலைமுறையினரின் வம்சாவளியில் இருந்து, திருமண வயது 30- 35 ஆண்டுகள் என்பதைக் காண்கிறோம்.

**யோபு–1: 4 ல் "அவன் குமாரர்,..."** அவருடைய 7 குமாரர்களுக்கும் திருமணமாகி தன் தன் வீட்டில் இருந்து விருந்து வைத்தார்கள். யோபுவுக்கு 30லிருந்து 35 வயதில் திருமணமாகி இருந்தால், அவரின் 7 குமாரர்களுக்கும் இடை இடையே 3 குமாரத்திகளும் அவருக்கு 40 அல்லது 45 வயதிற்குள் பிறந்திருப்பார்கள். முதல் குமாரனுக்கு 35 வயதில் திருமணம் ஆகியிருந்தால் யோபுவின் வயது 65-70 இருக்கும். 65 வயதில் முதல் குமாரன் திருமணம். மீதி குமாரர்களின் திருமணம் முடிய 10 வருடங்கள் ஆகியிருக்கலாம். அப்படியென்றால், ஏறக்குறைய யோபுவிற்கு 72 அல்லது 80 வயதில் எல்லா குமாரர்களின் திருமணங்கள் முடிந்திருக்கும்.

ஆகவே, யோபுவின் வாழ்க்கையில் இந்த அனுபவத்தின்(தீமையான அனுபவம் யோபுவிற்கு ஏற்படும் போது) காலக்கட்டத்தில் அவரது வயது 75-80 வயது வரை இருந்திருக்கக்கூடும். இந்த அனுபவம் எவ்வளவு காலம் நீடித்தது என்பது நமக்குத் தெரியாது, எனவே அவரது ஆயுட்காலம் 80 + 140 = 220 ஆண்டுகள் என்று நியாயமான முறையில் கணக்கிட முடியும்! இது நிச்சயமாக இவரை ஜலப்பிரளயத்திற்குப் பிந்தைய உலகமான – முற்பிதாக்கள் யுகத்தின் ஆரம்ப தலைமுறைகளைச் சார்ந்தவராக்குகிறது. இதனால் யோபு பிதாக்கள் யுகத்தில் வாழ்ந்து இருக்க வேண்டும் என்று நம்புகிறோம்.

ஆகவே இது சந்தேகத்திற்கு இடமின்றி யோபுவின் புஸ்தகம் தான் – தேவனுடைய முதல் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் "எழுதப்பட்ட" வார்த்தை என்றாக்குகிறது!

**இது பரிசுத்த எழுத்துகளிலேயே முதல் எழுதினதாகும்!**

இந்த புஸ்தகத்தை, நியாயப்பிரமாணத்திற்கும் ஆதியாகமம் புஸ்தகத்திற்கும் முன்கூட்டியே கொடுக்கும் தெய்வீக நோக்கத்திற்கு இது நம்மை கொண்டுச் செல்கிறது!

## பாகம் – 2

யோபு பிதாக்கள் யுகத்தில்தான் வாழ்ந்தார் என்ற சாட்சியங்களை நாம் தொடருகையில், சிகாகோ வேத மாணவர்களிடமிருந்து ஒரு கேள்வி எழுந்தது, யோபு எந்தக் காலத்தில் வாழ்ந்தார் என்று. சகோ.ரசல் கொடுத்த விளக்கக் கருத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் வாழ்ந்தது யூத யுகம் என்று பைபிளில் தேடி அவர்கள் ஒரு யோபுவைக் கண்டு பிடிக்கிறார்கள்; பைபிளில் ஒரு எலிப்பாஸை கண்டு பிடிக்கிறார்கள்.

ஆனால் சகோ.ரசல் அவர்களின் கருத்து மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. யோபு பிதாக்கள் யுகத்தில் ஆபிரகாம் மற்றும் மெல்கிசேதக் உடன் வாழ்ந்திருக்க வேண்டும் என்று. ஆனால் சிகாகோ வேதமாணவர்களின் கருத்து முற்றிலும் வேறானது.

இதைகுறித்த இவர்களின் ஆலோசனை என்னவென்றால் யோபு, யாக்கோபின் பேரன். யாக்கோபு மற்றும் அவரின் குமாரர்கள் எல்லோரும் மரித்த பின் யோபு வாழ்ந்திருக்க வேண்டும் என்பதாகும். சிகாகோ வேதமாணவர்களின் **Web-site** - ல் உள்ள அவர்களது கருத்து பதிவிடப்பட்டுள்ளது. அதாவது,

### ஆதியாகமம் 46:13

"இசக்காருடைய குமாரர் தோலா, பூவா, யோபு, சிம்ரோன் என்பவர்கள்."

யாக்கோபின் குமாரன் இசக்கார்; **இசக்காரின் குமாரன் யோபு**. இந்த யோபு தான், யோபு புத்தகத்தில் வரும் யோபு என்று சிகாகோ வேதமாணவர்களின் **Web-site** -ல் உள்ளது. மேலும்,

### 1 நாளாகமம் 1:35

"ஏசாவின் குமாரர், எலீப்பாஸ், ரெகுவேல், எயூஷ், யாலாம், கோராகு என்பவர்கள்."

யாக்கோபின் சகோதரரான ஏசாவின் குமாரன்தான் எலிப்பாஸ் என்றும் குறிப்பிடுகிறார்கள். இந்த விஷயத்திற்கு ஆதாரமாக யோபு புத்தகத்தில் ஒரு வசனம் மேற்கோள்காட்டுகிறார்கள். அது,

### யோபு 15:9,10

"நாங்கள் அறியாத எந்தக் காரியத்தை நீர் அறிந்திருக்கிறீர்? எங்களுக்கு விளங்காத எந்தக் காரியமாவது உமக்கு விளங்கியிருக்கிறதோ? உம்முடைய தகப்பனைப்பார்க்கிலும் பெரிய வயதுள்ள நரைத்தோரும் விருத்தாப்பியரும் எங்களுக்குள் இருக்கிறார்களே."

எலிப்பாஸ் யோபுவிடம் சொல்லும் போது, உமது தந்தையைவிட வயது முதிந்தவர்கள் (விருத்தாப்பியர்)எங்கள் நடுவே இருக்கிறார்கள் என்கிறார். யோபுவின் அப்பாவினுடைய வயதை உடையவர் ஏசாவின் குமாரனாகிய எலிப்பாஸ். ஏனென்றால் யோபு ஏசாவின் சகோதரனாகிய யாக்கோபின் பேரன்.

எனவே இவர்கள்தான் யோபு, எலிப்பாஸ் என்று குறிப்பிடுகிறார்கள். எனவே இவர்கள் யோபு யூத யுகத்தில் இருந்ததாக தெரிவிக்கிறார்கள். இன்னொரு **Web-site** -ல் சகோ.ரசல் கொடுத்த கருத்து ஏற்று கொள்ள முடியாது என்ற காரணத்தை மட்டும் கொடுத்துள்ளனர். நாம் சகோ.ரசல் கொடுத்த கருத்தை யோசிக்க வேண்டும்.

யோபு புத்தகம் முற்பிதாக்கள் காலத்தில் எழுதி இருக்க வேண்டும். இது தான் வேதத்தில் எழுதப்பட்ட முதல் புத்தகம். ஆதாரங்கள் காரணங்களையெல்லாம் போன பாகத்தில் உறுதியாக பார்த்தோம். மேலும் எப்படி பதில் கொடுப்பது? எப்படி புரிந்து கொள்வது? யோபு பிதாக்கள் யுகத்தில் வாழ்ந்த மனுஷர் என்று. யோபு புத்தகத்தில் தேவன் குறித்த வார்த்தை வருகிறது. யோபு– 11:7, 13:3, 23:16 வசனங்களில் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. சர்வ வல்லவர் என்ற வார்த்தை எல்ஷடாய். எபிரேயரில் எல்ஷடாய் என்ற பெயரில் தேவன் ஆரம்பத்தில் மோசேக்கு முன்பு யோபு புத்தகத்தில் வெளிப்பட்டார். தேவன் பற்றி அதிகமாய் மோசேக்குத் தான் வெளிப்படுத்தினார். இப்போது இருக்கிற பெயர் இதற்கு முன் எல்ஷடாய் சர்வ வல்லவர் என்பது யோபு புத்தகம் எழுதப்பட்ட காலகட்டம், உண்மையாய் யோபு எப்போது வாழ்ந்தார் என்ற கேள்விக்கு பதில் கிடைக்க வேண்டும். யோபு பிதாக்கள் யுகத்தில் வாழ்ந்தார் என்று சகோ.ரஸல் சொன்னக் கருத்துகளை கவனிக்க வேண்டும்.

பிதாக்கள் என்று சொல்லும் போது யார் யார் பிதாக்களாக இருந்தார்கள்?

**நோவா ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு.**

யோபுவும் பிதாவாக இருந்தால், இந்த நால்வரின் மத்தியில் எங்கே யோபுவை வைக்க வேண்டும். சகோ.ரஸல் சொல்லும் விதமாக ஆபிரகாம், மெல்கிசேதேக் காலக்கட்டத்தில் வாழ்ந்தவர் என்று சொன்னால்? யோபுவை எங்கு வைக்க வேண்டும். தேவன் சாத்தானிடம் பேசும்போது அவர் போல பூமியில் யாருமே இல்லை. அவர் மாத்திரம் சன்மார்க்கர் என்கிறார். இவ்விஷயம் வரவேண்டுமானால் இதை எப்படி நிரூபிப்பது? இந்தக் காரியத்தை சிந்திக்கும்போது இதற்கு பதில் காலக் கணக்கில் கிடைக்கிறது.

**BIBLE CHRONOLOGY**- இதில் 2வது பாகம் ஜலப்பிரளயத்திருந்து வாக்குத்தத்தம் வரை. இந்த வேதாகம காலக்கணக்கில் 427 வருஷங்களின் பகுதியில் சத்தியம் வெளிப்படுகிறது. ஜலப்பிரளயம் ஆரம்பிக்கும் போது நோவாவின் வயது 600 வருஷம் 2வது மாதம் 17-ம் தேதி.

## ஆதியாகமம் 7:11

**“நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன.”**

இந்த 427 வருட காலக்கணக்கு, இது ஆபிரகாம் சம்பந்தப்பட்ட வாக்குத்தத்தம். எப்போது அவர் இதை பெற்றுக்கொள்ளுகிறார்? ஆதியாகமம் 12:1– 4 ல் “கர்த்தர் ஆபிராமை

நோக்கி....” --- ஆபிராம் ஆரானை விட்டுப் புறப்பட்டபோது எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான். ஆபிராமுக்கு 75 வயது. தேவனுக்கு கீழ்ப்படிந்து தேசத்தை விட்டு புறப்பட்டுப் போனார்கள். அப்போது தான் அவர் வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொண்டார்.

இந்த காலக்கணக்கின் 2 பாகத்தில் - 2 முடிவுகள் குறிக்கிறது. ஒன்று நோவாவின் 600 வயதில் ஜலப்பிரளயம் வந்தது. இரண்டாவது காலக்கணக்கில் 2-ம் பாகத்தின் முடிவு, அது தான் வாக்குத்தத்தின் ஆரம்பம். வாக்குத்தத்தத்தில் ஆபிரகாமுக்கு வயது -75. மேலும்,

**ஆதியாகமம் 9:28,29**

**“ஜலப்பிரளயத்துக்குப்பின்பு நோவா முந்நூற்று ஐம்பது வருஷம் உயிரோடிருந்தான். நோவாவின் நாட்களெல்லாம் தொளாயிரத்து ஐம்பது வருஷம்; அவன் மரித்தான்.”**

இங்கு முதலாம் முற்பிதா நோவா ஜலப்பிரளயத்திற்கு பின் 350 வருடங்கள் உயிரோடிருந்து 950வது வயதில் மரித்தார். இது காலக்கணக்கின் 2ம் பாகத்தில்(427 வருடங்களுக்குள்) நடக்கிறது. அப்படியென்றால் 2ம் பாகமாகிய 427 வருட கணக்கில் நோவாவின் மரணத்திற்கு பின் **(427 - 350 = 77) 77** வருடங்கள் செல்கிறது.

மேலும் காலக்கணக்கின் 2ம் பாகத்தின் முடிவில் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் கொடுக்கும்போது அவருக்கு 75 வயது என வசனம் குறிப்பிடுகிறது. அப்படியென்றால் இரண்டாவது முற்பிதாவான ஆபிரகாமின் பிறந்த வருடத்தை காணும்போது அது 427 வருடத்திலிருந்து 75 வருடத்திற்கு முன், அதாவது நோவா மரித்தப் பின் **(427 - 350 = 77) 2** வருடங்கள் கழித்து ஆபிரகாம் பிறக்கிறார்.

பின் வளர வேண்டும்; தேவனைக் கண்டு பிடிக்க வேண்டும்; ஆபிராமுடன் பேசவேண்டும். ஆபிராமின் முன் வாக்குத்தத்தம் வைக்க வேண்டும்; இந்த விஷயங்கள் நடந்த பின் ஆபிராம் தேவனிடம் கீழ் படிந்து அவருடைய வாக்குத்தத்தத்தை கைக்கொள்ளுகிறார். இங்கு தான்(நோவாவிற்கு பின் ஆபிரகாம்) பிதாக்கள் வாழ்க்கைக் கணக்கு ஆரம்பிக்கிறது. இதற்கிடையில் யோபுவை குறித்து கர்த்தர் சொன்ன வார்த்தையைதான் பார்க்கிறோம்,

**யோபு 1:8**

**“கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.”**

இங்கு கர்த்தர் யோபுவை போல சன்மார்க்கன் பூமியில் ஒருவனும் இல்லை என்கிறார். அப்படியென்றால் இது யோபு முற்பிதாக்கள் யுகத்தில்(நோவா மரணத்திற்கு பின் - ஆபிரகாம் அழைக்கப்படுவதற்கு முன்) வாழ்ந்திருப்பார் என்ற ஆராய்ச்சிக்கு நம்மை கொண்டுவருகிறது.

தொடர்ந்து யோபு சோதனை அனுபவத்தின் போது எவ்வளவு வயது இருந்திருக்க வேண்டும் என்ற ஒரு கணக்கை இதற்கு முன் பார்த்தோம். மீண்டும் நினைவுகூரலாம்....யோபுவின் வயது 75-80 இருந்திருக்கலாம் என்று பார்த்தோம்.

- எனவே ஜலப்பிரளயத்திலிருந்து வாக்குத்தத்தம் வரைக்கும் 427 வருஷம். இந்த காலகட்டத்தில் 350 வருடம் கழித்து முதலாம் முற்பிதா மரிக்கிறார், அவர் நோவா.

- இரண்டாம் பிதா ஆபிரகாம் அந்த ஸ்தானத்திற்கு வருவதற்கு (350+77=427) 77 வருடங்கள் ஆகிறது.

அந்த 77 வருட இடைவெளியில் யோபு வாழ்ந்திருக்க வேண்டும்.

**ஆம் அந்த 77 வருட இடையில் யோபு வருகிறார்.**

நாங்கள் ஏதோ மாயாஜாலம் மந்திரவித்தை செய்து இந்த கணக்கை காண்பிக்கவில்லை. தீமை அனுபவத்திற்கு பின் யோபு 140 வருஷம் வாழ்ந்திருக்கிறார். சோதனை வருஷத்திற்கு முன் 75 லிருந்து 80 வருடம் வாழ்ந்திருக்கிறார்.

எனவே, இந்த 77 வருட இடைவெளியில் அல்லது அதற்கு முன்போ(அதாவது நோவா மரிப்பதற்கு முன்போ) யோபு பிறந்திருக்கலாம். பிறகு குறிப்பிட்ட காலத்திற்கு பின் தேவனுடைய விசுவாசத்திற்குள் வந்திருக்க வேண்டும். எப்படி ஆபிரகாம் வந்தாரோ அப்படி. அவர் அவிசுவாசிகள் இருக்கிற குடும்பத்திற்குள்ளிருந்து வந்திருக்க வேண்டும். ஒரு வேளை ஆராய்ச்சி செய்தால் தெரியலாம், யோபு எப்படி விசுவாசத்திற்குள் வந்திருக்க வேண்டும் என்று.

இந்த யோபு பற்றித் தான் தேவன் சாத்தனிடம் பேசியிருக்கிறார். நோவா மரித்துப் போய் விட்டார். ஆபிராம், அவிசுவாசிகள் மத்தியிலிருந்து இன்னும் தேவனுடைய விசுவாசத்திற்குள் வரவில்லை. பூமியில் யோபு மட்டும் இருக்கிறார். எனவே தெளிவாக இசைவாக இருக்கிறது யோபு வாழ்ந்தது.

**நோவாவின் மரணத்திற்குபின் ஆபிராம் தேர்ந்தெடுக்கபடுவதற்கு முன் இந்த சோதனை அனுபவங்கள் நடந்திருக்கும்.**

தேவன் கொடுத்த கிருபையிலே வேதாகம காலக் கணக்கு வழியாக இந்த காரியங்களை கண்டுபிடித்தோம். சிக்காகோ வேத மாணவர்களிடம் இந்த கேள்வி வெளிப்பட்டதால் நம்முடைய பதில் வெளிப்பட்டது. யோபு உண்மையாக வாழ்ந்தார் என்று வெளிப்பட்டது. யோபு புத்தகம் தேவனால் முதல் முதலாக எழுதப்பட்ட புத்தகம். முதலில் வெளிப்பட்ட புத்தகம். நம் கையில் இருக்கும் வேதாகமத்தில் 5 ஆகமங்கள் தான் முதலில் இருக்கிறது. யோபு புத்தகம் முதலில் வரவில்லை. வரும் இடம் நமக்குத் தெரியும்.

யோபு புத்தகம் ஏன் முதலில் வரவில்லை? 5 ஆகமங்கள் ஏன் முதலில் வெளிப்பட வேண்டும்? என்ன காரணம்? அநேகமாக நாம் படித்த நமது ஆதார வசன பகுதியில் பதிலை காணலாம்.

### யோபு 31:35

**"ஆ, என் வழக்கைக் கேட்கிறவன் ஒருவன் இருந்தால் நலமாயிருக்கும்; இதோ, சர்வவல்லவர் எனக்கு உத்தரவு அருளிச்செய்யவும், என் எதிராளி தன் வழக்கை எழுதிக்கொடுக்கவும் எனக்கு விருப்பமுண்டு."**

இந்த வசனம் எழுதும் போது யோபு மிகவும் வேதனையில், வலியில், மனவருத்தத்தில் இருந்ததால், அந்த நிலையில் சில விஷயங்கள் சொல்லுகிறார். இங்கே யோபுவின் வேண்டுகோளை கவனியுங்கள்-

**"ஆ, என் வழக்கை கேட்கிறவன் ஒருவன் இருந்தால் நலமாயிருக்கும்."** அவர் மனதில் சர்வவல்லமையுள்ள தேவன் உள்ளார். அவர் மனதில் நிறைய கேள்விகள் இருக்கிறது. அந்த கேள்விக்கு சர்வவல்லவர் பதில் கொடுப்பார்; அவர் அனுபவிக்கிற வலிக்கு அது ஆறுதலாக இருக்கும். எதிராளி எனக்கு ஒரு புத்தகத்தை எழுதி கொடுத்தால் நலமாயிருக்கும் என்கிறார்.

**யார் இந்த எதிராளி?**

எதிராளி என்றால் நாம் நினைப்பது போல் எதிராளி அல்ல.

இங்கே பயன்படுத்தப்படும் எபிரேய வார்த்தை **H 7379** - "ரீப்" என்பது எதிரி என்று அர்த்தமல்ல... மாறாக உங்களிடம் **"சர்ச்சை", "சண்டை"** உள்ள ஒருவர்.

இந்த எதிராளி ஒரு புத்தகத்தை எழுதிக் கொடுக்க வேண்டும் என்கிறார். இந்த கஷ்டமான சூழலில் அவர் விரும்புகிறவர் அவரைக் கேட்கவேண்டும்; சர்வவல்லவர் என் மனதில் உள்ள கேள்விகளைக் கேட்டு பதில் கொடுக்க வேண்டும். யோபு மன வேதனை அடைந்து, ஏன் தேவன் என்னை எதிர்த்து நடக்கிறார்? தேவனே - அவரே ஒரு புத்தகத்தை எழுதி எனக்குக் காரணம் (அ) பதில் கொடுத்தால் நலமாயிருக்கும். ஏன் இப்படிப்பட்ட சோதனைகள் நடக்க வேண்டும்? காரணம் என்ன? இதை அனுபவிக்க நான் என்ன செய்தேன்? இப்படி தேவனிடம் கேட்கும் போது, தேவன் பற்றி சொல்லுகிறார், தேவன் எனக்கு எதிர்த்து நிற்கிறவர் - எதிராளியாகிவிட்டார்.

உண்மையில், யோபுவின் துன்பத்தில் தேவன்மீது எத்தகைய மனப்பான்மை கொண்டிருந்தார் என்பதை நாம் வாசிக்கலாம்

### யோபு 19:6

**"தேவன் என்னைக் கவிழ்த்து, தம்முடைய வலையை என்மேல் வீசினார் என்று அறியுங்கள்."**

யோபு எவ்வளவு வேதனை அடைந்து இருக்கிறார்.

### யோபு 27:4

**"என் நியாயத்தைத் தள்ளிவிடுகிற தேவனும், என் ஆத்துமாவைக் கசப்பாக்குகிற சர்வவல்லவருமானவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்."**

மேலும்,

**யோபு 23:1–4**

**“யோபு பிரதியுத்தரமாக: இன்றையதினமும் என் அங்கலாய்ப்பு முரண்டுத்தனமாக எண்ணப்படுகிறது; என் தவிப்பைப்பார்க்கிலும் என் வாதை கடினமானது. நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்துசேர்ந்து, என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய் வைத்து, காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்.”**

இவை ஒரு சில மாதிரிகள் மட்டுமே!

ஓ! யோபு மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார்.... அவர் தேவனிடமிருந்து ஒரு உத்தரவை விரும்பினார்..... மேலும் "எழுதப்பட்ட" புஸ்தகமாகவும்! மேலும், அவர் “விரும்பியபடி” அந்த புஸ்தகத்தை அவருக்குக் உருவாக்கி கொடுத்தாரா தேவன்?

ஆமாம், தேவன் ஜெபங்களைக் கேட்பவரும், மேலும் அவருடைய சிறந்த நேரத்தில் சிறந்த வழியில் பதிலும் அளிப்பவர் என்பது நாம் அறிந்ததே!

ஆம்! அன்பான சகோதரரே!

இந்த யோபுவின் புத்தகம் அந்த பதிலுக்காக எழுதப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது!

இப்போது, உண்மையில் யோபு ஒரு தனிநபராக வாழ்ந்து, இந்த வேதனையான அனுபவங்கள் அனைத்தையும் கொண்டிருந்தாலும், சொல்லப்போனால், இந்த புஸ்தகத்தை உருவாக்கி இயற்றியது தேவனே!! இதனால்தான் இந்த புஸ்தகத்தின் மனித எழுத்தாளர் கிட்டத்தட்ட அறியப்படாததாயும் மற்றும் விஷயம் தெளிவற்றதாயும் உள்ளது!

இப்புத்தகத்தை தேவன் திட்டம் பண்ணும் போது இது யோபுவிற்கு மட்டும் அல்ல. யோபு மாதிரி உலகத்தில் உள்ள எல்லா மனுஷர்களுக்காவும் அவர்களின் வாழ்க்கையின் தீமையின் அனுபவங்களில் ஏன் தேவன் இவ்வளவு தீமைகளை அனுமதிக்கிறார்? ஏன் எனக்கு இவ்வளவு தீமைகளை கொடுக்கிறார்? இதில் என்ன நன்மை இருக்கிறது? இது போன்ற கேள்விகளுக்கு தேவன் இந்த புத்தகத்தை எழுதியிருக்கிறார். இப்புத்தகத்தை ஒரு சிறப்பான நாடக பாஷை பாணியில் எழுதியிருக்கிறார். சாதாரண வார்த்தைகளில் சில வரிகளில் பதில் கொடுத்திருக்கலாம். இப்புத்தகம் நாடக பாஷை பாணியில் கொடுத்து இருக்கிறார். இலக்கண இலக்கிய நடை முறையில், ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் இன்றைக்கு வரைக்கும் ஜனங்கள் கேட்டு ரசிக்கும் ஆச்சரியமான விதத்தில் அமைந்திருக்கும். 20 அல்லது 30 வருடங்களுக்கு முன்பு மனுஷர்கள் மத்தியில் கிராமங்கள் மற்றும் பட்டணங்களில் ஒரு சந்தோஷம் - நாடகம் தான். எப்படியாவது டிக்கெட் கிடைக்க வேண்டும் என்று ஓடிப்போய் நாடகத்தில் உட்காருவார்கள்; நாடகத்தில் ஒரு கதை இருக்கும்.

ஒரு கதாபாத்திரம் இருக்கும். ஆனால் ஜனங்களை ஒரு பார்வை பார்த்தால் சிலர் சிரித்துக் கொண்டு இருப்பார்கள், சிலர் அழுது கொண்டு இருப்பார்கள், சிலர் யோசனையில் மூழ்கி இருப்பார்கள். நாடகம் மேடையில் நடந்து கொண்டிருக்கும். ஆனால் நாடகம் வழியாக ஜனங்களிடையே பலவிதமான யோசனைகள் மனதிற்குள் வரும். இது போன்ற

வகையில் தேவன் யோபு கேட்ட கேள்விக்கு, ஒரு புத்தகத்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். மிகவும் சிறப்பான நாடக பாஷை பாணியில் ஒரு புத்தகத்தை ஏற்பாடு செய்து இருக்கிறார். அது தான் யோபு புத்தகம். நாடக பாஷை பாணியில் எழுத பல விஷயங்கள் தேவைப்படுகிறது. முதலில் ஒரு கதை, கதாபாத்திரங்களின் உரையாடல் தேவைப் படுகிறது. ஒரு ஆரம்பம் இருக்கும். ஒரு முடிவு இருக்கும்.

பொதுவாக நாடகங்களில் காட்சிகள் இருக்கும். சில நாடகங்களில் 4,5,6 -காட்சிகள் இருக்கும். ஒவ்வொரு காட்சிக்கும் இடையில் திரை விழும். காட்சி மாறும். பிறகு திரை திறக்கும். அந்த வகையில் யோபு புத்தகத்தை நாடக பாணியில் எழுதும் போது 7 காட்சிகள் இருக்கிறது.

இந்த 7 காட்சிகள் யோபு நாடகத்தில் நடக்கிறது:

**1-வது காட்சி : பரலோகம் - யோபு1:1 லிருந்து 2:8 -வரைக்கும் (அறிமுகம்)**

**2-வது காட்சி : யோபு மற்றும்அவரது மனைவி - யோபு - 2: 9,10.**

**3-வது காட்சி : யோபு மற்றும் 3 நண்பர்கள் - யோபு -2:11-லிருந்து 31:40 - வரை.**

**4-வது காட்சி : யோபு மற்றும் எலிகூ - யோபு 32:1லிருந்து 37:24-வரை**

**5-வது காட்சி : தேவன் மற்றும் யோபு - யோபு-38:1-லிருந்து 41:34 வரை**

**6-வது காட்சி : யோபுவின் கடைசி பதில். -யோபு- 42:1-6 வரை.**

**7-வது காட்சி : முடிவு. யோபு 42:7-17 வரை.**

இது "ஸ்கோஃபீல்ட்" என்ற பெயர்கொண்ட ஒரு உரையாசிரியரின் ஆலோசனையாக இருந்தது (ஆண்ட்ராய்டு - இல் "மைஸ்வோர்டு (mysword)" என்னும் வேதாகம செயலியைப் பார்க்கவும்).

இதிலிருந்து நாம் அறிவது யோபு ஒரு நாடக பாணியில் எழுதப்பட்ட புத்தகம். இந்த புத்தகத்தில் வரும் எல்லோரும் கதாப்பாத்திரங்களாக இருக்கிறார்கள். யோபு, தேவன், சாத்தான் எல்லோரும் கதாப் பாத்திரங்கள். இப்புத்தகத்தில் வரும் எல்லோரும் கதாப்பாத்திரங்கள் அதனால்தான் இது நாடகம் என்று பார்க்கிறோம்.

வேதாகமத்தில் **யோபு–1:1**-இல் சகோ.ரசல் குறிப்பிடுகிறார், யோபு மனுக்குலத்திற்கு ஒரு நிழல். வேறு சில பேச்சாளர்கள் யோபு ஒரு சபையைக் குறிக்கிறதாக பேசி இருக்கிறார்கள். நாம் இதை ஆராய்ந்து பார்த்தால் யோபு சபை அல்ல. ஆனால் யோபு புத்தகத்தில் சபை இருக்கிறது. இதை பின்வருவனவற்றில் அறிந்து கொள்ளலாம். யோபு மனுக்குலம் என்றால் சபையை தேவன் எங்கிருந்து எடுக்கிறார்? மனுக்குலத்திலிருந்து தான் எடுக்கிறார். யோபு சபை அல்ல; யோபு குறிக்கிறார் மனுக்குலம்.

இப்புத்தகம் எழுதப்பட்டதின் நோக்கம் - யோபு கேட்ட கேள்விக்கு பதில் கொடுக்க வேண்டும். அதில் விசேஷமான கேள்வி தீமையின் அனுமதி காலகட்டத்தில் மனுக்குலத்தின் சரித்திர வரலாறு. இதன் மத்தியில் தேவன் எப்படி திட்டம் போடுகிறார்? மனுக்குலத்தை மீட்பதற்காக, தீமையின் அனுமதியில் அகப்பட்ட மனுஷர்களை எப்படி

இரட்சிப்புக்கு கொண்டு வருகிறார்? இவை யாவுமே யோபு புத்தகத்தில் எழுதியிருக்கிறது. இப்புத்தகம் முதன் முதல் வெளிப்படுகிறது.

ஆம், மெய்யாக! இந்த புஸ்தகம் உண்மையில் இதைப் பற்றியது தான்!

- **"தீமையின் அனுமதி"...**
- **மற்றும் அந்த காலப்பகுதியில் மனுக்குலத்தின் வரலாறு...**
- **மற்றும்... மரணத்திலிருந்து அவரது திட்டமிட்ட மீட்பு..**
- **மற்றும்.. பாவத்திலிருந்து இறுதி இரட்சிப்பு..**

என்பதற்கான தனது நோக்கத்தை தேவன், தனது மாபெரும் யுகங்களைப் பற்றின தெய்வீகத் திட்டத்தில் விரிவாக விளக்கியுள்ளார் என்பதை நாம் அனைவரும் அறிவோம்....

அது "இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக"... என்று "கர்த்தருடைய புத்தகத்தை" (சங் 56: 8) உருவாக்கும் 66 தெய்வீக எழுத்துக்கள் கொண்ட புஸ்தகங்கள் மூலம் விரிவடைகிறது.

......இந்த யோபு புஸ்தகம் அந்த முழு திட்டத்தையும் வரலாற்றையும் மீட்பையும் இரட்சிப்பையும் ஒரே புத்தகத்தில் "இணைத்து மூடப்பட்ட" புஸ்தகமாகும்!! ஆகவே, இப்போது, தேவனுடைய கிருபையினால், இந்த யோபு புஸ்தகத்தில் தேவனின் இந்த மாபெரும் வேலையைப் பார்க்கலாம்!

இந்த ஆய்வின் ஆரம்பத்தில் நாங்கள் கூறியது போல, இந்த அற்புதமான புஸ்தகத்தை "மாணவர்களாக" பார்க்க அனுமதிக்கப்பட்டிருப்பது நமக்கு கிடைத்த பாக்கியம்,... நிச்சயமாக இந்த விஷயத்தில் எல்லாவற்றையும் நாங்கள் அறிந்திருப்பதாகக் கூறவில்லை. எங்களுக்கு அனுமதிக்கப்பட்டவைகளை, உங்கள் கவனத்திற்கு மட்டுமே நாங்கள் முன்வைப்போம்.

1தெச 5:20,21

*"தீர்க்க தரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருங்கள்; எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்."*

மேலும் இது ஒரு ஆசீர்வாதமாக இருக்கும் என்று நம்புகிறோம்!

ஆகவே நாம் துவங்கலாம்....

நாடகபாணி மற்றும் கவிதை பாணி என்று விளக்கக்கூடிய ஒரு வடிவத்தில் மனிதனுக்கான முழு தெய்வீக திட்டத்தையும் இங்கு ஆண்டவர் முன்வைக்கிறார் என்பதை எப்போதும் நம்முன் நினைவில் கொள்வோம்.

ஆம்! முழு 42 அதிகாரங்களும் தேவனுடைய திட்டத்திற்காக உள்ள முழு 7000 ஆண்டுகளையும் மற்றும் ஆதியாகமம் 1: 26-ல் உள்ள "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (மேலும் சங்கீதம் 119:73- இலும் உள்ளது) இந்த வார்த்தைகளின் நிறைவேறுதலையும் உள்ளடக்கியுள்ளது.

ஆகவே நாம் காண்கிறோம்....

- அதிகாரம் 1 - 37 - கிமு 4128 முதல் கி.பி 1874 வரையிலான காலத்தை சித்தரிக்கிறது, இதில் "தீமையின் அனுமதி" யான 6000 ஆண்டுகள் அடங்கும்.

- மேலும்....... அதிகாரம் 38 - 42 - கி.பி 1874 முதல் கி.பி 2874 வரையிலும் அதற்கு அப்பாலும் இருக்கும் காலத்தை சித்தரிக்கிறது - “கொஞ்சக்காலம்” நிறைவு, மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட ஆயிர வருடத்தினுடைய கிரியையின் முடிவு!

இப்போது இந்த புஸ்தகத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய கதாபாத்திரங்கள் உள்ளன, அவையாவன....

- **யோபு**
- **அவரது ஏழு குமாரர்கள் மற்றும் மூன்று குமாரத்திகள்**
- **அவரது மனைவி**
- **அவரது மூன்று சிநேகிதர்கள் – எலிப்பாசு , பில்தாத் மற்றும் சோப்பார்**
- **எலிகூ**
- **அவரது ஏழு குமாரர்கள் மற்றும் மூன்று குமாரத்திகள் இறுதியில் அவருக்கு மீண்டும் பிறந்தனர்.**
- **மேலும் பிறகு தேவனும் சாத்தானும் இருக்கின்றனர்**

இந்த தெய்வீக திட்டத்தை விளக்குவதற்கு அநேக கதாபாத்திரங்களை பயன்படுத்தி இருக்கிறார் என்று பார்த்தோம். அந்த கதாபத்திரங்களை அடையாளம் காண்பதற்கு முன்னர், ஆரம்ப 3 வசனங்கள் மற்றும் புஸ்தகத்தின் கடைசி 2 வசனங்களின் அதிசயத்தையும், வேதவசனங்களில் மனிதனுக்கான தெய்வீகத் திட்டத்தின் துவக்கத்திற்கும் முடிவிற்கும் இது எவ்வாறு பொருந்துகிறது என்பதைப் பார்ப்போம்!

ஆம்! நாம் இப்போது இந்த வசனப்பகுதிக்கு வரலாம் –

## யோபு 1:1–3

***“ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். அவனுக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரருமிருந்தார்கள்; அதினால் அந்த மனுஷன் கிழக்கத்திப் புத்திரர்***

இந்த 3 வசனங்களில் தேவன் சிருஷ்டிப்பு பற்றி பேசுகிறார். இது நாடக பாணி. நேரடி பாஷை இல்லை. நாடக பாணியில்; அடையாள பாஷையில் இந்த விஷயங்களைப்

பார்க்கலாம். இதை கற்பனை பண்ணலாம். நாடகம் நடக்கிறது. மேடையில் யாரும் இல்லை. ஒருவர் பேசுகிறார். அவர் ஒரு சில வரலாறு கொடுக்கிறார். காட்சி ஆரம்பிக்கும் முன்னே யோபு பற்றி சொல்லப்பட்ட விஷயங்கள். எப்படி வேதம் ஆரம்பிக்கிறது? தேவன் மனுஷனை எப்படி உண்டாக்கினார் என்று.

**ஆதியாகமம் 1:26–28**

**"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்."**

**யோபு 1:1**

இங்கே நாம் நினைவில் கொள்ள வேண்டியது, நாடக பாணியில் தேவனுடைய "சாயலில்" மற்றும் அவரின் "ரூபத்தில்" உண்டாக்கப்பட்டதின் பொருளை இது மிகச் சுருக்கமாகக் கூறுகிறது. "மரங்கள் அடர்ந்த" என்று அர்த்தம் கொண்ட ஊத்ஸ் என்பது கிழக்கு திசையில் இருந்தது, இதனால் மீண்டும் இது தேவனுடைய தோட்டமான ஏதேனைப் பற்றி குறிப்பிடுகிறது. (ஆதியாகமம் 2: 8)

பிறகு **யோபு 1:2**

ஆதியாகமம் 1: 28-இல் "பலுகிப் பெருகி" என்பதை விவரிக்கிறது - யோபிலிருந்து (ஆரம்பத்தில் ஆதாமை மட்டுமே சித்தரிக்கிறது) ஒரு இனம் - ஒரு மனித குடும்பம் வெளிப்படும்.

இது நாடக பாஷை என்று நினைவில் கொள்வதின் மூலம்... அவர் முதலில் பெற்ற இந்த "ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும்".... பின்னர் இறந்துபோனதாக காட்டப்பட்டவர்கள் (யோபு 1:18,19), சங்கீதம் 51:5 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி ஆதாம் மற்றும் ஏவாளின் வீழ்ச்சியடைந்த நிலையில் உள்ள மனித இனத்தின் தலைமுறையைக் குறிக்கும். இந்த நிலையில் உண்டாக்கப்பட்ட முழு மனித குடும்பமும் யோபின் பிள்ளைகளுக்கான இந்த குறிப்பில் அடையாளப்படுத்தப்படுகின்றன.

ஆம்! முழு இனத்திற்குமான "பாவம் மற்றும் மரணம்" செயல்முறையின் நிலைக்குள்ளான இந்த தலைமுறைக்கு ஏழு மற்றும் மூன்று அம்சங்கள் உள்ளன! அதாவது,

- "ஏழு குமாரர்கள்" யோபுவின் (ஆதாம்) இந்த பிள்ளைகள் முழுமையாக தோற்றுவிக்க 7000 ஆண்டுகள் ஆகும் என்ற அம்சத்தை அடையாளப்படுத்தப்படுகின்றன.

- “மூன்று குமாரத்திகள்”, "உலகங்கள்" என்று அழைக்கப்படும் மூன்று காலப்பகுதியினை அவை எடுக்கும் என்ற அம்சத்தை அடையாளப்படுத்தப்படுகின்றன.

- மேலும்... யோபுவின் பிள்ளைகளின் கூட்டுத்தொகை “ஏழு” மற்றும் “மூன்று” என்பது பத்து ஆகும், வேதவசனங்களில் இது முழு உலகத்தைக் குறிக்கும் அடையாள எண் என்பதை நினைவில் கொள்க. (சகரியா 8:23/மத்தேயு 25:1)

யோபு 1:3 சொல்லப்பட்ட இந்த விஷயம் *ஆதி–1:26,28* -ன்படி கணக்காக கொடுக்கப் பட்டிருக்கிறது. தனி மனிதனிடம் இந்த மாதிரி மிருகங்கள் எல்லாம் இருக்க வாய்பில்லை. இந்த மாதிரி அதிக மிருகங்கள் எல்லாம் ராஜாவிடம் தான் இருக்கும். தேவன் ஆதாமுக்கு தந்த துரைத்தனம் - இந்த பூமியின் மேலே எல்லா மிருகங்கள் மேலும்; மச்சங்கள் மேலும்; எல்லா ஜீவ ஜந்துக்கள் மேலும், ஆதாமை ஒரு இராஜாவாக வைத்தார்.

### ஆதி 1:26–28

**“....அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்....”**

எல்லாமே அவருடைய சொத்து. அவர் தான் ஆளுகை பண்ணுவார். இந்த விஷயத்தை நாடக பாணியில் எப்படி காண்பிக்க வேண்டும்? சாதாரண மனிதனுக்கு இப்படி சொத்து இருக்க வாய்ப்பில்லை. அதனால் யோபு தான் பெரிய ராஜா (உண்மையில் ஆதாம்தான் தேவனால் படைக்கப்பட்ட ராஜா). 2 வசனப் பகுதிகளில் இந்த தெய்வீகத்திட்டத்தின் முதலில் தேவனால் நியமிக்கப்பட்ட இராஜா ஆதியாகத்தின் ஆரம்பம். அந்த சிருஷ்டிப்பின் காட்சிகள் யோபு புத்தகம் அதிகாரம் 1,2,3- ல், யோபு பற்றியான கதா பாத்திரம் தியானம் பண்ணும் கிடைக்கிறது. அப்போது ஒரு வீழ்ச்சி வரும், பிறகு இதைக் குறித்துப் பார்க்கலாம். இங்கே சுருக்கப்பட்ட நிலையில் ஆதியாகமத்தின் ஆரம்பம் - யோபுவின் முதல் 3 வசனங்களில் காணப்படுகிறது.

இப்பொழுது யோபு புத்தகத்தின் இறுதி வசனங்களைப் பார்ப்போம்.....

### யோபு 42: 16,17

**“இதற்குப்பின்பு யோபு நூற்றுநாற்பது வருஷம் உயிரோடிருந்து, நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான். யோபு நெடுநாளிருந்து, பூரணவயதுள்ளவனாய் மரித்தான்.”**

ஆ! இது புஸ்தகத்தின் முடிவுஆகும் மற்றும் வெளிப்படுத்துதல் 20 முதல் 22 அதிகாரங்களில் காணப்படுவதைக் குறிக்கிறது.

ஆகவே...யோபு 42:16- இல் “உயிரோடிருந்து” என்பதே முக்கியமான வார்த்தை ... ஏனென்றால், அந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஆயிர வருட இராஜ்யத்திலும், “பரிசுத்த

பெரும்பாதையான வழியிலும்" மட்டுமே மனிதர்கள் (யோபு) "உயிரோடிருக்க" வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுவார்கள்.

நாம் பிரமீடில் ராணியின் அறையை கவனிக்கும்போது, ராணி போக நேர் வழிப்பாதை காண்பிக்கப்பட்டுள்ளது. நேர் பாதையில் போய் பார்த்தால் கால் பகுதி குனிந்து நடக்கிறோம். 7-ம் பகுதி கொஞ்சம் உயரம் நேராக நடக்கலாம். 7-ம் பகுதிக்கு காற்று வருகிறது **[AIR WIND]**. 1000 வருஷ காலத்தில் தான் ஜீவனுக்கான வாய்ப்பு முதன் முதலில் உலகத்திற்கு வெளிப்படும் என்ற விஷயத்தை இங்குப் பார்க்கிறோம்.

*"தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான்"* – "அப்பொழுது முந்தினோர் பிந்தினோராவார்கள், பிந்தினோர் முந்தினோராவார்கள்." என்று லூக்கா 13: 30 –இல் விவரிக்கப்பட்டுள்ளபடி கல்லறையிலிருந்து திரும்பும் மனுக்குலத்தின் அனைத்து தலைமுறைகளையும் இது குறிக்கும்.

*"நாலு தலைமுறையாக"* - இது வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு என்னும் பூமியின் நான்கு திசைகளையும் குறிக்கும், ஏனெனில் "ஆதாமில்" மரித்த அனைவருமே அப்போது "கிறிஸ்துவில்" உயிர்த்தெழுப்பப்படுவார்கள்... ஆம்... பூமியின் நான்கு மூலைகளிலிருந்தும் கூட உயிர்த்தெழுப்பப்படுவார்கள்!

ஆம்! இந்த வசனத்தை நினைவில் கொள்ளுங்கள் –

**லூக்கா 13:29**

***"கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்து ஜனங்கள் வந்து, தேவனுடைய ராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள்."***

நான்கு திசையிலிருந்து எல்லாருக்கும் அந்த வாய்ப்பு இருக்கும். இதன் அர்த்தம் புரிய நீங்கள் ஒரு பெரிய சர்வதேச விமான நிலையத்தில் போய் நிற்க வேண்டும். துருக்கி லண்டன், மும்பை, டில்லி விமான நிலையத்தில் பல விதமான மனுஷ ஜாதியை பார்க்கலாம். பல விதமான தேசத்தில் இருந்து பலவிதமான தோல் நிறம், தோற்றம் என்ன ஆச்சரியம்; பல விதமான பாஷைகள் பேசுகிறார்கள்; எல்லாருக்காகவும் இயேசு கிறிஸ்து மரித்திருக்கிறார். உலகத்தின் எங்கோ ஓர் மூலையில் பனி மூடிய இடத்தில் கூடாரம்போட்டு வாழ்கிறார்கள். ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது கை கொடுக்க மாட்டார்கள்; மூக்குக்கு மூக்கு தொடுவார்கள். அது அவர்களின் பரம்பரை பழக்கம். அவர்களுக்கு கூட அந்த வாய்ப்பு இருக்கிறது.

தென் அமெரிக்க காட்டில் மனுஷர்கள் முன்பெல்லாம் மனுஷர்களை சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். இப்போது அவர்கள் எப்படியிருக்கிறார்களோ? அப்படிப்பட்ட காட்டு வாசிகள் இருக்கிறார்கள். சத்தம் போட்டு ஜெபம் பண்ணி குதிகுதித்து கெட்டுபோன, செத்துப்போன மூதாதையரின் எலும்புகளையெல்லாம் கழுத்தில் மாட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு கூட இந்த வாய்ப்பு இருக்கிறது. மோசமான சூழல்களில் இருக்கிற, மோசமான பாவத்தில் இருக்கிற ஜனங்களுக்குக் கூட இந்த வாய்ப்பு இருக்கிறது.

உலகம் முழுவதற்கும்; நான்கு திசைகளிலுள்ளவர்களுக்கும் எல்லா ஜாதி, எல்லா பாஷை, எல்லா ஜனங்கள்; எல்லா தேசங்களுக்கு இந்த வாய்ப்பு இருக்கிறது. இந்த விஷயத்தைதான் பார்க்கிறோம், யோபு உயிரோடு இருந்து அவர் நான்கு தலைமுறையில் இருக்கிற பிள்ளைகளுடைய பிள்ளைகளை அவர் பார்த்தார் என்று.

இறுதியாக..... யோபுவைப் பற்றி, நாம் வாசிக்கையில்....

**யோபு 42:16**

**"இதற்குப்பின்பு யோபு நூற்றுநாற்பது வருஷம் உயிரோடிருந்து,.."**

140 வருஷம் என்பது என்ன? இது உலகம் பெறப் போகிற ஜீவன் வாய்ப்பு. இது உயிர்தெழும் விஷயம் பற்றின அடையாளங்கள் இதைப் பிரிக்க வேண்டும்; 100 மற்றும் 40. உயிர்த்தெழுதலில் ஒரு 100 இருக்கும். ஒரு 40 இருக்கும். இது ஒரு நாடக பாணி. ஒரு நேரடி விஷயம் சொல்வதற்கு நாடக பாணியில் பேசப்படுகிறது. யோபு மனுஷ ஜாதியைக் குறிக்கிறார். உயிர்த்தெழுதல் குறிப்பது 1000 ஆண்டு யுகத்தில் இருக்கிற இரட்சிப்பு. நாம் எற்கனவே பார்த்தோம், ஆயிரமாண்டு யுகத்தில் இருக்கிற இரட்சிப்புக்கான வாய்ப்பு எப்படி வெளிப்படும் என்று. 100 குறிக்கிறது தேசத்தில் இருக்கிற எண்ணிக்கை. அடையாள பாஷை 10 குறிக்கிறது உலகம் முழுவதும் உள்ள எண்ணிக்கை. (இதில் 10 என்றால், பத்தின் மடங்கு 100 என்பதை மனதில் கொள்ளவும்) இதில் எல்லா விதமான ஜனங்கள் இருக்கிறார்கள்.

ஆம்! பல்வேறு வகைப்பாடுகளிலும் நிலைமைகளிலும் உள்ள வீழ்ச்சியடைந்த சந்ததியின் அனைத்து மக்கள் - இந்துக்கள், முஸ்லிம்கள், புத்த மதத்தினர், சமணர்கள், சீக்கியர்கள், பல்வேறு பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் (அந்திக்கிறிஸ்து), நாத்திகர்கள், அஞ்ஞானிகள், ஆப்பிரிக்கர்கள், சீனர்கள், வனப்பழங்குடியினர், பிக்மிகள், நரமாமிசம் உண்பவர்கள், சாத்தான் வழிபாட்டாளர்கள், திருநங்கைகள், ஓரினச்சேர்க்கையாளர்கள், அண்ணகர்கள், குழந்தைகளைப் புணருபவர்கள், கொலைகாரர்கள், பயங்கரவாதிகள், கற்பழிப்பாளர்கள் போன்றவர்கள். ஆம், பட்டியல் நீண்டு கொண்டே போகும்!!

இப்படி எல்லா ஜனங்களும் இந்த 100 என்ற கணக்கில் வருவார்கள். எவ்வளவு மோசமான பாவம் பண்ணியிருந்தாலும், அவர் எவ்வளவுதான் மோசமான மனுஷனாயிருந்தாலும், அவர் எவ்வளவு தான் மோசமான நிலையில் இருந்தாலும், ஒரே கேள்விதான் ஆதாமுக்குள் பிறந்து விட்டாரா? ஆமாம். அப்போது இந்த வாய்ப்பு அவர்களுக்கு உண்டு. இது மிகப் பெரிய சத்தியம்.

**1 கொரி 15:22**

**"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்."**

இலவசமாய் இயேசு கிறிஸ்து மூலமாய் ஜீவனுக்கான வாய்ப்பை அனைவரும் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் அந்த ஜீவனைப் பெற்றுக்கொண்டு அதில் வளர்ந்து, அதில் உறுதியாய் இருப்பதற்கு சொந்த பிரயாசம் மிகவும் அவசியம். **அது தான் 40.**

வேதத்தில் 40 என்பது நியாயத்தீர்ப்பின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. நாம் வசனத்தில் வாசிக்கிறோம். இங்கே இருக்கிற எல்லா ஜனங்களும் கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். எல்லாரும் இலவசமாய் பெற்ற இந்த வாய்ப்பை ஜீவனாய் மாற்றி நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள கிரியைகள் செய்ய வேண்டும்.

வெளி 20:12

**“மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்."**

எழுதப்பட்டபடியே கிரியைகளுக்கு தக்கதாக நியாயத்தீர்ப்பு அடைவார்கள். இதை 40 அடையாளப்படுத்துகிறது. தேவனுடைய அருமையான திட்டம். ஆதாமுக்குள் மரணமடைந்தார்கள், கிறிஸ்துவுக்குள் எல்லாருக்கும் இலவசமாக ஜீவனுக்கான வாய்ப்பு வரும். ஆனால் அந்த மரணத்தின் நிலையிலே எப்பேற்பட்ட அனுபவங்களைப் பெற்று அதிலிருந்து தப்பிக்க, விடுபட, அவர்களுடைய கிரியைகள் அவசியம். புத்தகத்தில் எழுதப்பட்டபடியே அவர்கள் கிரியைகளில் காண்பிக்க வேண்டும். இந்த 40 காண்பிக்கிறது பெரும் பாதையான வழியிலே இருக்கும் அனுபவங்கள். அது பரிசுத்த வழி எனப்படும். தீட்டுள்ளவன் அதின்மேல் நடக்க மாட்டான். இந்த 40 குறிக்கிறது நியாயத்தீர்ப்பு. ஜீவனுக்கு தகுதியாக இருக்க வேண்டும்.

எவ்வளவு அருமையான, உலகத்தாருடைய ஜீவனுக்கான, தேவனுடைய தெய்வீகத்திட்டம் நாடக பாணியில். இந்த 100,40 என்கிற விஷயத்தை இந்த 16-ம் வசனம் மிக அருமையாகக் காட்டுகிறது. 1000 வருட இரட்சிப்பு எப்படி வெளிப்படும்? ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பு என்ன? ஒவ்வொருவருக்கும் உள்ள வாய்ப்பு என்ன? என்பதைப் பற்றி இந்த 16-ம் வசனத்தில் நாடக பாணியில் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும், இறுதியாக, யோபு 42:17

ஆ! இந்த அற்புதமான புத்தகத்தின் இறுதி வார்த்தைகள்!

**“யோபு நெடுநாளிருந்து, பூரணவயதுள்ளவனாய் மரித்தான்.”**

இந்த அருமையான புத்தகம் அத்துடன் முடிகிறது. மிகவும் சுருக்கமாக இருக்கும் வார்த்தைகளில் எவ்வளவு ஆச்சரியமான அர்த்தம். ஆவிக்குரிய தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின் பார்வையில் பார்க்கும் போது, யோபு நெடுநாள் இருந்து பூரண வயதுள்ளவனாய் மரித்தான். **16–வசனம் குறிக்கிறது 2874– வரை.** 1000- வருஷ இரட்சிப்பு முடிகிற வரைக்கும். இது குறிக்கிறது கொஞ்ச காலம். யோபு நெடு நாள் இருந்து பூரண வயதுள்ளவனாய் மரித்தான். இங்கு யோபு மனுஷ ஜாதியைக் குறிக்கிறார். 16-ம் வசனத்தில் மனுஷ ஜாதி உயிரடைகிறார்கள். இங்கே யார் மரிக்கிறார்கள்? இங்கு யோபுவுக்கு உள்ளே இருக்கிற மரணமே மரிக்கிறது. அதுபோல மனுஷ ஜாதிக்குள் இருக்கிற மரண

தண்டனையே மரிக்கிறது. என்ன ஆச்சரியம்! இது தான் தேவன் எப்படிப் பண்ணுகிறார்? ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, இந்த மரணத்தை சாகடிக்கிறார்.

**வெளி 20:14**

**"அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன."**

**ஆம், "மரணத்தின் மரணம்" !**

இதற்கு மேல் என்ன... சந்தோஷம். மரணமே, இரண்டாம் மரணத்திற்குப் போகிறது. மரணத்திற்கு முற்றிலும் அழிவு. தேவனுடைய தெய்வீகத்திட்டத்தில் மரணமே மரிக்கப் போகிறது. மரணம் நீக்கப்படும். கடைசியாக பரிகரிக்கப்படும் சத்துரு மரணம் (சங் 23:4 - "மரண இருளின் பள்ளத்தாக்கு.."). நெடுநாள் இருந்து பூரண வயதுள்ளவனாகி இது குறிக்கிறது நியமிக்கப்பட்ட கடைசி காலம்.

**எபேசியர் 1:9**

**"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,"**

தேவன் வைத்திருக்கிற தெய்வீகத்திட்டம் இதுதான். மரணத்திற்கு நியமிக்கப்பட்ட இந்த காலக் கட்டம் முடிவு பெற்றவுடன் மரணத்திற்கு மரணம் நடக்கும். மரணத்தில் இருக்கிற மரணம் - யோபு மரித்தார்; நேரடி பார்வையில் யோபு மரித்தார். ஆனால் தேவனுடைய தெய்வீகத் திட்டம் ஆவிக்குரிய பார்வையில் 16 வது வசனத்தில் யோபு - மனுஷ ஜாதி ஜீவன் பெற்றுக்கொள்கிறார்கள்; 140 வகையில் ஜீவன் பெற்றுக் கொள்கிறார்கள். ஜீவன் பெற்றுக் கொண்ட பின், இப்போது யார் மரிக்கிறார்கள்? யோபுவுக்குள் இருக்கிற மரணம் மரிக்கிறது. இந்த விஷயம் மிகவும் ஆச்சரியம். இராஜ்யத்தின் கிரியைகள் பற்றி, இரட்சிப்பு பற்றி, கொஞ்சகாலம் பற்றி, மரணம் நீக்கப்படுதல் போன்ற எல்லா விஷயத்தையும் இரண்டே வசனங்களில், யோபு புத்தகத்தின் கடைசி இரு வசனங்களில், உண்மை தேவன் வைத்திருக்கிறார்.

ஆம் சகோதர சகோதரிகளே ! யோபுவின் புத்தகம்..... தெய்வீக திட்டத்தை எவ்வளவு சரியாக சித்தரிக்கிறது என்பதை பார்த்தீர்களா?

அடுத்து கதாபத்திரங்களுக்குள்ளாய் கடந்து போகலாம்......

## பாகம் – 3

தேவனுடைய அருமையான தெய்வீக திட்டம் 66 புத்தகத்தில் உள்ளதை இந்த ஒரே புத்தகத்தில் சுருக்கி வைத்தார். ஆம் யோபு 42:16,17 வசனங்களில் உள்ள ஆச்சரியத்தை பார்த்தபின் இப்பொழுது யோபு புத்தகத்தில் உள்ள கதாபாத்திரங்களை பார்க்கலாம். முதல் கதாபாத்திரம்,

### யோபு

சகோ.ரசல் - யோபு ஒரு மனுஷ ஜாதியைக் குறிக்கின்றதாக சொல்கிறார். யோபு புத்தகத்தின் ஆரம்ப 3 வசனங்களில் யோபு ஆதாமை வெளிப்படுத்துகிறார். இந்த சன்மார்கனின் வீழ்ச்சி - ஆதாம் 12-ம் வசனத்தில் இருந்து ஆரம்பமாகிறது.

*யோபு 1:12 ல் "கர்த்தர் சாத்தானை நோக்கி,.."* இது தான் வீழ்ச்சி. சாத்தான் தேவனிடம் அனுமதி பெற வேண்டும். ஆதாம் - ஏவாளை வஞ்சிப்பதற்கு, தேவன் சாத்தனுக்கு அனுமதி கொடுத்ததால் வீழ்ச்சி வந்தது. **யோபு புத்தகத்தில் யோபு குறிக்கிறார் முதலில் ஆதாம், பின்பு விழுந்துபோன மனுஷ ஜாதி.** ஆனால் 42-ம் அதி-3 வசனங்கள் 7,8,9- மட்டும் யோபு மனுஷ ஜாதி குறிப்பது இல்லை 10 லிருந்து 17- வரை மறுபடியும் யோபு மனுஷ ஜாதியைக் குறிக்கிறார். இந்த 7,8,9- வசனங்களில் யோபு யாரைக் குறிக்கிறார் என்று பின்னர் பார்க்கலாம்.

### 7 குமாரரும் 3 குமாரத்திகளும்

அடுத்த கதாபாத்திரம் யோபுவுக்கு முதலில் 7 குமாரரும் 3 குமாரத்திகளும். இந்த விஷயம் ஒரே பரிபூரணமான ஆதாமிலிருந்து ஒரு முழு மனுஷ ஜாதி தேவன் கொண்டு வந்தார். இந்த மனுஷ ஜாதியை பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று ஆசீர்வதித்தார். **எல்லாரும் சாகிறார்கள்** - இது குறிக்கிறது, ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல.

### யோபுவின் மனைவி

யோபுவின் இரண்டே இரண்டு வசனங்களில் வருகிறார். 2-ம் அதிகாரம் 9,19 வசனங்கள் மட்டும். அதற்கு முன்பும் இல்லை. பின்பும் இல்லை.

**யோபு 2:9,10**

*"அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும் என்றாள்....."*

சரி, இந்த பாத்திரம் யாருடன் தொடர்புடையது என்பதைப் பற்றி என்ன சொல்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை! அவள் புஸ்தகத்தில் மிகவும் சொற்பமாகவே வருகிறார், அவள் பேசும் வார்த்தைகளிலிருந்து (யோபு 2: 9, 10) யோபுவைப் போன்ற

தேவனைப் பற்றிய அதே நம்பிக்கையையும் நோக்கத்தையும் அவள் பகிர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை. அப்படியானால் அவள் யாரை சித்தரிக்கிறாள்? வீழ்ச்சியின் பின்னர் படிப்படியாக அதன் பூரணத்தை இழந்த, தேவனின் சாயலிலும் ரூபத்திலும் உருவாக்கப்பட்ட பரிபூரண மனித இயல்பு பற்றிய யோபில் உள்ள நிழலிற்கு மாறாக வீழ்ச்சியடைந்த மனித இயல்பிற்கு ஒரு நிழலாக அவள் இருக்க முடியுமா?

### 1 தீமோ 2:14

**"மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்."**

ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு, பாவ சுபாவத்தில் விழுந்தார்கள். வஞ்சனை மூலமாய் யோபு மனுஷ ஜாதிக்கு ஒரு கதாபாத்திரமாக இருக்கும் போது, அவருடைய மனைவி யாரைக் குறிக்கிறாள்? தேவன் திருமண ஏற்பாடு செய்தார். இரண்டு பேரும் ஒன்று சேர்ந்தார்கள்.; ஆண், பெண் இரண்டு பேரும் ஒரே மாம்சம் ஆகிவிட்டார்கள். இது மனுஷ ஜாதிக்குள் உள்ள 2 சுபாவத்தைக் காட்டுகிறதா? ஆதாம் - தேவனுடைய சாயல். தேவனுடைய ரூபத்தின்படி தேவனே சிருஷ்டித்தார். ஏவாள் - ஸ்திரீயை சாத்தான் பயன்படுத்தி, அவர் வழியாய் பாவம்; மரணம் வந்தது. யோபுவின் மனைவி - மனுஷ சுபாவத்தில் இருக்கிற விழுந்து போன சுபாவம். மனிதனுக்குள் இரண்டு சுபாவம் இருக்கிறது.

தேவனுடைய சாயல் - தேவனுடைய ரூபத்தின்படி ஆரம்பத்தில் சிருஷ்டிக்கப்பட்ட சுபாவம்; இரண்டாவது, பாவத்தில் விழுந்தபின் பாவத்தின் வழியாய் வந்த சாத்தானின் குணலட்சணம். அது சுயநலம். விழுந்து போன சுபாவம் கூட மனிதனுக்குள் வந்தது. நாம் பேசும்போது சொல்லுவோம். நன்றாகதானே இருந்தார். ஏன் இப்படி செய்தார்? என்று. அப்படி என்றால் என்ன அர்த்தம்? அவருக்குள் நல்ல குணலட்சணமும் இருக்கிறது. கெட்ட குணலட்சணமும் வெளிப்பட்டுக் கொண்டு இருக்கிறது. எல்லோருக்குள்ளும் இந்த குணலட்சணங்கள் இருக்கிறது. முதலில் ஆதாம், தேவனுடைய சாயலில் அவருடைய ரூபத்தின்படி உண்டாக்கப்பட்டார். இரண்டாவது ஏவாள், திருமணத்திற்குப் பின் இந்த இடத்தில் யோபுவின் மனைவியைக் குறிக்கிறாள். மனுஷ ஜாதிக்குள் இருக்கிற சுபாவம். யோபு குறிக்கிறார் பரிபூரணமான தேவனுடைய சாயல்; தேவனுடைய ரூபத்தின்படி. அவருடைய மனைவி குறிக்கிறார், விழுந்துபோன சுபாவம்; விழுந்துபோன சுபாவம் பாவத்தின் வழியாய் உருவாகிறது. விழுந்துபோன சுபாவம் தேவன் மேல் விசுவாசம் இல்லாதது. தேவன் மேல் விசுவாசம் காண்பிக்க விருப்பம் இல்லை. சுயநலம் என்ற சாத்தனுடைய சுபாவம்; இதைக் குறித்து வசனத்தில் வாசிக்கலாம்.

### ஏசாயா 57:17

**"நான் அவர்கள் பொருளாசையென்னும் அக்கிரமத்தினிமித்தம் கடுங்கோபமாகி, அவர்களை அடித்தேன்; நான் மறைந்து, கடுங்கோபமாயிருந்தேன், தங்கள் மனம்போனபோக்கிலே மாறுபாடாய் நடந்தார்களே."**

இந்த வசனத்தில் தேவனுடைய கோபம் வெளிப்படுகிறது. இந்த சுயநலம் மற்றும் சுயநலத்தின் கிரியைகளால்தான் உலகத்தில் அவ்வளவு அழிவு, கஷ்டம், வெறுப்பு, நஷ்டம்,

தீமைகள் பரவியிருக்கிறது. எல்லாவற்றிக்கும் காரணம் வீழ்ச்சிக்கு பின் மனிதனுக்குள் வந்த சுயநலம் தான். இந்த சுயநலம் எங்கிருந்து வந்தது? சின்னக் குழந்தைகள் சுயநலத்திற்காக கோபமாகிறார்கள். அந்த சுபாவம் நமக்கு இருக்கக் கூடாது. இது சந்தோஷமான காரியம் இல்லை. மிகவும் வேதனையான விஷயம். இது தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டிருக்கிறது. வசனத்தில் பார்க்கலாம்.

**தானியேல் 4:33**

**"அந்நேரமே இந்த வார்த்தை நேபுகாத்நேச்சாரிடத்தில் நிறைவேறிற்று; அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டு, மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான்; அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப்போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப்போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது."**

ஆம்! இங்கே மீண்டும் ஆதாம் மற்றும் மனித இனத்திற்கான ஒரு நிழலான படம் நேபுகாத்நேச்சாரில் உள்ளது மற்றும் "ஏழு காலங்கள்" காலப்பகுதியில் அவர் மகிமையிலிருந்து வீழ்ந்தார் என்பது ஏதேனில் மனிதனின் வீழ்ச்சிக்குப் பிறகு, சிருஷ்டிப்பின் "ஏழாம் நாள்" ஆன 7000 ஆண்டு காலத்தைக் குறிக்கும்.

*தானி 4:33 – ல் "அந்நேரமே இந்த வார்த்தை,...."* இந்த வசனத்தில், அவருடைய சரீரம் ஆகாயத்தின் பனியில் நனைந்து கொண்டிருந்தது. அவருடைய சரீரம் குறிக்கிறது அவருடைய மாம்சீக சுபாவம். ஆகாயத்து பனியில் நனைந்து கொண்டிருந்தது. பனி வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**சங்கீதம் 133:3**

**"எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது;..."**

வசனத்தில் வாசிக்கிற, எர்மோன் மலைமேல் விழுகிற பனி குறிக்கிறது - **தேவனுடைய பரிசுத்தஆவி.** ஆனால் இங்கு (தானியேல் 4:33 -ல்) குறிப்பது, ஆகாயம் (வான மண்டலத்தின் பனி). முதலாம் உலகம், 2-ம் உலகத்தில் உள்ள ஆகாயத்தின் பனி. இந்த ஆகாயம் விழுந்து போன தூதர்களின் அதிகாரத்தில் நடந்து கொண்டிருக்கிற அதிகாரம். அங்கேயிருக்கிற ஆகாயத்தின் பனி குறிக்கிறது.

1. பரிசுத்த ஆவி - தேவனுடைய பரிசுத்த ஆவியின் குணலட்சணம் அன்பு குறிக்கிறது.
2. சாத்தானின் அசுத்த ஆவி - அது சுயநலத்தின் புத்தி, கிரியைகள், குணலட்சணங்கள்.

இந்த நேபுகாத்நேச்சாருடைய சரீரமே நனைந்து கொண்டிருந்தது. இந்த மாம்சீக சுபாவம் உலகம் முழுவதும் பரவியிருக்கிறது. அவர்களுடைய குடும்ப வாழ்க்கையில்; உலக வாழ்க்கையில், அவர்கள் எந்த ஒரு காரியம் செய்தாலும், எல்லா இடங்களிலும் சுயநலம்தான் வெளிப்படுகிறது. **இந்த சுயநல சுபாவம்தான் ஆகாயத்தின்பனி.** யோபுவின் மனைவி யோபுவிடம் இசைந்து இருந்தார்.

**ஆதி 2:24**

**"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்."**

யோபுவின் மனைவியிடம் இணைந்திருக்கிற சுபாவம் நம் எல்லாரிடமும் இருக்கிறது. இதை தட்டி எழுப்புவது விழுந்து போன தூதர்கள். நமக்குத் தெரிவது இல்லை. நாம் கண்ணைத் திறந்து கொண்டு இதில் விழுகிறோம். அந்த நேரத்தில் நம் சுபாவம் மாறுகிறது. நமது ஆசை இச்சை விருப்பங்கள் எல்லாம் மாறுகிறது. வாயின் வார்த்தைகள் எல்லாம் மாறுகிறது. கண்கள் எல்லாம் மாறும். இது தான் சுயநலம். எல்லோரிடமும் இருக்கிறது. இதுதான் யோபுவின் மனைவி. இந்த குணலட்சணத்தை நாம் விரட்ட வேண்டும்.

யோபு தன் மனைவியிடம்: *"நீ புத்தியில்லாத பெண்; நீ பேசுகிறது உனக்குத் தெரியாது."* என்றார். நாம் இது போன்ற சூழலில் வரும்போது நாம் சுயத்தை நீக்க வேண்டும். மன்னிப்பு கேட்க வேண்டும். இதை நான் விரும்பி செய்யவில்லை; இது என் வழிகள் இல்லை; நான் தவறு செய்துவிட்டேன்; இப்படி நான் செய்திருக்கக்கூடாது; என்னை மன்னித்து விடுங்கள் என்று. கெட்ட சுபாவம், நல்ல சுபாவத்தை மேற்கொள்கிறது. புது சிருஷ்டிகளுக்குள் இன்றைக்கு நடக்கிற போராட்டம் இது. உலகம், மாம்சம், சாத்தான். நம் கண்கள் திறந்து இருப்பதால் என்ன மாதிரி போராட்டம் நடக்கிறது என்பது தெரிகிறது. இது அவ்வளவு கஷ்டமான விஷயம். நம் ஒவ்வொருவரையும் பார்த்தால் ஆச்சரியப்பட வேண்டும். தேவனுக்குத் தெரியும் இந்த விழுந்துபோன சுபாவத்தில் நாம் பிறந்து, விழுந்து போன உலகத்தில் வாழ்ந்து, இந்த சத்தியத்திற்காக வாழும் போது, எப்பேற்பட்ட போராட்டம் இருக்கிறது என்று. எவ்வளவு கண்ணீர் வருகிறது? இது யோபு மற்றும் அவரது மனைவியின் மூலம் காண்பிக்கப்படுகிறதை நாம் பார்க்கிறோம். மனுஷ சுபாவத்தில் இருக்கிற நாம் புதுசிருஷ்டியை - இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். ரோமர் 7-ம் அதிகாரத்தில் அப். பவுலின் வேதனையை படித்து இருக்கிறீர்களா? இதே போல் நமக்கும் வேதனை இருக்கிறது. இது காண்பிக்கிறது விழுந்து போன மனுஷ சுபாவம். இது பிறக்கும் போதே நம்மிடம் இருக்கிறது.

**சங்கீதம் 51:5**

**"இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்."**

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு விதமான பெலவீனங்கள் இருக்கிறது. அந்தந்த குடும்பத்திலிருக்கிற பெலவீனங்கள், பிறக்கும் போது தானாகவே வருகிறது. அதை வளர்க்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. தானாகவே இரத்தத்தில் ஊறும். **யோபு – மனைவியை கடிந்து கொண்டார்; மனைவியின் கிரியைகளை ஒத்துக்கொள்ளவில்லை.** உலகத்தில் கூட சில பேர் அப்படி செய்கிறார்கள். தவறுகளை எல்லாம் ஒத்துக் கொண்டு மன்னிப்புக் கூட கேட்கிறார்கள். அது மிகப் பெரிய விஷயம். முக்கியமாக நீங்களும் நானும் செய்ய வேண்டும். ஏனென்றால் நாம் வெளிச்சத்தில் இருக்கிறோம். இக்காரியத்தை தெள்ளத் தெளிவாக பார்த்துக் கொண்டு இருக்கிறோம். நம்முடைய விழுந்து போன சுபாவம் ஒரு நாய் போன்று இருக்கிறது. சரியாக கட்டுவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும்.

அதை நன்றாக வளர்க்காவிட்டால் எங்கெல்லாமோ மேயும். விழுந்து போன அசிங்கமான சுபாவம் பற்றி யோபு புத்தகத்தில் மிக அழகாக, நாடகபாணியில் இரண்டே இரண்டு வசனத்தில் கூறியுள்ளார். இந்த இரண்டு வசனத்தில் யோபு அவருடைய மனைவியை மிரட்டுகிறார். அவர் புத்திசொல்லுகிறார். விழுந்துபோன சுபாவத்தை நாம் இப்படித்தான் கையாளவேண்டும். யோபு மனைவிக்கு பின் அடுத்த கதாபாத்திரத்திற்கு போகலாம்.

## யோபுவின் மூன்று நண்பர்கள்

யோபு புத்தகத்தின் பெரிய பகுதி அவர் நண்பர்களிடம் நீண்டகாலம் பேசியது. அவர்கள் மாறி மாறி பேசுகிறார்கள். இந்த 3 நண்பர்கள் எலிப்பாஸ், பில்தாத், சோப்பார் எனப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த 3 பேரும் யோபுவின் நண்பர்கள்.

**யோபு 2:11**

**"யோபுடைய மூன்று சிநேகிதராகிய தேமானியனான எலிப்பாசும், சூகியனான பில்தாதும், நாகமாத்தியனான சோப்பாரும், யோபுக்கு நேரிட்ட தீமைகள் யாவையும் கேள்விப்பட்டபோது, அவனுக்காகப் பரிதபிக்கவும், அவனுக்கு ஆறுதல்சொல்லவும் ஒருவரோடே ஒருவர் யோசனை பண்ணிக்கொண்டு, அவரவர் தங்கள் ஸ்தலங்களிலிருந்து வந்தார்கள்."**

இந்த வசனத்தில் இருந்து யோபுவின் துக்கம் மகா கொடியது எனத் தெரிகிறது. இந்த மகா கொடிய துக்கத்தைப் பார்த்து நண்பர்கள் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. 7 நாள் மௌனமாக தரையில் உட்கார்ந்து இருந்தார்கள். இது நாடக பாணி. இதற்குள் நிறைய அர்த்தங்கள் இருக்கிறது. முதலில் இந்த 3 நண்பர்கள் யாரைக் குறிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். கதாப்பாத்திரங்கள் விஷயத்தில் இந்த 3 நண்பர்களைப் பற்றி அறிய,

**யோபு 42:7–9**

**"கர்த்தர் இந்த வார்த்தைகளை யோபோடே பேசினபின், கர்த்தர் தேமானியனான எலிப்பாசை நோக்கி: உன்மேலும் உன் இரண்டு சிநேகிதர்மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது; என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை. ஆதலால் நீங்கள் ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக்கடாக்களையும் தெரிந்துகொண்டு, என் தாசனாகிய யோபினிடத்தில் போய், உங்களுக்காகச் சர்வாங்க தகனபலிகளை இடுங்கள்; என் தாசனாகிய யோபும் உங்களுக்காக வேண்டுதல் செய்வான்; நான் அவன் முகத்தைப் பார்த்து, உங்களை உங்கள் புத்தியீனத்துக்குத் தக்கதாக நடத்தாதிருப்பேன்; என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை என்றார். அப்பொழுது தேமானியனான எலிப்பாசும் சூகியனான பில்தாதும் நாகமாத்தியனான சோப்பாரும் போய், கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடியே செய்தார்கள்; அப்பொழுது கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்."**

இந்த 3 வசனங்களில் மட்டும் யோபு மனுக்குலத்தைக் குறிப்பதில்லை. யோபுவைப் பற்றி கர்த்தர் பேசும்போது என் தாசனாகிய யோபு என்கிறார். இந்த 3 வசனங்களில் தேவன் அவருடைய அதிருப்தியை, எலிப்பாசிடம் மட்டுமே கூறுகிறார்.

எலிப்பாசு மற்றும் 2 நண்பர்கள் பில்தாத், சோப்பார் நீங்கள் பேசிய வார்த்தைகள் சரியில்லை. என் தாசனாகிய யோபு பேசினது போல நீங்கள் பேசவில்லை. உங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால், குறிப்பிட்ட பலிகள் செலுத்த வேண்டும். பலிகள் செலுத்தினால் மட்டும் போதாது. என் தாசனாகிய யோபுவிடம் போகவேண்டும். அவர் உங்களுக்காக ஜெபம் பண்ணினால், நான் அவர் முகத்தைப் பார்த்து உங்களை மன்னிப்பேன் என்கிறார். இவைகள் எல்லாம் நாடக பாணியில் பேசப்பட்டிருக்கிறது. 7-ம் வசனத்துக்கு முன் ஆறாம் வசனத்தினை பார்க்க வேண்டும். யோபு தேவனிடம் மன்னிப்பு கேட்கிறார், மனந்திரும்புகிறார், அவர் பேசின வீண் வார்த்தைகள் தவறு என உணர்ந்து தேவனிடம் மன்னிப்புக் கேட்கிறார். 7-ம் வசனத்தில் தேவன் யோபுவை பார்க்கவே இல்லை. 7-ம் வசனத்தில் தேவன் எலிப்பாசை பார்க்கிறார். எலிப்பாசிடம் பேசும்போது எலிப்பாசு, பில்தாத், சோப்பார் பற்றி தேவன் பேசுகிறார். யோபை என் தாசனாகிய யோபு என்கிறார். மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. 6-ம் வசனத்தில் யோபு மன்னிப்புக் கேட்கிறார். தேவன் பதில் கொடுக்கவில்லை. இவைகள் நாடக பாணி. யோபு குறிக்கிறார் மனுக்குலம். 6-ம் வசனம் குறிக்கிறது முழு மனுக்குலமும் ஒரு உணரப்பட்ட நிலைக்கு வருவார்கள்; மன்னிப்பு கேட்கும் நிலைக்கு வருவார்கள்; தேவனிடம் மன்னிப்பு கேட்பார்கள். தேவனிடம் மன்னிப்பு வேண்டுவது ஒன்று. தேவன் மன்னிக்கும் விதம் மற்றொன்று. 6-ம் வசனத்தில் நாடக பாணியில் யோபு தேவனிடம் மனப்பூர்வமாய் மன்னிப்புக் கேட்கிறார். ஆனால் இந்த மன்னிப்பு எப்படி வெளிப்பட்டது?

எலிப்பாசு, பில்தாத், சோப்பார் மனுக்குலத்தைக் குறிக்கும் போது, இங்கே யோபு மனுக்குலத்தைக் குறிப்பதில்லை. 7, 8, 9-ம் வசனங்களில் எலிப்பாசு, பில்தாத், சோப்பார் ஆகியோர் ஒட்டுமொத்த மனுக்குலத்தினைக் குறிக்கிறார்கள். மனுக்குலம் 3 பிரிவுகளில் உள்ளனர். அந்த மன்னிப்பை அவர்கள் எப்படிப் பெற்றுக்கொண்டனர்? எலிப்பாசிடம் விவரம் சொல்லுகிறார். இப்படிப்பட்ட விதத்தில் நீங்கள் தகனபலி செலுத்தவேண்டும். என் தாசனாகிய யோபுவின் முகத்தைப் பார்த்து உங்களை மன்னிப்பேன். தெய்வீக மன்னிப்பு எப்படி வெளிப்படுகிறது என்ற முதல் விஷயத்தை இது காண்பிக்கிறது. தேவனே என்னை மன்னித்து விடும் என்பது ஆரம்பம். இதை ஒரு முறைப்படி செய்யும்போதுதான் மன்னிப்பு வெளிப்படும். அந்த காரியத்தை இங்கே பார்க்கிறோம். 7 காளை, 7 வெள்ளாட்டுக்கடாவை தகனபலியாக செலுத்தியபின் என் தாசனாகிய யோபுவிடம் போகவேண்டும், அவர் உங்களுக்காக ஜெபம் பண்ணவேண்டும். அவருடைய முகத்தைப் பார்த்தபின்தான் உங்களை மன்னிப்பேன். இவைகளைப் பற்றி பிறகு பார்க்கலாம்.

## எலிப்பாசு யார்? பில்தாத் யார்? சோப்பார் யார்?

தேவன் எலிப்பாசிடம் மட்டும் பேசுகிறார். பில்தாத், சோப்பாரிடம் அவர் பேசவே இல்லை, தொடர்பு வைக்கவும் இல்லை. இவைகளெல்லாம் நாடக பாணி. இவர்கள் கதாப்பாத்திரங்களாக இருக்கிறார்கள். எலிப்பாசு யாரைக் குறிக்கிறார் என்ற விஷயத்தைக் கண்டு பிடிக்கவேண்டும்.

## எலிப்பாசு

"எலிப்பாசு" – என்பது எபிரேய வார்த்தை #464 (ஸ்ட்ராங்க்ஸ் – எபிரேய) அர்த்தம்...

**"என் தேவன் (பசும்-fine) பொன் (gold)"**

வேதத்தில் பொன் குறிக்கிறது திவ்விய சுபாவம். ஆசாரிப்புக் கூடாரம் கிறிஸ்துவைக் குறிக்கிறது. அங்கு இருக்கிற பரிசுத்தஸ்தலம் குறிக்கிறது கிறிஸ்துவின் உருவாக்குதல். அது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையைக் குறிக்கிறது. மகா பரிசுத்த ஸ்தலம் - அங்கு உள்ள எல்லா பொருள்களும் தங்கத்தால் ஆனது. முதலாம் ஆறு பைசோன் - அது போகும் இடம் பொன் விளையும். எனவே வேதத்தில் இந்த தங்கம் - பொன் குறிக்கிறது திவ்விய சுபாவம். இங்கு எலிப்பாசு - என் தேவன் அருமையான பொன், தங்கம்; என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு வகுப்பார்.

மனுக்குலத்தில் உள்ள 3 விதமான ஜனங்களை இந்த 3 பேரும் குறிக்கிறார்கள். மனுக்குலத்தில் யாருடைய தேவன் உண்மையான தேவனாயிருக்கிறார்? எல்லா மதங்களிலும் தேவர்கள் உண்டு. தேவ ஆராதனை நடக்கிறது. தேவனை வணங்குகிறார்கள். தேவனை விசுவாசிக்கிறார்கள். ஆனால் திவ்வியத்துவத்தில் ஒரே உண்மையான தேவன் இருக்கிறார்.; இஸ்ரயேல் தேசத்தின் தேவன் அவர். தேவாதி தேவனைப் பற்றி உலகத்தின் பாஷையில் பேசுகிறேன். உலகத்திலுள்ள எல்லா தேவர்களின் மத்தியில் அவர்தான் உண்மையான ஒரே மெய் தேவனாயிருக்கிறார். என் தேவன் உண்மையான தேவன் அருமையான பொன். எப்போது இது வெளிப்படும்? இஸ்ரயேல் ஜனங்களுக்கு முன்பாக வெளிப்படும். மூன்றாம் உலகத்தின் போரில் மகா உபத்திரவக் காலத்தில் உலகத்திற்கு முன்பாக இஸ்ரயேல் வெளிப்படும். உலகத்திற்கு முன்பு இஸ்ரயேல் நிற்கும். வேதத்தில் அதற்கு வார்த்தைக் கொடுக்கப் பட்டிருக்கிறது. நாம் வசனத்தில் வாசிக்கலாம்.

### எரேமியா 2:11

**“ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.”**

“யாக்கோபின் இக்கட்டுக் காலம்” இது மிகவும் ஆச்சரியமான நாள். இஸ்ரயேல் அந்த நேரத்தில் எப்படிப்பட்ட சூழலில் இருக்கும் என்றால், எல்லா உலகமும் அவர்களுக்கு விரோதமாக வருவார்கள். அது போன்ற சூழலுக்குள் தேவன்தான் கொண்டு வருவார்.

### சகரியா 14:2

**“எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்;...”**

எருசலேம் என்ற வார்த்தை பைபிளில் வந்தால் 95 சதவீதம் அது எருசலேம் நகரம் கிடையாது. அடையாள பாஷையில் கொடுக்கப் பட்டிருக்கிறது. இஸ்ரயேலுக்கு ஜெருசலேம் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலான எருசலேம் என்ற வார்த்தையை கர்த்தர் இயேசு தான் சொன்னார். மாம்சீக இஸ்ரயேல் குறித்து பேசும் போது “ஜெருசலமே ஜெருசலமே” என்ற வார்த்தையை பயன்படுத்தினார். இஸ்ரேலில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். இஸ்ரேலின் அடையாள பெயர் ஜெருசலேம். அது சமாதானத்தின் அஸ்திபாரம், சமாதானத்தின் திசை. எல்லா உலக தேசங்களும் எருசலேமுக்கு விரோதமாய் வரும்போது எப்படியிருக்கும்? எல்லா உலக தேசங்களும் ஒரு தேசத்திற்கு விரோதமாய் வரும். எல்லா தேசங்களும் விரோதமாய் வந்தாலும் அவர்களோடு கூட தேவன் இருக்கிறார். தாவீது கோலியாத்திடம் என்ன சொன்னார்? உன்னிடம் பட்டயம் இருக்கிறது,

ஈட்டி இருக்கிறது. நானோ தேவனுடைய நாமத்தில் உன்னிடம் வருகிறேன். இதேபோல் தேவன் இஸ்ரேலிடம் இருக்கப் போகிறார். இந்த நேரத்தில் இஸ்ரயேல் ஜனங்களே தேவனுடைய நாமத்தை அறிந்து கொண்டு, நம்மை காப்பற்றுவார் என்று தேவனை வேண்டிக்கொள்ளுவார்கள்.

*சங் 118:10–14 – "…..கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானார்."*

ஆச்சரியமான சங்கீதம். இஸ்ரயேலுக்காக வைக்கப்பட்ட சங்கீதம் இது. இஸ்ரயேல் இதை முழுவதுமாக படிக்கும்போது எந்த அளவுக்கு தேவன் நமக்காக தீர்க்கதரிசனம் எழுதியிருக்கிறார்; எந்த அளவுக்கு தேவன் நம்மேல் அன்பு வைத்திருக்கிறார் என்று தேம்பி ,தேம்பி அழுவார்கள்.

அவர்களுடைய தீமைகளுக்கு கர்த்தர் அவர்களை லேசாகத்தான் தண்டித்தார். முற்றிலுமாக மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கவில்லை; திரும்பவும் ஒரு தேசமாக வரவழைத்தார்; தேவன் இஸ்ரயேலுக்காக நிற்பார் என வேத வசனங்கள் தெளிவாகக் காண்பிக்கிறது. உலகத்திலிருந்த எல்லா தேவர்களுக்கும் மேலான தேவன், இஸ்ரேலின் உண்மை தேவன் என்று அந்த நேரத்தில் வெளிப்படும். அருமையான பொன் - நிஜமான வல்லமையுள்ள திவ்ய வல்லமையுடைய தேவன். அந்த விஷயம் வெளிப்படும். இந்த சூழலில் மற்ற ஜனங்களுடைய கண்களும் திறக்கப்படும். (இஸ்ரயேல் தேவன் பற்றி) இது சம்பந்தப்பட்ட நிழல் - தானியேலின்; தேவனைப் பற்றி அறிந்துகொள்ள தரியு இராஜாவின் கண்கள் திறக்கப்பட்டதில் காணலாம். புறஜாதி இராஜாவாகிய அவர் தானியேலின் தேவனைப் பற்றி இப்படிப்பட்ட சாட்சி கொடுக்கிறார்.

*தானியேல் 6:26*

*"என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானம்பண்ணப்படுகிறது; அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும்."*

இஸ்ரயேலின் தேவனைப் பற்றி நேபுகாத் நேச்சார் இராஜாவுடைய சாட்சி….

*தானியேல் 3:29*

*"ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப்போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்."*

ஒரு புறஜாதி இராஜா எந்த அளவுக்கு இஸ்ரயேல் தேவனுடைய உண்மையான மகிமையை கண்டுபிடித்தார் என்பதை நாம் பார்த்தோம். **எலிப்பாசின் அர்த்தம் – என் தேவன்**

**அருமையான பொன் என்று இஸ்ரயேல் மூலம் நீரூபிக்கப்படும்.** உண்மையான தேவன் யாரிடம் மட்டும் பேசுகிறார்? எலிப்பாசிடம் மட்டும் பேசுகிறார். தேவன் உலகத்தில் பேசும்போது யாரிடம் மட்டும்தான் பேசுவார்? இஸ்ரயேலிடம் மட்டும்தான் பேசுவார். இஸ்ரேல் மூலமாகத்தான் உலகத்தாருக்கு இரட்சிப்பு வரும் என்பதை இதன் மூலம் தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

**சகரியா 8:23, யோவான் 4:22**

**"அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்: ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."**

**"நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது."**

தேவன் உங்களிடம் மட்டும்தான் இருக்கிறார் என்று எல்லா ஜாதிகளும் சாட்சி கொடுப்பார்கள். உலக இரட்சிப்பு இஸ்ரயேல் வழியாகத் தான் வெளிப்படும். யோபு புத்தகத்தில் மனுக்குலத்தில் இருக்கிற 3 பிரிவுகளில், **எலிப்பாசு குறிக்கிறார் இஸ்ரயேல் தேச ஜனங்கள்.** இஸ்ரயேல் ஜனங்கள் ஒரு பிரிவு.

## பில்தாத்

"பில்தாத்" – அது எபிரேய வார்த்தை #1085... அதின் அர்த்தம்.... **"குழப்பமான (கலப்பதன் மூலம்) அன்பு"**

இது பெயர் கிறித்துவ மண்டலத்திற்கான ஒரு குறிப்பு என்று நாங்கள் அறிவுறுத்துக்கிறோம், அதன் பெருந்திரளான மக்கள் தேவனுக்கு மிகுந்த அன்பையும் வைராக்கியத்தையும் வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் சரியான அறிவு அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. குழப்பமான உபதேசங்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனைப்பற்றிய அறிவு குழப்பத்தில் இருக்கிறது. தேவனைப் பற்றி தவறான விதத்தில் அறிந்துள்ளனர். சரியான அறிவு கொடுக்கப்படவில்லை. குழப்பம், கலக்கம் இதற்காகத்தான் தேவன் "பாபிலோன்" என்று பெயர் கொடுத்திருக்கிறார்.

பெயர் கிறிஸ்தவ மண்டலத்தை இரண்டாகப் பிரிக்கலாம். ரோமன் கத்தோலிக்கர் மற்றும் புரோட்டஸ்டண்டு. யோபு புத்தகத்தில் உலகம் ஏன் இவ்வாறு பிரிக்கப்படுகிறது? ஏன் விசேஷமாய் பில்தாத்; சோப்பார் என்று பிரிக்கிறார்? சோப்பார் யார் என்று இன்னும் பார்க்கவில்லை. எலிப்பாசு, பில்தாத் என பிரிக்கிறதுக்கு காரணம் என்ன? மனுக்குலம் ஜீவனுக்கான வாய்ப்பைப் பெறும்போது எங்கிருந்து ஜீவன் பெறுவார்கள்? தேவனுடைய வசனத்திலிருந்து தான்.

**யோவான் 5:39**

**"வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன்**

*உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.”*

இந்த இரண்டு வகுப்புகளில் வேதத்தின் அறிமுகம் இருக்கிறது. எலிப்பாசு பழைய ஏற்பாடு இஸ்ரயேல். பில்தாத் புதிய ஏற்பாடு பெயர் கிறிஸ்தவ மண்டலம். ஓரளவுக்கு வேதத்தில் அறிமுகம் இருக்கும். ஜீவ புஸ்தகத்தை அவர்கள் கையில் வைத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு இது போன்ற அறிமுகம் இல்லை. அதனால்தான் இவர்களை மற்ற உலகத்திலிருந்து வித்தியாசமாக தேவன் பிரிக்கிறார். எலிப்பாசு, பில்தாத் இவர்கள் இங்கே இருக்கிற 2 யுகங்கள் யூதயுகம், சுவிசேஷயுகம் என பிரிக்கிறார். யூத யுகத்தில் தேவனுடைய வார்த்தையை பெற்றுக்கொண்ட ஜனங்கள்; இஸ்ரேல் தேசம் - பழைய ஏற்பாடு. சுவிசேஷ யுகத்தில் பேர் கிறிஸ்தவ மண்டலம் - புதிய ஏற்பாடு. 1000 வருட அரசாட்சியில் அந்த ஜீவனுள்ள வார்த்தைகளினால், இவர்கள் மற்ற மனுக்குலத்திலிருந்து வித்தியாசமாக இருப்பார்கள்.

***[இஸ்லாமிய மதத்தில் உள்ள முஸ்லீம்களும், விசுவாசிகளும் இஸ்ரேலுடனும் கிறிஸ்தவர்களுடனும் தொடர்புடையவர்கள் என்று நினைத்து அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்பதை அறிந்து கொள்ளும்போது மிகவும் ஆச்சரியப்படுவார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறோம். அதில் அவர்களின் குராண் நான்காவது புத்தகம் என்று கற்பிக்கப்படுகிறது; அவர்களின் கடவுள் அல்லாஹ்... மற்றும் மற்ற மூன்று புத்தகங்கள் பைபிள், தோரா(பெண்டேட்டூச்), ஜபூர்(சங்கீதங்களின் புத்தகம்) மற்றும் இன்ஜில்(சுவிசேஷங்கள்) ஆகியவற்றில் காணப்படுகின்றன. இதனை நாம் ஆராய்ச்சி செய்தோமெனில் உண்மையற்றதும் எவ்வித அடிப்படையற்றதுமாகும்! வேதாகமத்தின் தேவனுக்கும் குரானுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.]***

எனவே பில்தாத் வகுப்பார் பெயர் கிறிஸ்தவர்களை குறிப்பதாக இங்கு பார்க்கிறோம். முடிவாக **சோப்பார் குறிக்க வேண்டும் மீதியிருக்கிற உலக ஜனங்கள்.** வேதத்தின் அறிமுகம் அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. மீதமுள்ள உலகத்திற்கு ஏன் சோப்பார் பெயரை பயன்படுத்த வேண்டும்?

## சோப்பார்

சோப்பார்” – அது எபிரேய வார்த்தை #6691 (ஸ்ட்ராங்க்ஸ் – எபிரேய) அதின் அர்த்தம்.... “சிட்டுக் குருவி**”……. மேலும் “சீக்கிரம் புறப்படு” மற்றும் “திரும்பி வருதல்”** என்னும் அர்த்தத்தையும் கொண்டுள்ளது.

ஆம், மீதமிருக்கும் மனுக்குலத்தின் பெரும்பான்மையினரைக் குறிக்கிறது என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம், அவர்கள் தேவனுடைய அறிவிலிருந்து "சீக்கிரம் புறப்பட்டனர்" என்று சொல்லலாம்... காயீனின் நிழலான படத்திலும் அவரது வார்த்தைகளிலும் காணப்படுவது போல...

**ஆதியாகமம் 4:14**

*“இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து,....”*

"நான் உமது சமூகத்துக்கு மறைந்து விலகி" - இந்த விஷயம் குறிக்கிறது, இங்கே இருக்கிற முழு மனுக்குலமும் ஆரம்பத்திலிருந்தே தேவனுடைய தொடர்பு, தேவனுடைய அறிமுகத்திலிருந்து விலகி விட்டார்கள். இந்த மனுக்குலம் முழுமனதுடன் திரும்பி தேவனை அறிகிற அறிவின் வெளிச்சத்திற்கு வரும். "சீக்கிரமாய் கிளம்புவது" குறிக்கிறது, திரும்பி வருவது; நிரந்தரமாய் விலகி இருப்பதில்லை; முழுமனதுடன் திரும்புவார்கள்.

### சங்கீதம் 22:27

**"பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும்."**

எவ்வளவு தெளிவான வார்த்தைகள். இந்த வசனத்திலுள்ள முக்கியமான வார்த்தை "எல்லாம்"; பூமியில் இருக்கிற எல்லைகள் எல்லாம்; சிலர் இல்லை; அநேகர் இல்லை; எல்லாம். எந்த அளவுக்கு தேவனுடைய வல்லமை வெளிப்படுகிறது. எங்கெல்லாம் மனுஷர்கள் இருக்கிறார்கள் என்று தேடிப் போக வேண்டும். யோபு புத்தகத்திலிருந்து அநேக மனுஷர்கள், எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்று பார்த்தோம். அவர்களை தேடி குணமாக்கி, அவர்களுக்கு இந்த வெளிச்சத்தை தேவன் தரப் போகிறார். இந்த வசனத்திலிருந்து, சோப்பார் சீக்கிரமாக கிளம்பி திரும்பி வருகிறதைக் குறிக்கிறது. தேவனுடைய வசனத்திற்கு சம்பந்தமே இல்லாத, மீதியாயிருக்கிற மனுஷ ஜாதிக்கு, தேவன் தன்னுடைய திட்டத்தில் மிகப்பெரிய இரட்சிப்பை வைத்திருக்கிறார்.

1000-ம் ஆண்டு யுகத்தின் இரட்சிப்பு உலகத்திற்காகத்தான். சோப்பாரின் இன்னொரு அர்த்தம் அடைக்கலான் குருவி. கர்த்தர் இயேசு ஒரு பிரசங்கத்தில் லுக்கா 12 ஆம் அதிகாரத்தில் 5அடைக்கலான் குருவியை, 2-காசுக்கு விற்கிறதைப்பற்றி பேசுகிறார். அவர் அடைக்கலான் குருவியின் விலையைப் பற்றி ஏன் பேசுகிறார்? அடைக்கலான் குருவிக்கும் அதில் உள்ள உபதேசத்திற்கும் என்ன சம்பந்தம்? சோப்பாரின் இரகசியம் புரிந்தால்தான் அடைக்கலான் குருவியைப்பற்றி வேதம் என்ன சொல்லுகிறது என்று நமக்குப் புரியும்.

### லூக்கா 12:6

**"இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை."**

தேவனுடைய வசனத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் சொந்த கற்பனையில் யூகம் செய்யக்கூடாது. 5-அடைக்கலான் குருவியை 2-காசுக்கு விற்பதைப்பற்றி 12-ம் அதிகாரம் 1-ம் வசனத்திலிருந்து படித்தால் நமக்கு புரியும். கர்த்தர் ஆலோசனை கொடுத்திருக்கிறார்.

ஆம்! கர்த்தர் இந்த வார்த்தைகளைப் பேசும், லூக்கா 12-ன் அதே அதிகாரத்தில், அவர் குறிப்பாக தேவன் அவர்களைக் கவனித்துக்கொள்வது பற்றி சபையாகிய புது சிருஷ்டிக்கு கற்பித்து ஊக்குவிக்கிறார்.

நமது கர்த்தரின் இந்த வார்த்தைகளை வேறு விதத்தில் பதிவுசெய்துள்ளதை வாசிக்கலாம் –

**மத்தேயு 10:29**

**“ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது.”**

சரி, குருவி போன்ற சிறிய, சற்றும் அற்பமான உயிரினத்தின் உதாரணத்தை மட்டுமே எஜமான் பயன்படுத்த முயற்சிக்கிறாரா என்று நாங்கள் ஆச்சரியப்பட்டதுண்டு!

ஆனால் கர்த்தருடைய வார்த்தைகள் பெரும்பாலும் உவமை பாஷையாக (மத். 13: 34) இருந்ததையும், மேலும் “ஆவி”யாக (யோவான் 6:63) இருந்ததையும் உணர்ந்துகொண்டதன்மூலம்... இது எளிதான விஷயம் அல்ல என்பதை இப்போது நாங்கள் உணர்கிறோம்!

ஆகவே இங்கே “குருவி” தேவனைப்பற்றிய அறிவுக்கு மனுக்குலம் தற்போது குருட்டு நிலையில் இருப்பதை அடையாளப்படுத்துகிறது. கர்த்தர் உலகெங்கிலும் உள்ள தெய்வீக கண்காணிப்பு கவனிப்பையும் வலியுறுத்துகிறார், மேலும் அதேசமயம் புதிய சிருஷ்டியோடு அந்த கண்காணிப்பு கவனிப்பை வேறுபடுத்தியும் காட்டுகிறார், இந்த வார்த்தைகளுடன் முடிவு செய்கிறார் -

**லூக்கா 12:7**

**“ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்”.**

மெய்யாகவே, சொல்லப்போனால் புதிய சிருஷ்டியானது அனைத்து வகையான மனுக்குலத்தின் பிரதிநிதிகளாக இருக்க போகிறார்கள் (வெளிப்படுத்தல் 5:9) ஆம்! கிறிஸ்துவின் தெய்வீக ராஜரீகத்தில் உலக பாராளுமன்றம் என்று குறிப்பிடப்படக்கூடிய உறுப்பினர்களாக அவர்கள் மாறுகிறார்கள் - சீயோன் (சீயோன் உறுப்பினர்கள்) (சங்கீதம் 87: 5) இதனால் இயற்கையாகவே....

**“அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்”**

ஆம்! பல்வேறு நாடுகளில் எம்.பி.க்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் குறிப்பிட்ட பகுதிகளின் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பர். எனவே புது சிருஷ்டி ஒவ்வொருவரும் அவர்களின் குறிப்பிட்ட மக்கள் / மொழிகள் / தேசத்தின் குறிப்பிட்ட பிரதிநிதிகளாக இருப்பர். (வெளிப்படுத்தல் 5:9)

ஆம்! இது மிகத்தெளிவாக இருக்கிறது!

இப்போது அடைக்கலான் குருவிகளில் உள்ள “ஐந்து” என்றால் என்ன?

சரி, வேதாகமத்தில் உள்ள ஆவிக்குரியக் கருத்துகளை அடையாளப்படுத்த தேவன் நம்மைச் சுற்றியுள்ள இயற்கையின் பல்வேறு பகுதிகளான மேகங்கள், நீர், மரங்கள், நெருப்பு, மழை போன்றவற்றைப் பயன்படுத்துவதால், வேதாகமத்தில் உள்ள

அடையாளங்களை நாம் அறிவோம். அதைப்போலவே தேவன் எண்களை எண் அடையாளங்களாகப் பயன்படுத்துகிறார். எண் 7 தெய்வீகத்தன்மையையும் பூரணத்தையும் குறிக்கிறது என்பது நினைவில் இருக்கிறதா! இதனால் எண் அடையாளமான “ஐந்து” எதைக் குறிக்கும்?

நாம் ““ஐந்து” ஐக் இங்கெல்லாம் காண்கிறோம் -

- மத்தேயு 25வது அதிகாரம் மற்றும்...... “ஐந்து” புத்தியுள்ள கன்னிகைகள் மற்றும் “ஐந்து” புத்தியில்லாக் கன்னிகைகள்.
- ஐந்து புத்தகங்களைக் கொண்ட தோரா அல்லது பென்டாட்யூக் (Pentateuch),
- நான்கு சித்திரத்தையல் வேலையாகச் செய்யப்பட்ட திரைச்சீலைகள் தொங்கும் ஐந்து தூண்கள் (கம்பங்கள்) கொண்ட, ஆசாரிப்புக்கூடாரத்தின் "வாயில்" .
- ஆசாரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்தின் வெளிப்புற சணல்நூல் திரை சுவரின் உயரம் ஐந்து முழம்..

சரி, வேதவசனங்களில் ஐந்து என்பது மனிதனுக்கான ஒரு எண் அடையாளமாகும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம், உதாரணமாக “ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள்” மற்றும் “ஐந்து புத்தியில்லாக் கன்னிகைகள்” மாம்சத்தில் உள்ள புது சிருஷ்டியைக் குறிக்கின்றன, இங்கு இரு வகுப்பாரின் “ஐந்து” என்பது மாம்ச சரீரத்தில் உள்ள ஆவி ஜெநிப்பித்தலைக் குறிக்கிறது அதைப்பற்றி நாம் 2 கொரிந்தியர் 4: 7 - .... “இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்” – என்று காண்கிறோம்.

**ஆகவே “ஐந்து அடைக்கலான் குருவிகள்” தற்போதைய குருட்டு நிலையில் உள்ள மனித இனத்தை அடையாளப்படுத்தும்!**

மற்றும் “இரண்டு அடைக்கலான் குருவிகள்” இரண்டு பகுதிகளாக உள்ள தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது - நல்ல சமாரியனும் இரண்டு வெள்ளிப் பணமும் நினைவில் இருக்கிறதா (லூக்கா 10:35)?

ஆம்! தேவனுடையத் தெய்வீக திட்டத்திலும் வார்த்தையிலும் இயேசு மனுக்குலத்தையேக் குறிப்பிடுகிறார், ஆனால் அதைக்குறித்த விவரங்கள் பல உள்ளன, அதற்கான நேரம் இப்போது நமக்கு இல்லை. சோப்பரைப் பற்றிய எங்கள் விளக்கத்திற்கான ஆதாரங்களைத் தரவே நாங்கள் அதைப் பார்த்தோம்!

ஆ! மத்தேயு 10:29 -இல் காணப்படும் “ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகள்” என்றால் என்ன என்று - யாராவது கேட்பீர்களானால்?

அது லூக்கா 12 ஆம் அதிகாரத்தில் இயேசு முன்பு கற்பித்தவற்றின் யூத கண்ணோட்டத்தைப் பற்றியது! மனித இனம் அவர்கள் பார்வையில் இரண்டு பகுதிகளாக -

யூத மற்றும் புறஜாதியார் என்று இருக்கிறது மற்றும் தேவனுடைய வார்த்தை ஒரு பகுதியாக - பழைய ஏற்பாடு என்று இருக்கிறது. ஆம்! யெகோவாவின் வார்த்தையின் இரண்டு பகுதிகளை யூதர்கள் இன்னும் அறிந்திருக்கவில்லை என்பதை நினைவில் வையுங்கள்!

சரி, நாம் இப்போது தொடரலாம்....!

**யோபு 42:7–9**

***“கர்த்தர் இந்த வார்த்தைகளை யோபோடே பேசினபின், கர்த்தர் தேமானியனான எலிப்பாசை நோக்கி: உன்மேலும் உன் இரண்டு சிநேகிதர்மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது; என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை. ஆதலால் நீங்கள் ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக்கடாக்களையும் தெரிந்துகொண்டு, என் தாசனாகிய யோபினிடத்தில் போய், உங்களுக்காகச் சர்வாங்க தகனபலிகளை இடுங்கள்; என் தாசனாகிய யோபும் உங்களுக்காக வேண்டுதல் செய்வான்; நான் அவன் முகத்தைப் பார்த்து, உங்களை உங்கள் புத்தியீனத்துக்குத் தக்கதாக நடத்தாதிருப்பேன்; என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை என்றார். அப்பொழுது தேமானியனான எலிப்பாசும் சூகியனான பில்தாதும் நாகமாத்தியனான சோப்பாரும் போய், கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடியே செய்தார்கள்; அப்பொழுது கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்.”***

ஆ! ஆகவே, எலிப்பாசு இஸ்ரயேலுக்கு நிழல் என்பதையும்... மேலும் பில்தாத் பெயர் கிறிஸ்தவ மண்டலத்தின் நிழல் என்பதையும் மற்றும் சோப்பார் உலகில் மீதியிருப்பவர்களுக்கு நிழல் என்பதையும் இப்போது நாம் அறிவோம்.

இது மனுக்குலம் முழுவதையும் உள்ளடக்கியது, முக்கிய கவனம் இஸ்ரயேல் மீதே இருக்கும். இப்போது 8 வது வசனம் தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான பாவநிவாரணத்திற்கான அடிப்படையை விவரிக்கிறது - “ஏழு காளைகள் மற்றும் ஏழு ஆட்டுக்கடாக்கள்” இது என்ன அர்த்தம்? இது நாடகபணி. இதில் நிறைய விஷயங்களைப் புரிந்து கொள்ளலாம். எலிப்பாஸ், பில்தாத், சோப்பார் யாரென்று புரிந்து கொண்டோம். இங்கே யோபு யார் என்று இன்னும் புரியவில்லை. என் தாசனாகிய யோபு என்று குறிப்பிடுகிறார். 3 பேரிடம் எனக்கு அதிருப்தி. என் தாசனாகிய யோபு மாதிரி நடக்கவில்லை; பேசவில்லை; உங்களை மன்னிக்க வேண்டுமானால் 7 காளைகள் 7 வெள்ளாட்டுக்கடாவை எடுத்து, யோபுவிடம் போய் உங்களுக்காக சர்வாங்க தகன பலி செலுத்த வேண்டும் என்கிறார். அப்படிச் செய்தால் நான் யோபுவின் முகத்தைப் பார்த்து உங்களை நான் மன்னித்து விடுகிறேன் என்று தேவன் சொல்லுகிறார். இந்தக் காரியத்தை நாம் எப்படி புரிந்து கொள்வது? இது நாடகபாணி. இதில் எண்ணிக்கை, அடையாளங்கள் இருக்கிறது.

ஆம்! மீட்பரும் இரட்சகருமான கிறிஸ்துவினுடைய சுவிசேஷ யுகத்தின் “விசேஷித்த பலிகளை” இவை குறிக்கின்றன.

- “ஏழு காளைகள்”– இயேசுவையும் "மீட்கும் பொருளையும்" குறிக்கிறது ... பின்னர் அது **"ஏற்ற காலங்களில்"... "எல்லா மனிதர்களுக்கும் விளக்கப்படும்." (I தீமோத்தேயு 2: 6)**

"ஏழு ஆட்டுக்கடாக்கள்" – "ஆட்டுக்கடா" வில் பாவநிவாரணத்தின் ஒரு பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ள "கிறிஸ்துவின்" சரீரமாகிய சபையைக் குறிக்கிறது.

காளைகள் மற்றும் ஆட்டுக்கடாக்கள் இரண்டின் "ஏழு"ம் பாவநிவாரணத்தின் இந்த ஏற்பாடு தெய்வீக தோற்றத்தைக் கொண்டது என்பதைக் குறிக்கிறது.

ஆம்! இயேசு **யோவான் 3 : 16 – "தேவன், ... தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்....."**

மற்றும் சபையானது **ரோமர் 12 : 1 –**
**"நீங்கள் உங்கள் சரீரங்களைப் ... ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு"**

நாம் பாவிகள். பாவியாக இருந்தோம். பாவியாக இருக்கிறோம். நாம் பாவிகளாக போராடுகிறோம். சாகிற வரைக்கும் பாவியாக சாவோம் என்று சொல்லவில்லை. பாவத்திடம் போராடி நாம் ஓட்டத்தை முடிக்க வேண்டும். இது ஆச்சரியமான விஷயம். இது தான் தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு. இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் நம் ஒவ்வொருவருக்காவும் சிந்தப்பட்டது. சுவிசேஷயுகத்தில் இருக்கிற புதுசிருஷ்டி தங்கள் தங்கள் பாகத்தை வாங்கி, அவர்கள் பரிபூரண மாம்சீக சுபாவத்தை விரும்பாமல், பரிபூரண (எண்ணப்பட்ட) மாம்சீக சுபாவம் தரித்துக் கொண்டு, அதை தேவனுக்குப்பலியாக செலுத்துகிறார்கள். தேவனுக்கு ஏற்ற பலிகள் பரிசுத்தமான பலிகள். வெளியே இருக்கிற பாவத்தைப் பார்க்கவேண்டாம். வெளியே இருக்கிற பாவியைப் பார்க்க வேண்டாம். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக பரிபூரணமான மாம்சீக சுபாவமாக எண்ணப்பட்ட நிலையில் இருக்கிறோம். அந்த பரிபூரண மாம்சீக சுபாவத்தைத்தான் பலி செலுத்தியிருக்கிறோம். இது தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு செய்யப்பட்ட முழு ஏற்பாடு. சாத்தான் தன்னுடைய முழு பிரயாசத்தையும் காண்பித்து, இது அந்த அளவிற்கு ஒரு பெரிய ஏற்பாடு அல்ல. நீங்கள் எல்லாம் பாவிகள்; பெலவீனத்தில் வீழ்வீர்கள்; உங்களால் ஜெயிக்க முடியாது என்று நம்மை சோர்வடையச் செய்து விழப்பண்ணுவான். நாம் விசுவாசமாய் இருக்கவேண்டும்.

சரி, இங்கே யோபு எதைக் குறிக்கிறார்?
ஆம், நாம் வாசிக்கலாம் –

**"என் தாசனாகிய யோபினிடத்தில் போய், உங்களுக்காகச் சர்வாங்க தகனபலிகளை இடுங்கள்; என் தாசனாகிய யோபும் உங்களுக்காக வேண்டுதல் செய்வான்; நான் அவன் முகத்தைப் பார்த்து ..."**

நிச்சயமாக இங்கே யோபு மனுக்குலத்திற்கான நிழல் அல்ல!

இது மீண்டும் மீண்டும் என் தாசனாகிய யோபு என குறிப்பிடுகிறார். பின்னர் அவர் யார் அல்லது எதை இங்கு அடையாளப்படுத்துகிறார்? புரிந்து கொள்வதற்கான திறவுகோல் இந்த வார்த்தைகளில் காணப்படுகிறது ...

"நான் அவன் முகத்தைப் பார்த்து"

ஆம்! தேவனை ஏற்றுக்கொள்வதற்கான இஸ்ரயேல் உள்ளிட்ட உலகத்திற்கான வழிமுறைகள் அல்லது ஒரே வழியை யோபு அடையாளப்படுத்துகிறார். மேலும் அது எதுவாக இருக்கும்? பதிலை நாம் வாசிக்கலாம் –

## எரேமியா 31:31–33

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

## எபிரெயர் 8:10–12

"அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்தநாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்."

**ஆம்!! இங்கு யோபு புதிய உடன்படிக்கையை அடையாளப்படுத்துகிறார்.**

புதிய உடன்படிக்கை ஏற்பாட்டின் மூலம் பாவநிவாரணமும் தேவனுடனான ஒப்புரவாக்குதலும் நடைபெறும் என்று இஸ்ரயேலில் தொடங்கி, பின்னர் மனுக்குலம் முழுவதையும் சென்றடையப் போகிறது.

ஏசாயா 2: 2, 3 வார்த்தைகளில் நாம் வாசிப்பது போல -

"நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம்"

எல்லா ஜனங்களும், எல்லா மதங்களும், எல்லா கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்கள் இரட்சிப்படைய இஸ்ரயேலுக்குப் போக வேண்டும். பெயர் கிறிஸ்தவ சபையில் ஒரு விசேஷித்தவர்களாக ரோமன் கத்தோலிக்கர் இல்லை; புரட்டஸ்டண்டு எல்லாரும் இல்லை; ஒரு சில சபைகள் நினைக்கிறார்கள் மணவாட்டியாக ஆகிடுவோம் என்று. இவர்கள்

கர்த்தருக்கு மிகவும் நெருக்கமாக, விசேஷமாக ஊழியம் செய்துகொண்டு இருப்பதாக நினைத்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இப்போது இருக்கிறார்கள். எப்போது இவர்களுக்கு வெளிப்படும்? இவர்கள் ஏமாற்றப்படவில்லை. வஞ்சகத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்கான வாசல் அடைக்கப்படுவது தெரியவரும்.(லூக்கா 13:25—28)

வீட்டு எஜமான் கோபப்படவில்லை. அவர் என்ன காரியம் சொல்லுகிறார் என்றால் வாய்ப்பு முடிந்துவிட்டது என்று. நீங்கள் கேட்டாலும் இல்லை பரம அழைப்பு முடிந்துவிட்டது என்று. இந்த வசனம் திரள் கூட்டத்தைப் பற்றிச் சொல்கிறது என்று நினைக்கலாம். ஆனால் ஆண்டவரே, ஆண்டவரே என்று இரண்டு தடவை வருகிறது. இவர்கள் இரண்டு வகுப்பாரைக் குறிக்கிறார்கள். ஒரு வகுப்பார்- திரள் கூட்டத்தார், மற்றொரு வகுப்பார் அக்கிரமக்காரர். உடன்படிக்கைக்கு விரோதமாக, தேவனுக்கு துரோகம் பண்ணுவார்கள். ஆனால் இந்த அக்கிரமக்காரன் திரள் கூட்டம் இல்லை. திரள்கூட்டம் ஆபிரகாம்- ஈசாக்கு யாக்கோபிடம் இருக்க மாட்டார்கள்.

தெளிவாகத் தெரிகிறது பேர் கிறிஸ்தவ மண்டலத்தில் உள்ள சபைகள் தங்களை மணவாட்டியாக நினைத்துக் கொண்டிருக்கிறர்கள். ஒரு சமயம் வரும், அவர்களுக்கு தெளிவாக வெளிப்படும், நாம் சத்தியத்தில் இல்லை; அக்கிரமத்தின் இரகசியத்தின் வேலைக்காரர்களாக; அந்தி கிறிஸ்துவின் வேலைக்காரர்களாக இருந்திருக்கிறோம் என்று. ஆச்சரியமான விஷயம். ஆச்சரியமான வசனம். அவர்களும் உலக இரட்சிப்பிற்குள் வருவார்கள். உலக இரட்சிப்புக்குள், இஸ்ரயேலர் ஆரம்பத்தில் வர மாட்டார்கள்; தீர்க்கதரிசன வசனம் எசேக்கியல் 47-ல் பார்க்கும்போது முதலில் கணுக்கால், முழங்கால், இடுப்பு மற்றும் தலைக்கு மேல். இந்த விஷயத்தைப் பார்க்கும்போது கொஞ்சம் கொஞ்சமாகத்தான் இராஜ்யத்திற்குள் வருவார்கள். ஆம், ஆரம்பத்தில் கிறிஸ்தவ தேசங்களும், முஸ்லீம் தேசங்களும் கூட வரமாட்டார்கள். இஸ்ரயேலிடம் யாருக்கு பிரச்சனை இல்லையோ, அவர்கள் வருவார்கள்; மற்றவர்கள் காலப்போக்கில் வற்புறுத்தித்தான் வரவேண்டி இருக்கும்.

**சகரியா 8:23**

**"அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்: ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."**

ஆம்! சகரியா 8: 23-ல் நாம் படித்ததுப் போலும்!

ஆ! ஆம்! கர்த்தரின் ஏற்றுக்கொள்ளுதலும் ஆசீர்வாதங்களும் இந்த புதிய உடன்படிக்கையின் மூலம்தான் இருக்கும், ஆகவே இங்குள்ள யோபு அந்த புதிய உடன்படிக்கையை தெய்வீகமாக ஏற்றுக்கொள்வதற்கான இருக்கும் ஒரே வழிமுறையைக் குறிக்கிறார்!

ஆனால், அதிகாரம் 42: 7 முதல் 9 வரையிலான இந்த விசித்திரமான மூன்று வசனங்களில்தான் யோபுவின் முக்கியத்துவம் எல்லா மனிதர்களையும் அடையாளப்படுத்துவதிலிருந்து புதிய உடன்படிக்கைக்கு மாறுகிறது என்பதை நினைவில் கொள்வோம்.

சரி, இந்த 3 வசனங்களில் மட்டுமே புதிய உடன்படிக்கையை அடையாளப்படுத்துவதற்காக யோபின் தன்மையை ஏன், எந்த காரணத்திற்காக மாற்றப்பட்டுள்ளது என்று யோசிப்பவர்களுக்கு, நாங்கள் ஒரு சிந்தனையை பரிந்துரைக்க விரும்புகிறோம்!

இந்த ஆய்வில் நாம் இதுவரை பார்த்தபடி, இந்த புஸ்தகம் யோபுவின் ஜெபத்தோடுக்கூடிய "விருப்பம்" (யோபு 31:35) ஆகும், மேலும் இதுப்பற்றி அவருக்கேத் தெரியாது, ஏனென்றால் அவருடைய வாழ்க்கை முடிந்தபின், அது நிச்சயமாக தேவனால் தொகுக்கப்பட்டிருக்கக்கூடிய ஒன்றாகும். இந்த "புஸ்தகத்தை" தொகுப்பதில் கர்த்தர் யோபுவின் வாழ்க்கையில் மெய்யான உண்மை நிகழ்வுகளை எடுத்துள்ளார், மேலும் அதில் நாடகப்பாணியின் ஊடகத்தைப் பயன்படுத்தி மனிதகுலத்திற்கான யுகங்களைப் பற்றின தெய்வீகத் திட்டத்தின் படத்திலும், தீமையின் அனுமதியையும் பிணைத்துள்ளார்.

இந்த அற்புதமான படத்தை வரைந்திட பரமத் தகப்பனின் மாபெரும் வல்லமை தனது வாழ்வில் இடைப்பட்டதற்காக யோபு நிச்சயமாக அங்கீகரிக்கும் அதே வேளையில், யோபுவின் 42 வது அதிகாரத்தில் 7 முதல் 9 வரையிலான இந்த மூன்று வசனங்களில் இங்கே நாங்கள் அறிவுறுத்துகிறது யாதெனில்... இது தேவனுடைய ராஜ்யத்தில் யோபுவின் வெகுமதியையும் நிலையையும் குறிக்கிறது. ஆம்! மற்ற முற்பிதாக்களுடன், அவர்களில் ஒருவராக அவர் இருந்து "புதிய பூமி" நிர்வாகத்தின் ஒரு பகுதியாக இருப்பார் என்பதற்கான ஒரு குறிப்பு!

வசனம் 7 முதல் 9 வரை நாம் படிக்கும்போது இந்த முடிவுக்கு வருகிறோம், நாம் தொடர்ந்து இந்த வாக்கியத்தை வாசிக்கிறோம் -

*"என் தாசனாகிய யோபு"*

➡ மீண்டுமாக வசனம் – 8 இல் –

*"என் தாசனாகிய யோபினிடத்தில் போய்"*

*"என் தாசனாகிய யோபும் உங்களுக்காக வேண்டுதல் செய்வான்;*
*நான் அவன் முகத்தைப் பார்த்து"*

➡ மற்றும் இறுதியாக வசனம் – 9 இல்-

*"கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்"*

ஆம்! மீண்டும் இது "பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பதின்" (சங்கீதம் 45:16) ஒரு பகுதியாக தேவனுடைய ராஜ்யத்தில் யோபுவின் எதிர்கால வாழ்க்கைப்பற்றிய ஒரு உண்மை நிகழ்வு.

தேவனுடைய ராஜ்யத்தின் கண்ணுக்குத் தெரிகின்ற பகுதியின் புதிய பூமியானது எவ்வாறு புதிய உடன்படிக்கையின் கருவி மூலம் முழு மனுக்குலத்தின் இரட்சிப்பையும் தேவனுடனான ஒப்பரவாகுதலை விரிவுபடுத்துகிறது என்பதை யோபுவாலும் இந்த அற்புதமான புஸ்தகத்தை வாசிக்கும் அனைவராலும் அங்கீகரிக்கப்படும்... மற்றும் யோபு அந்த தெய்வீக ஏற்பாடு மற்றும் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக இருப்பார்.

அடுத்த வசனத்திலிருந்து வசனம்-10 முதல் இறுதி வசனம்-17 வரை அவர் முழு மனுக்குலத்திற்கும் ஒரு நிழலாக வருகிறார்! இப்போது அடுத்த கதாப்பாத்திரத்திற்கு வரலாம் –

## எலிகூ

அடுத்த கதாபாத்திரம் எலிகூ. இவர் விசித்திரமான, விநோதமான கதாபாத்திரம். இவர் வயதில் பெரியவர் இல்லை. இளமையானவர். ஆனால் ஞானம் அதிகம். தேவனுடைய வார்த்தைகளில் அறிவு அதிகம். எலிகூவுக்கும் யோபுவுக்கும் சம்பந்தம் இல்லை. அவருக்கும் எலிப்பாஸ், பில்தாத் சோப்பார் ஆகிய 3 பேருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆனால் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டு, நீங்கள் பேசினது சரியல்ல. நான் உங்களை விட வயதில் இளையவர். ஆனால் தேவனைப் பற்றி நீங்கள் பேசினது சரியல்ல என்று கூறுவதை பார்க்கிறோம். யோபு புத்தகம் 32-ம் அதிகாரத்திலிருந்து 37-ம் அதிகாரம் கடைசிவரை எலிகூ கதாபாத்திரம் வருகிறது. அதற்குப் பின் எலிகூ பற்றி எங்கேயும் குறிப்பிடவில்லை. அதிகாரம் 38-லிருந்து 42-ம் அதிகாரம் வரைக்கும் யோபு, எலிப்பாஸ், பில்தாத், சோப்பார் ஆகியோரைப் பற்றி பார்க்கிறோம். எலிகூவை பார்க்கவில்லை. எலிகூ யார்? 32-ம் அதிகாரத்திலிருந்து 37-ம் அதிகாரம் வரைக்கும் பேசுகிறவர் யார்? யோபு புத்தக ஆராய்ச்சியின் ஆரம்பத்தில், யோபு புத்தகம் தேவனுடைய தெய்வீகத் திட்டத்தை சுருக்கமாக காண்பிக்கிறது என்றும் பார்த்தோம்.

இந்த திட்டம் 7000 வருஷம். யோபு புத்தகத்தில்

- அதிகாரம் 1-லிருந்து 37 வரை தீமையின் அனுமதி காலம் 6000 வருஷம்.
- அதிகாரம் 38-லிருந்து 42-ம் அதிகாரம் வரை ஆயிர வருட அரசாட்சி.
- 32-ம் அதிகாரத்திலிருந்து 37-ம் அதிகாரம் வரை எலிகூ வெளிப்படுகிறார்.

எலிகூ யாரைக் குறிக்கிறாரென்று கண்டுபிடிக்க வேண்டும்.

**யோபு 32:2**

***“அதினால் ராமின் வம்சத்தானான பூசியனாகிய பரகெயேலின் குமாரன் எலிகூவுக்குக் கோபம் மூண்டது; யோபு, தேவனைப்பார்க்கிலும் தன்னைத்தான் நீதிமானாக்கினதினிமித்தம், அவன்மேலும் அவனுக்குக் கோபம் மூண்டது.”***

எலிகூ ராமின் வம்சத்தான். அவர் பரகெயேலின் குமாரன். பரகெயேல் ஒரு பூசியன் என்று குறிப்பிடப்படுகிறது. இந்த எலிகூவின் அர்த்தம் என்ன?
எலிகூ எந்த வகுப்பார்?

எல்லா ஆதாரங்களும் அவர் சுவிசேஷ யுகத்தின் புது சிருஷ்டியை... “ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட” கிறிஸ்துவின் சபையை அடையாளப்படுத்துகின்றன என்ற சற்றே உறுதியான உண்மையை சுட்டிக்காட்டுகின்றன. இப்போது அதற்கான ஏராளமான ஆதாரங்களைப் பார்க்கலாம் –

1. அவரது பெயர் மற்றும் பாரம்பரியத்தின் விவரங்கள் மற்றும் அவற்றின் பொருள் –

- எலிகூ - # 453 – எபிரெய அர்த்தம் **"அவர் என் தேவன்"**
- பரகெயேல் # 1292 – எபிரெய அர்த்தம் – **"கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்"**
- பூசியன் # 940 – எபிரெய அர்த்தம் – **"அவமதிப்பு/ அலட்சியம்"**
- ராமின் வம்சத்தான் # 7410 எபிரெய அர்த்தம் – **"உயர்ந்த"** அல்லது **"மேன்மையடைதல்"**

ஆம்! இவை அனைத்தும் புது சிருஷ்டியைச் சரியாக விவரிக்கிறது அல்லவா–

**யோவான் 1:12**

*"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்."*

**மனுஷஜாதியில் புதுசிருஷ்டி வகுப்பாரை எலிகூ குறிக்கிறார்** (இதை தொடர்ந்து வருபவைகளினால் உறுதிப்படுத்தலாம்). இது தேவனுடைய தெய்வீகதிட்டத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிந்திய விலையேறப்பெற்ற இரத்தத்தின் வழியாய் வெளிப்படுகிறது. இரண்டு இரட்சிப்பு, முதல் இரட்சிப்பு வெளிப்படுகிறது சுவிசேஷயுகம் காலத்தில். இது எவ்வளவு பெரிதான இரட்சிப்பு; இதில் தேவன் உருவாக்குகிறார் மனுஷ ஜாதியிலிருந்து ஒரு புதுசிருஷ்டிப்பு. இந்த புதுசிருஷ்டிப்புக்கு கிடைக்கிறது மேலான ஆசீர்வாதம். தேவன் எல்லா சிருஷ்டிக்கும் ஆசீர்வாதம் கொடுக்கப்போகிறார். ஆனால் இந்த அளவு ஆசீர்வாதம் தேவன் அவருடைய எந்த சிருஷ்டிக்கும் தரவில்லை. இனி தரவும் மாட்டார். ஆனால் (பரகெயேல்) இந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள அந்த வகுப்பார் (பூசியன்) அவமானத்தை அனுபவிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இந்த சுவிசேஷ யுகத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் இவர்கள்தான் (ராம்) உயர்த்தப்பட்டவர்களாக இருப்பர். ஆச்சரியமான புதுசிருஷ்டி இது.

**1 பேதுரு 5:6 – "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்."** அந்நாளில் உண்மையான ராமின் அர்த்தங்களை பைபிளில் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். இந்த விஷயங்கள் எலிகூ தான் புதுசிருஷ்டி என்று நிரூபிக்கிறது. அவர் பேசிய வார்த்தைகள், போதனைகளைத் தெளிவாக புரிந்து கொள்ளலாம். எலிகூ சுவிசேஷயுகத்தின் புதுசிருஷ்டி என்று அடையாளம் காணலாம்.

2. இப்போது எலிகூ பேசின வார்த்தைகள்

**யோபு 32:6**

**"ஆதலால் பரகெயேலின் குமாரன் எலிகூ என்னும் பூசியன் பிரதியுத்தரமாக: நான் இளவயதுள்ளவன், நீங்களோ விருத்தாப்பியர்; ஆகையால் நான் அஞ்சி, என் அபிப்பிராயத்தை உங்களுக்கு முன்பாக வெளிப்படுத்தப் பயந்திருந்தேன்."**

நான் இளவயதுள்ளவன் நீர் விருத்தாப்பியார். இதன் அர்த்தம் இந்த வகுப்பாரின் எண்ணிக்கை மிக அற்பமாய் இருக்கிறது. மிகவும் சிலர் தான் இருக்கிறார்கள். முழு மனுக்குலத்தின் கணக்கில் 1,44,000 பேர். இது **1%** கூட இல்லை. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலக்கட்டத்தில் இந்த புதுசிருஷ்டியின் அழைப்பு பெற்றுக்கொண்டிருக்கும் ஜனங்கள் மாம்சீக சரீரத்தில் நம்பிக்கைக்குரிய அழைப்பில் இருக்கிறார்கள். அவர்கள் கணக்கு எவ்வளவு? உலக ஜனங்கள் மிக அதிக அளவில் இருக்கிறார்கள். பெயர் கிறிஸ்தவர்களுக்கு முன் கணக்கிட்டாலும் புதுசிருஷ்டி எவ்வளவு சதவீதம் இருக்கிறார்கள்.

இப்போது அழைக்கப்பட்ட புதுசிருஷ்டி பல வகுப்பாரில் இருக்கிறார்கள். பல நிலைகளில் இருக்கிறார்கள். இன்று உலகில் உள்ள ஒட்டு மொத்த வேதமாணவர்களை கணக்கெடுத்தாலும் 15 ஆயிரத்துக்கு மேல் இருக்காது. 20,000 என்றே வைத்துக்கொள்ளலாம். இன்றைக்கு இருக்கிற பேர் கிறிஸ்தவ மண்டலம் 200 கோடி உலகத்தில் இருக்கிறார்கள். 200 கோடியில், 20,000 என்ன கணக்கு **1%** கூட இல்லை. உலகத்தின் கணக்கில் 750 கோடிக்கு 20,000 கணக்கு எப்படி இருக்கும்? மிகவும் அற்பமாய் இருக்கும். உண்மையாய் இவ்வகுப்பார் இளம் வயதுள்ளவர்கள் கணக்கில் மிகவும் சிலர் அற்பமாக இருக்கிற கணக்கில் இருக்கிறார்கள். தேவன் இந்த வகுப்பாருக்கு அழைப்பு கொடுத்து இருக்கிறார்.

**யோபு 32:18,19**

***"வார்த்தைகள் எனக்குள் நிறைந்திருக்கிறது; என் உள்ளத்திலுள்ள ஆவி என்னை நெருக்கி ஏவுகிறது. இதோ, என் உள்ளம் அடைக்கப்பட்டிருந்து, புதுத் துருத்திகளை முதலாய்ப் பீறப்பண்ணுகிற புது ரசத்தைப்போலிருக்கிறது."***

இது தான் நம்முடைய நிலை. புதுசிருஷ்டிக்கு தேவன் எவ்வளவு சத்தியம் கொடுத்திருக்கிறார்? எவ்வளவு விவரம் கொடுத்திருக்கிறார்? இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், மற்றவர்களிடம் இதை சொல்வதற்கு எவ்வளவு ஆர்வமாக இருக்கிறோம். கொஞ்சம் வாய்ப்பு கிடைத்தாலும் எவ்வளவு பேசுகிறோம். இது தான் புதுசிருஷ்டியின் நிலை. அவ்வளவு அறிவு தேவ இரகசியம் தேவன் புதுசிருஷ்டிக்கு கொடுத்து இருக்கிறார். தேவன் கொடுத்த பரிசுத்தஆவி ஏவுதலின் மூலமாக புதுசிருஷ்டிக்கு இது வெளிப்படுத்துகிறார்.

**யோபு 33:4**

***"தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வவல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது."***

இவர் மாம்சீக உயிர் பற்றி பேசவில்லை. மாம்சீக உயிருக்கு நாம் தேவனிடம் சுவாசம் பெற்றுக்கொள்கிறோம். இது "தேவனுடைய ஆவி" - சத்திய ஆவி மூலம் புது சிருஷ்டியானது ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை வெளிப்படுத்துகிறது. **யாக்கோபு 1:18** – ***"அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்."***

## யோபு 33:6

**"இதோ, உம்மைப்போல நானும் தேவனால் உண்டானவன்; நானும் மண்ணினால் உருவாக்கப்பட்டவன்."**

மாம்ச சரீரத்தில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் நடக்கிறது என்னும் புது சிருஷ்டி பற்றின மற்றொரு அற்புதமான சத்தியம். புதுசிருஷ்டியின் பெரிய சத்தியம். இந்த ஜெநிபித்தல் இந்த புதுசிருஷ்டி, இந்த பொக்கிஷம் மண்பாண்டத்தில் பெற்று இருப்பதை குறிக்கிறது. 2 கொரிந்தியர் 4:7 – **"இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்."**

தேவன் மனுஷஜாதி உருவாக்கும்போது ஒரு சரீரம் உண்டாக்கி, நாசியில் அவருடைய ஆவியை ஊதி, உயிர் கொடுத்து இருக்கிறார். ஒரு சிந்தை பெற்று இருக்கிறோம். சிந்தை என்பது உலகத்தில் கிறிஸ்துவின் சாயலாக வரவேண்டும். நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுப்பதுதான் 7000 வருஷம் நடந்து கொண்டிருக்கிறது. மனுஷஜாதிக்கு முதலில் ஒரு சரீரம் பின்பு சிந்தை கொடுக்கப்பட்டது; ஆனால் புது சிருஷ்டிக்கு முதலில் சிந்தை(ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல்) பின்பு அந்த சிந்தை வளர்ச்சிக்குத்தக்கதாக மகிமையடைந்து புதிய மேனியை(ஆவியில் பிறத்தல்) பெற்று கொள்கிறது. இந்த வளர்ச்சிக்குத்தக்கதாக, மகிமைக்குத்தக்கதாக வித்தியாசம் இருக்கும். சிருஷ்டிக்கும் விதம் - தேவனால் மண்ணினால் உருவாக்கப்பட்டேன், உருவாக்கப்பட்ட ஆரம்பம் ஆவியின் சிந்தைதான், ஆவியின் சரீரம் இல்லை. மாம்ச சரீரம் தெய்வீகத் திட்டம் வரைபடத்தில் அந்த **'M' PLAN** -னில் இடைவெளி விட்டு **BROWN, GREY** என காண்பிக்கிறது ஆவியின் சிந்தை. மாம்ச சரீரம் இங்கு எலிகூ குறிக்கிறது.

## யோபு 33:14

**"தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம்விசை பார்த்துத் திருத்துகிறவரல்லவே."**

தெய்வீகத்திட்டத்தில் 2 காலக் கட்டங்கள் **[2 DISPENSATIONS]** கோட்பாடுகள் உள்ளது. அந்த 2 காலக்கட்டங்கள், 2 உலகங்கள் பற்றி பேசுகிறது. இது பெயர் கிறிஸ்தவர்களுக்கு தெரியாது. யூதர்களுக்கு தெரியாது. இது ஆச்சரியமான போதனைகள் **[DOCTRINE]** தேவன் நமக்கு வெளிப்படுத்தி இருக்கிறார்.

## யோபு 33:23

**"ஆயிரத்தில் ஒருவராகிய சாமாசிபண்ணுகிற தூதனானவர் மனுஷனுக்குத் தம்முடைய நிதானத்தை அறிவிக்கும்படிக்கு, அவனுக்கு அநுசாரியாயிருந்தாரேயாகில்,..."**

மனுஷ ஜாதிக்கு ஓர் இரட்சகர்; ஒரு சாமாசி. அவர் ஆயிரத்தில் ஒருவராகிய தூதனாவர். எலிகூ குறிப்பிடுகிறார், மனுஷஜாதியின் இரட்சகர் பரலோகத்திலிருந்து வரவேண்டும். ஆயிரத்தில் ஒருவராகிய என்பது பரலோகம் குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு

கிறிஸ்து ஒரே பேறான குமாரன். தேவனுடைய ஒரே நேரடி சிருஷ்டிப்பு. ஆயிரத்தில் ஒருவராகிய என்பதற்கு வேதத்தில் பலவிதமான அடையாளங்கள் இருக்கிறது. நெருப்பு, மரம் மற்றும் எண்ணிக்கை போன்றவை எண்கள் 3, 12, 7, 6, 5 என்று பார்த்திருக்கிறோம். அந்த வகையில் 1000 இந்த அடையாளம் பரலோகம் குறிக்கிறது. இந்த 1000 பரலோகம் ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்படுகிறது. ஆசரிப்புக் கூடாரத்தில் மகாபரிசுத்த ஸ்தலத்தில் 10, 10, 10 சரியான மூன்றடுக்கு **PERFECT CUBE** அதன் நீளம், அகலம், உயரம் எல்லாம் 10 முழம். இந்த 3 பத்துகளை பெருக்கினால் **(10 x 10 x 10 = 1000)** 1000 குறிப்பது பழைய ஏற்பாட்டு காலத்தில் பரலோகத்திற்கு அடையாளம். ஆம் ஆசாரிப்பு கூடாரத்தில் மகாபரிசுத்த ஸ்தலம் குறிக்கிறது பரலோகம். பழைய ஏற்பாடு காலத்தில் அந்த நேரத்தில் அறிவு வெளிப்படவில்லை. கர்த்தர் இயேசு கூட வரவில்லை. ஆயிரத்தில் ஒருவராகிய என்பதின் அர்த்தம் பரலோகத்தில் ஒருவராய் அவருடைய ஒரே பேறான குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எவ்வளவு அழகான வார்த்தைகள் ஆயிரத்தில் ஒருவராகிய சாமாசி பண்ணுகிற தூதனானவர். இந்த போதனை எலிகூ பேசுகிறார்.

### யோபு 33:24

***“அவர் அவனுக்கு இரங்கி, அவன் படுகுழியில் இறங்காதபடிக்கு: நீர் அவனை இரட்சியும்; மீட்கும் பொருளை நான் கண்டுபிடித்தேன் என்பார்.”***

இது மீட்கும் பொருளை விளக்குகிறது. தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டு இயேசு பூலோகத்தில் இறங்கி மீட்கும் பொருளை கொடுப்பதை பற்றின ஆழமான காரியத்தை எலிகூ பேசுகிறார்.

### யோபு 33:25

***“அப்பொழுது அவன் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப்பார்க்கிலும் ஆரோக்கியமடையும்; தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்.”***

இது இரண்டு பெரிய ஆசீர்வாதங்களை குறிக்கிறது. ஒன்று, **தேவ வல்லமை மரணத்திலிருந்து உயிர்த்து வருதல்.** இரண்டு, **தேவ அன்பு எல்லாம் சீர்திருந்தலுக்கு கொண்டுவருதல்.** தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா மற்றும் நண்பர்கள் எல்லோரும் திரும்ப வருவார்கள். வரும் நேரம் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். வரும்போது எப்படி விழுந்து இறந்து போனார்களோ(சிந்தையில்) அப்படியே வருவார்கள். அவர்களின் பேச்சு, யோசனை அப்படியே இருக்கும். விழுந்துபோன நிலையிலிருந்து தூக்க வேண்டும். அதுதான் பெரும்பாதையான வழி. இந்த உயிர்த்து வருவது, பெரிய அற்புதம். ஒரு மனிதனில் எந்த(சிந்தையில்) மாறுதலும் இல்லை. குடிகாரன் எழுந்து வந்து குடிக்கத்தான் கேட்பார். அது மிகவும் கஷ்டம் அதை மாற்ற வேண்டும்.

உயிர்த்தெழுதலில் வாலிப நிலைமையைப் பார்க்கிலும் சரீரம் ஆரோக்கியமாய் இருக்கும். விழுந்துபோன நிலை அந்த வாலிபர் நிலை. அந்த வாலிபர் நிலை அந்த சமயத்தில் உயிர்ப்பிக்கப்படுகிற நிலைக்கு ஒப்பிட முடியாது. ஒவ்வொரு திறமை திரும்பவும் பரிசுத்தத்திற்கு போகும்போது ஆச்சரியமாக இருக்கும். ஒவ்வொருவருடைய முகம், தோல் பரிபூரணத்திற்கு திரும்பியிருக்கும். உதாரணமாக, மோசே தேவ பிரசன்னத்திலிருந்து

திரும்பி வரும்போது முக்காடு போடும் அளவிற்கு அவர் முகம் பிரகாசமாக இருந்ததாம். அப்படியென்றால் பரிபூரணத்திற்கு திரும்பிய மனிதனின் முகமும், தோலும் எவ்வளவு பிரகாசத்தோடும் பூரணத்தோடும் இருக்கும் யோசித்து பாருங்கள். எப்பேற்பட்ட விஷயம் இந்த வசனம் சொல்லுகிறது. வாலிபர் நிலையை பார்க்கிலும் அதிகமான ஆரோக்கியம் உயிர்த்தெழுதலில் வாலவயதிற்கு திரும்புவான். இவ்விஷயங்கள் மனுக்குலம் பெற்றுக்கொள்ள போகும் ஆசீர்வாதங்கள் - **மீட்கும் பொருள்** நிமித்தமானது.

### யோபு 34:3,4

**"வாயானது போஜனத்தை ருசிபார்க்கிறதுபோல, செவியானது வார்த்தைகளைச் சோதித்துப்பார்க்கும். நமக்காக நியாயமானதைத் தெரிந்துகொள்வோமாக; நன்மை இன்னதென்று நமக்குள்ளே அறிந்துகொள்வோமாக."**

தேவன் ஏன் தீமையை அனுமதிக்கிறார். மனுக்குலம் நித்திய ஜீவன் பெற 2 விஷயங்கள் இருக்கிறது. அது நன்மை - தீமை. இதைப் பற்றி மனுஷன் எப்படி நல்ல முடிவு எடுக்க வேண்டும்? எப்படி நன்மை தீமையின் அனுபவங்களைப் பெறுகிறோம்? இது தான் நாம் பார்க்கும் பெரிய உபதேசம். ஏன் தேவன் தீமையை அனுமதிக்கிறார்? அனுபவத்திற்காக புரிந்து கொள்வதற்காக அனுபவம் வழியாக தீமையை வெறுப்பதற்காக என்ற பெரிய உண்மையை, நியாயமான அந்த காரியத்தை அனைவரும் தெரிந்து கொள்வர்.

### யோபு 34:14,15

**"அவர் தம்முடைய இருதயத்தை அவனுக்கு விரோதமாகத் திருப்பினாராகில், அவனுடைய ஆவியையும் அவனுடைய சுவாசத்தையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளுவார். அப்படியே மாம்சமான யாவும் ஏகமாய் ஜீவித்துப்போம், மனுஷன் தூளுக்குத் திரும்புவான்."**

இந்த இரு வசனங்கள் குறிக்கிறது மனுஷன் ஒரு ஜீவ ஆத்துமா. அந்த ஆத்துமாவுக்கு 2 பங்கு இருக்கிறது. சரீரம் மற்றும் தேவன் கொடுத்த ஆவி. தேவனிடமிருந்து உயிர் வருகிறது. தேவன் சரீரத்தை மண்ணிலிருந்து உருவாக்கினார். இது இரண்டும் சேரும்போது தான் மனுஷன் ஒரு ஜீவஆத்துமா. அவருடைய கொள்கை பாவம் செய்கிற ஆத்துமா சாகும்.(எசே 18:4) இதுதான் இந்த இருவசனங்களில் காணப்படுகிறது. இந்த சத்தியம் பரிசுத்த ஆவியின் மூலமாக உணர்ந்து கொள்ளப்படும்.

### யோபு 34:21–28

**"அவருடைய கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கிறது; அவர்களுடைய நடைகளையெல்லாம் அவர் பார்க்கிறார். அக்கிரமக்காரர் ஒளித்துக்கொள்ளத்தக்க அந்தகாரமுமில்லை, மரண இருளுமில்லை. மனுஷன் தேவனோடே வழக்காடும்படி அவர் அவன்மேல் மிஞ்சினதொன்றையும் சுமத்தமாட்டார். ஆராய்ந்து முடியாத நியாயமாய் அவர் வல்லமையுள்ளவர்களை நொறுக்கி, வேறே மனுஷரை அவர்கள் ஸ்தானத்திலே நிறுத்துகிறார். அவர்கள் கிரியைகளை அவர் அறிந்தவரானபடியால், அவர்கள் நசுங்கிப்போகத்தக்கதாய் இராக்காலத்தில் அவர்களைக் கவிழ்த்துப்போடுகிறார். அவர்கள் அவரை விட்டுப் பின்வாங்கி, அவருடைய எல்லா வழிகளையும் உணர்ந்துகொள்ளாமல் போனபடியினாலும்,**

**எளியவர்களின் கூக்குரல் அவரிடத்தில் சேரும்படி செய்ததினாலும், சிறுமையானவனுடைய கூக்குரலைக் கேட்கிற அவர், எல்லாரும் பார்க்கும்படி அவர்களைத் துன்மார்க்கரென்று அடிக்கிறார்."**

இது குறிக்கிறது தேவனுடைய நியாயத்தீர்ப்பு. தேவன் உலகத்திற்கு ஒரு நியாயத்தீர்ப்பு வைத்திருக்கிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறித்து அநேக விதமான தவறான கருத்துக்கள் இருக்கலாம். தேவன் எப்படி நியாயத்தீர்ப்பு வைத்திருக்கிறார். எலிகூ மிகவும் தெளிவாக தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் குறித்துப் பேசுகிறார்.

**யோபு 35:2–8**

**"என் நீதி தேவனுடைய நீதியைப்பார்க்கிலும் பெரியதென்று நீர் சொன்னது நியாயம் என்று எண்ணுகிறீரோ? நான் பாவியாயிராததினால் எனக்குப் பிரயோஜனமென்ன? பலன் என்ன? என்று சொன்னீர். உமக்கும் உம்மோடே இருக்கிற உம்முடைய சிநேகிதருக்கும் நான் பிரதியுத்தரம் சொல்லுகிறேன். நீர் வானத்தை அண்ணாந்து பார்த்து, உம்மைப்பார்க்கிலும் உயரமாயிருக்கிற ஆகாயமண்டலங்களைக் கண்ணோக்கும். நீர் பாவஞ்செய்தால் அதினாலே அவருக்கு என்ன நஷ்டம்? உம்முடைய மீறுதல்கள் மிகுதியானாலும், அதினாலே அவருக்கு என்ன சேதம்? நீர் நீதிமானாயிருந்தால், அதினாலே அவருக்கு என்ன கிடைக்கும்? அல்லது அவர் உம்முடைய கையில் என்ன லாபத்தைப் பெறுவார்? உம்முடைய பாவத்தினால் உம்மைப்போன்ற மனுஷனுக்கு நஷ்டமும், உம்முடைய நீதியினால் மனுபுத்திரனுக்கு லாபமும் உண்டாகும்."**

இது பரிசுத்தமாக்குதலை குறித்து பேசுகிறது. பாவம் யாரை பாதிக்கும் மனுஷனைத்தான் பாதிக்கும். நீதிமான் இருந்தால் தேவனுக்கு எந்த ஒரு இலாப நஷ்டமும் இல்லை. மனுஷன் ஜீவிக்கிறதற்காக அவன் பாவத்திலிருந்து விலகவேண்டும். பாவத்திலிருந்து விலகுதல் என்பது பரிசுத்தமாக்கப்படுதல். பரிசுத்தத்தின் அர்த்தம் பரிபூரணம். மறுபடியும் பரிசுத்தம் ஆக வேண்டும். இதன் முக்கியத்துவம் எலிகூ பேசுகிறார். மனுஷன் பாவத்திலிருந்து விலக வேண்டும். பாவத்திலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும். பாவத்திலிருந்து ஓர் மனந்திரும்புதல் வேண்டும். பரிசுத்த ஆவியின் மூலம் புதுசிருஷ்டி இந்த கொள்கையை பேசுகிறதைப் பார்க்கலாம். எலிகூ புதுசிருஷ்டி.

**யோபு 36:2–14**

**"நான் பேசிமுடியுமட்டும் சற்றே பொறும்;........"**

இது பூமியில் தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து பேசுகிறது. இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டு எல்லா மனிதர்களும் உயிர்த்து வரும்போது, நீதியின் அரசாட்சியில் அந்த நேரத்தில் பெரும் பாதையில் நடப்பவர்களுக்கு எப்படி தேவனுடைய நீதி, பரிசுத்தம் வெளிப்படும்? இராஜ்ஜியத்தில் யாருக்கு அந்த அதிகாரம் கிடைக்கும்? 6000 வருடங்களுக்கு மேலே இருக்கிற மனுஷ ஜாதியில் எத்தனை சந்ததிகள், எத்தனை விதமான ஜனங்கள், எவ்வளவு பாவங்கள், பாவத்திலிருந்து பாவியை விடுவிப்பது போன்ற காரியங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் நடந்தேற வேண்டும். இராஜ்யத்தின் வேலை மிகவும் பெரியது எலிகூ புதுசிருஷ்டியாக தான் இருக்க வேண்டும். ஏனெனில் இவர் மூலமாக தெள்ளத்தெளிவாக மிகவும் ஆச்சரியமான சத்தியங்கள் வெளிப்பட்டது.

## யோபு 37

37-ம் அதிகாரம் முழுவதும் தேவனைப் பற்றி அவர் சகல சிருஷ்டிப்பின் சிருஷ்டியாளர் என்று எலிகூ விவரமாக பேசுகிறார். தேவனைப் பற்றியும், அவருடைய கிரியைகளைப் பற்றியும் அவர் சகல சிருஷ்டிகளின் சிருஷ்டியாளராய் இருக்கிறார் என்ற எலிகூவின் போதனைகளைப் பார்க்கும் போது எலிகூ புதுசிருஷ்டிதான். எல்லா சத்தியமும் எங்கிருந்து வருகிறது? உம்முடைய வசனமே சத்தியம். தேவனுடைய பரிசுத்த ஆவியின் வழியாக அந்த வசனத்திலிருந்து வசனம் வெளிப்படுகிறது. வேறு எங்குமே சத்தியம் இல்லை.

யோபு 37-ம் அதிகாரத்திலிருந்து அதன் பின் எலிகூ வருவதில்லை. 38-ம் அதிகாரத்திலிருந்து 42-ம் அதிகாரம் வரை யோபு புத்தகத்தில் 1000 வருடம் அரசாட்சி காண்பிக்கிறது. அந்த 1000 வருஷத்தின் காரியங்களில் எலிகூ வருவதில்லை. 1000 வருஷ சமயத்தில் புதுசிருஷ்டி மாம்சத்தில் இருப்பதில்லை. நாம் இன்றும் மாம்சத்தில் இருக்கிறோம். 1,44,000 பேர் மிகவும் குறைந்த எண்ணிக்கை. மீதியிருக்கிற மிச்சம் தான் நாம். அதாவது 1878-ல் அதிக அளவில் மகிமையடைந்தார்கள். எலிகூ வகுப்பாரின் அதிகமான பேர் 1878-ல் மகிமைக்கு போய்விட்டார்கள். ஏலிகூ 38-ம் அதிகாரம் முதல் 42-ம் அதிகாரம் வரை காணப்படுவதில்லை. புதுசிருஷ்டி கண்ணுக்குத் தெரியும் ராஜ்யத்தில் மாம்சத்தில் பூமியில் இருக்கமாட்டார்கள். எலிகூ கதாபாத்திரத்தின் ஆராய்ச்சியை மேலோட்டமாகத் தான் பார்த்தோம். ஆச்சரியமான விஷயங்கள் புதுசிருஷ்டி ஊழியம் பற்றி, புதுசிருஷ்டியின் அறிவு பற்றி எலிகூவில் காணப்படுகிறது.

கடைசியில் யோபுவுக்கு மறுபடியும் பிள்ளைகள் கிடைக்கிறார்கள். முதலில் இருந்த 7 குமாரரும், 3 குமாரத்திகளும் எல்லாரும் மரிக்கிறார்கள். பிறகு யோபு தீமையான அனுபவம் பெறுகிறார். தீமையான அனுபவத்திற்கு பின் யோபுவுக்கு மறுபடியும் அதே கணக்கில் 7 குமாரரும், 3 குமாரத்திகளும் பிறக்கிறார்கள். தொடர்ந்து இந்த கதாபாத்திரத்தை பார்ப்போம்.

## "7 குமாரரும் 3 குமாரத்திகளும் அவனுக்குப் பிறந்தார்கள்"

### யோபு 42:14,15

**"ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் அவனுக்குப் பிறந்தார்கள். மூத்த மகளுக்கு எமீமாள் என்றும், இரண்டாம் மகளுக்குக் கெத்சீயாள் என்றும், மூன்றாம் மகளுக்குக் கேரேனாப்புக் என்றும் பேரிட்டான்."**

இந்த வசனங்களின் புரிதல் நமக்கு வருவதற்கு நாம் நம் மனதில் நினைவு கூற வேண்டியது யோபு புத்தகத்தின் ஆரம்பத்தில் இருந்த அவருடைய சந்ததியின் எண்ணிக்கை மாறாமல் இருக்கிறது. ஆரம்பத்தில் இருந்த 7 குமாரரும் 3 குமாரத்திகளும் மரணம் அடைந்த பிற்பாடு அதாவது அவர்கள் எல்லோரும் ஆதாமுக்குள் மரிக்கிறார்கள். அவர்கள் முழு மனுக்குலத்தை குறிக்கிறார்கள். பாவம் மரணம் போன்றவை அவர்களை சூழ்ந்திருந்த காலத்தில் அவர்கள் பிறக்கிறார்கள். அதாவது **(சங்–51:5)** மரிக்கிறதற்காகவே பிறக்கிறார்கள்.

யோபு பயங்கரமான அனுபவங்களை வாங்கிய பிற்பாடு அவருக்கு 7குமாராரும் 3 குமாராத்திகளும் பிறந்தார்கள் அதாவது 7000- வருஷம் பிற்பாடு ஒரு இரட்சிப்பு நமக்கு உள்ளது. இரண்டும் ஒரே மாதிரி ஆனால் யோபு புஸ்தகத்தில் 6000-வருஷம் தீமையின் அனுமதி இருக்கும், 7000 வருஷத்திற்கு பிற்பாடு தீமையிலிருந்து, மரணத்திலிருந்து இரட்சிப்பு. 7000வருஷத்திற்கு பின் யோபுக்கு 7குமாராரும் 3 குமாராத்திகளும் வெளிப்படுவார்கள். இது இரண்டு விதமான இரட்சிப்பை காண்பிக்கிறது.

## முதலாவது, ஆவிக்குரிய இரட்சிப்பு

7குமாரரும் பரலோக இரட்சிப்பை குறிக்கிறது. பரலோகத்தில் இரண்டு வகுப்பார் வெளிப்படுகிறார்கள் திவ்ய சுபாவ வகுப்பார், திரளான கூட்டத்தார். இந்த 7 சுவிசேஷ யுகத்தின் சபையின் ஏழு கால கட்டம். மேலும் யோபுவினுடைய 7குமாரரும் எதை குறிக்கிறார்கள், நாம் எப்படி இந்த மனுக்குல ஓட்டத்தில் ஆரம்பத்தில் எப்படி இருந்தோம், அதிலிருந்து தேவனுடைய பிள்ளைகளாக எப்படி மாறுகிறோம். யோவான் 1:12 – "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்."

## இரண்டாவது, பூமிக்குரிய இரட்சிப்பு

இரண்டாவது, பூமிக்குரிய மற்றும் மாம்சீக இரட்சிப்பு, பூமிக்குரிய இரட்சிப்பைப் பற்றிய சில விவரங்களைப் புரிந்துகொள்வதற்கென "மூன்று குமாரத்திகளுக்கும்" பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன!

ஆம்! இப்போது நாம் வாசிக்கலாம் – வ14 (யோபு 42)

"மூத்த மகளுக்கு எமீமாள் என்றும், இரண்டாம் மகளுக்குக் கெத்சீயாள் என்றும், மூன்றாம் மகளுக்குக் கேரேனாப்புக் என்றும் பேரிட்டான்."

இப்போது இந்த பெயர்களின் அர்த்தத்தைப் பார்ப்போம் -

### முதல் குமாரத்தி **எமீமாள்**

"எமீமாள்" – இது எபிரெய வார்த்தையிலிருந்து #3224 வந்தது, அதின் அர்த்தம் "புறா" மற்றும் பூமிக்குரிய இரட்சிப்பின் ஒரு பகுதியாக மனிதகுலம் பெறும் முதல் ஆசீர்வாதத்தை பொருத்தமாக பிரதிபலிக்கிறது. பூலோக இரட்சிப்பில் முதலில் ஆரம்பிக்கும் தேவனுடைய ஏற்பாடு அல்லது தேவ ஆசீர்வாதம் **தேவனுடைய பரிசுத்த ஆவி.**

அப்போஸ்தலர் 2:17 / யோவேல் 2:28

"கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்;"

அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்;..."

அவர் மாம்சமான யாவர் மேலும் தமது ஆவியை ஊற்றுவார். எந்த அளவுக்கு ஆவியை ஊற்றுகிறார் என்பதை மனுஷன் தெரிந்து கொள்ள வேண்டும். இருதயம் மற்றும் மனமாற்றம் பரிசுத்த ஆவி மூலம் வெளிப்படும். மாம்சத்தில் ஊற்றுவது என்பது எல்லோருக்கும் கட்டாயம் கிடையாது. தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற விருப்பம் உள்ளவர்களுக்கு தமது ஆவியை ஊற்றுகிறார். இந்த ஆசீர்வாதத்திற்கு விருப்பம் வேண்டும் விருப்பம் இல்லை என்றால் தேவன் தருவது தமது பரிசுத்தாவியை தருவது இல்லை. யாக்கோபு தேவதூதரிடம் போரடுவது என்ன குறிக்கும்? தேவனும், தூதனும் யாக்கோபுடைய வாஞ்சை, விருப்பம் மேலும் தேவனுடைய ஆசீர்வாதம் மீது யாக்கோபு கொண்டுள்ள அன்பு ஆகியவற்றை பார்க்கிறார்கள். அப்போது தான் மாம்சத்தில் ஆவியை ஊற்றுவதற்கு எந்த ஒரு தடையும் இருக்காது. தேவனுடைய இரட்சிப்பின் காலத்தில் யார் விருப்பப்பட்டாலும் அவர்களுக்கு தமது ஆவியை தேவன் அளிப்பார்.

### இரண்டாவது குமாரத்தி **கெத்சீயாள்**

"கெத்சீயாள்" – இது எபிரெய வார்த்தையிலிருந்து #7103 வந்தது, அதின் அர்த்தம் "சவுந்தரியம்" .... மற்றும் பூமிக்குரிய இரட்சிப்பின் ஒரு பகுதியாக மனுக்குலம் பெறும் அடுத்த ஆசீர்வாதத்தை பொருத்தமாக பிரதிபலிக்கிறது... அதாவது தேவனுடைய வார்த்தையிலிருந்து வரும் **தெய்வீக சத்தியம்.**

**ஏசாயா 63:1 / வெளி 20:12**

**"சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்."**

**"மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன;"**

தேவனுடைய ராஜ்ஜியத்தில் அழகான சத்தியம் விளக்கம் தரப்படும். சாம்பாலுக்கு பதிலாக சிங்காரமான வாழ்வு கிடைக்கும். வேதத்தை திறப்பதற்கு தேவனுடைய ஆவி கொடுக்கப்படும். அதன் பின்பு புஸ்தகம் திறக்கும்.

**ஏசாயா 29:18 / ஆபகூக் 2:14**

**"அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள்; குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும்."**

**"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்."**

சத்தியம் அநேக வீடுகளிலும் இடங்களிலும் வெளிப்படும். ஏற்கனவே சகோதரர் மூலம் வெளிப்பட்ட சத்தியத்தை கேட்டபோது செவிடர் போல ஒன்றுமே புரியவில்லை. தேவ

வார்த்தையை பேசும்போது காது கொடுத்து கேட்கவில்லை. செவிடர் நிலையில் இருந்த உலகம் திவ்விய சத்தியத்தை கேட்டு புரிந்து கொள்வார்கள். தண்ணீர் - ஜனங்கள். சமுத்திரத்திலுள்ள ஜலம் போல தேவனுடைய சத்தியம் எல்லா ஜனங்களிடமும் நிறைந்து இருக்கும்.

### மூன்றாவது குமாரத்தி **கேரேனாப்புக்**

"கேரேனாப்புக்" – இது எபிரெய வார்த்தையிலிருந்து # 7163/ 6320 வந்தது, உண்மையில் அதின் அர்த்தம் – **"அலங்கரிப்பட்ட"**......மற்றும் பூமிக்குரிய இரட்சிப்பின் ஒரு பகுதியாக மனுக்குலம் பெறும் உடல் **மற்றும் மனம் இரண்டின் மாம்ச பரிபூரணமும்**, நித்திய ஜீவனைப் பெறுவதற்கான வாய்ப்பும் ஆகும், பின்னர் அவர்கள் "பரிசுத்தப் பெரும்பாதையில்" நடந்து செல்லும் "விருப்பமுள்ள" அனைவருக்கும் வழங்கப்படும். உலக மக்கள் இரட்சிக்கப்படுவதற்காக எந்த அளவுக்கு வேத வசனத்துக்கு கீழ் படிகிறார்களோ. அவர்களுடைய இரட்சிப்பு, சரீரத்தின் மாற்றம் அவர்கள் சிந்தையில் மாற்றம்; திறமைகளில் மாற்றம் என எல்லாமே பரிப்பூரண நிலைமைக்கு திரும்பி போகும். தேவன் முழு மனுக்குலத்திற்கும் எந்த மாதிரியான ஒரு மாற்றத்தை கொடுக்கிறார்? நமக்கான நித்திய ஜீவன் உடனே வெளிப்படாது. முதலில் ஜீவன் பெற்றுக்கொள்ள வேண்டும் அடுத்ததாக மரணத்திலிருந்து வெளிவர வேண்டும்.

**வெளி 22:17**

**"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்."**

மேலும் மீண்டும்.... யோபு 33:25... - "தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்" மெய்யாக, பாவத்தின் மற்றும் சீரழிவின் பிடியிலிருந்து மனுக்குலத்தை விடுவிப்பதற்காக பூமிக்குரிய இரட்சிப்பு தெய்வீக ஆசீர்வாதங்களால் நிறைந்திருக்கும். அந்த இறுதி முடிவு பற்றி இந்த வார்த்தைகளில் விவரிக்கப்பட்டுள்ளது –

### இறுதியாக, **யோபு 42:15**

**"தேசத்தில் எங்கும் யோபின் குமாரத்திகளைப்போல் சௌந்தரியமான பெண்கள் காணப்படவில்லை; அவர்கள் தகப்பன் அவர்கள் சகோதரரின் நடுவிலே அவர்களுக்குச் சுதந்தரம் கொடுத்தான்."**

உலக இரட்சிப்பு முடியும் போது முழு மனுக்குலமும் வெளிபடும்போது மிகவும் அழகான ஆச்சரியமான ஒரு ஜாதி சரீரப்பிரகாரமாக இருக்கும். அவர்களுக்கு ஒரு பிரகாசம் வெளிப்படும், தேவ ஞானம் ஆசீர்வாதம் வெளிப்படும். தேவ ஞானத்தை உணர்ந்து கொள்ளுவதால் தேவ சித்தத்தை செய்வதற்கான விருப்பம் வரும். தேவனிடத்தில் நன்றியோடு நடப்பதால் எந்த நோய்களும் வலிகளும் இருக்காது. இதுவரை தேசம் எங்கும் இவ்வளவு பெரிய மாற்றம் வெளிப்படவில்லை. தூதர்கள் கூட இப்படிப்பட்ட அதிசயங்களைப் பார்க்க வில்லை. தீமைகள் நாசம் மோசம் இருந்த சூழல் உடனடியாக

இவ்வளவு அழகாய் மாறிவிடுமா? நினைச்சு கூட பார்க்க முடியாது. குப்பை தொட்டியில் இருந்து இந்த வைரத்தை எடுக்க முடியுமா? இப்படி தான் இந்த விஷயத்தை பார்க்கத்தோன்றுகிறது. யோபுவில் வெளிப்படும் காரியங்கள் தேவனுடைய பூரணப்பட்ட வேலை முடியும்போது நிச்சயமாக ஆச்சிரியமாக இருக்கும். தேவனுடைய இரட்சிப்பு மனுக்குலத்திற்கு ஒரு சொந்த சொத்தாக கொடுக்கப்படும். பூமியில் தேவனுடைய இராஜ்ஜியம் (வெளி-22:5) முழுமனுக்குலமும் பரிபூரண நிலைக்கு போய்விடுவார்கள்.

**வெளி 22:5**

***"அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்."***

**மத்தேயு 22:34**

***"அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."***

இப்பொழுது யோபு புத்தகத்தின் கடைசி இரண்டு பாத்திரங்களை பார்க்கலாம்.

## தேவன் மற்றும் சாத்தான்

இவர்கள், தேவனுடைய இந்த 7000 ஆண்டு திட்டத்தின் மூலம் செயல்பட்டுகொண்டிருக்கிற கண்ணுக்குத் தெரியாத ஆவிக்குரிய சக்திகளை அடையாளப்படுத்துவதைக் காண்கிறோம். **ஒன்று "நல்லது" மற்றொன்று "தீமை"** யை அடையாளப்படுத்துகிறது.

இது, இந்த யோபு புத்தகத்தில் நாம் பார்த்த கதாபாத்திர திட்ட உருவரையை முடிவுக்கு கொண்டுவருகிறது. ஆனாலும்.... இவைகள் இந்த யோபு புத்தகத்தை புரிந்து கொள்வதற்கான ஆரம்பம் மாத்திரமே !

முடிவாக நாம் அறிந்து கொள்ளவேண்டியது, நாம் அனைவரும் இயேசுகிறிஸ்துவின் ஆயிரம்வருட அரசாட்சியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஆம் நாம், அக்டோபர் 1874 முதல் 2874 வரையிலான கிறிஸ்துவின் "ஆயிரவருட ஆட்சியில்" இருக்கிறோம். யோபு புத்தகத்தில் இது அதிகாரம் 38 முதல் 42 வரையிலான அதிகாரங்களில் காணப்படுகிறது. ஆனால் இராஜ்யம் இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது என்பதை நாம் அறிவோம்.

*"அவன் தன்னை ஆயத்தம்பண்ணும் நாளிலே" (நாகூம் 2:3)* என்ற பாணியில், மூன்றாம் உலகப் போருக்குப் பிறகு, அக்டோபர் 1874 முதல் இஸ்ரயேலில் ராஜ்ய ஸ்தாபனம் வரை இராஜ்யத்தின் **"கண்ணுக்குத் தெரியாத"** பாகம்

இராஜ்யத்தின் "**கண்ணுக்குத் தெரிகின்ற**" பாகம் அதனையடுத்து முதலில் இஸ்ரயேலில் பின்னர் “பூமியின் கடையாந்தரம்” வரை விரிவடையும்.

மத் 6:10 – இல் உள்ள ஜெபம் நினைவில் இருக்கிறதா?

*“உம்முடைய ராஜ்யம் வருவதாக”* பின்னர் ... *“உம்முடைய சித்தம் ... பூமியிலேயும் செய்யப்படுவதாக”* ஆம் அது தான் யோபுவின் புஸ்தகத்தில் காட்டப்பட்டுள்ளது! ஆம்! ராஜ்யத்தின் "கண்ணுக்குத் தெரியாத" பாகம் அதிகாரம் 38:1 முதல் 40:5 வரை சித்தரிக்கப்பட்டுள்ளது. அங்கே யோபுவின் இந்த வார்த்தைகள் நமக்கு கிடைக்கின்றன.

**யோபு 40:5**

***“நான் இரண்டொருதரம் பேசினேன்; இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன் என்றான்.”***

ஆம்! இரண்டாம் உலகின் முடிவு - விளக்கப்படத்தில் உள்ள **“புள்ளியிடப்பட்ட கோடு # 10”,** இது அந்த காலத்தைக் குறிப்பதாகும், அங்கு *“வானமும் பூமியும் ஒழிந்துபோம்” (மத்தேயு 24 : 35).* மேலும்...40:6 லிருந்து 42 ஆம் அதிகாரத்தின் இறுதி வரை இராஜ்யத்தின் “கண்ணுக்குத் தெரிகின்ற” பாகத்தின் அற்புதமான படங்களைக்கொண்டுள்ளது.

தேவன் யோபு 40, 41 வது அதிகாரத்தில் இரண்டு மிருகங்களை குறிப்பிடுகிறார்.

யோபு 40:15 – *“இப்போதும் பிகெமோத்தை நீ கவனித்துப்பார்”*

யோபு 41:1 – *“லிவியாதானை தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ?”*

இந்த இரண்டு மிருகங்கள் எதைப்பற்றி குறிக்கிறது. இதைப் பற்றி வேதத்தில் பதிவு செய்ய என்ன அவசியம்?

வசனங்களில் பார்க்கலாம்.....

**யோபு 40:15–24**

***“இப்போதும் பிகெமோத்தை நீ கவனித்துப்பார்; உன்னை உண்டாக்கினதுபோல அதையும் உண்டாக்கினேன்; அது மாட்டைப்போல் புல்லைத் தின்னும்.....அதினுடைய பெலன் அதின் இடுப்பிலும், அதின் வீரியம் அதின் வயிற்றின் நரம்புகளிலும்....வாலைக் கேதுரு மரத்தைப்போல் நீட்டுகிறது;.....எலும்புகள் கெட்டியான வெண்கலத்தைப்போலவும்,.......அது தேவனுடைய கிரியைகளில் பிரதானமான ஒரு கிரியை,.......”***

பிகெமோத் என்பது ஒரு புல் சாப்பிடகூடிய மிருகம் என்று பார்த்தோம். மாடு எப்படி புல் சாப்பிடுகிறதோ அதுபோல பெகெமோத் கூட புல் சாப்பிடுகிற மிருகம். அதனுடைய பெலன் – அதன் இடுப்பில் இருக்கிறது அதாவது அந்த மிருகத்தின் தொடையில் தான் அதனின் பெலன் இருக்கிறது. இந்த மிருகத்தின் தொடையில் அதிக நரம்புகள் உண்டு.

இந்த மிருகத்தின் வால் கேதுரு மரத்தைப்போல் நீட்டுகிறது. என்ன ஆச்சரியம்! எல்லா மிருகத்திற்கும் அதின் வாலை ஒரு மரத்திற்கு ஒப்பிட்டு பேசமுடியாது. அதனால் இந்த வசனம் பின்னாடி வருகின்ற வாலை பற்றி பேசுவதாக இருக்காது. அது முன்னாடி இருக்கின்ற தும்பிக்கை பற்றி பேசுகிறது. இந்த தும்பிக்கையில் உள்ள அநேக நரம்புகள் மூலம் அதை எப்படி வேண்டுமானாலும் நீட்டலாம், மடக்கலாம், சுருட்டலாம். ஆகவே இந்த வால் என்பது தும்பிக்கையை குறிக்கின்றதாகவே இருக்க வேண்டும். அவ்வளவு பெலன் அந்த தும்பிக்கையில் இருக்கிறது. எனவே இந்த மிருகம் யானை வகையை குறிக்கிறதாக இருக்கிறது.

மேலும், அதின் எலும்புகள் கெட்டியான வெண்கலம் போல இருக்கிறது. எலும்புகளை பற்றி பேசுவோமானால் அது சரீரத்தின் உள்ளே மூடப்பட்டுள்ளது. இது கண்ணுக்கு தெரியாத போது இதைப் பற்றி எப்படி புரிந்துக் கொள்வது. எப்படி வாலானது பின்னாடி அல்ல முன்னாடி என்பதை பார்த்தமோ அதுபோல, இந்த எலும்பானது உள்ளே அல்ல வெளியில் காணப்படுகின்றது. இங்கு இந்த எலும்பு வெளியே தெறிகின்றது என்று பார்க்கும் போது அது யானையுடைய தந்தங்கள். ஆம் இது ஒரு எலும்பு ஆகவே பிகெமோத் என்று பார்க்கும் போது இவை யானையாகத்தான் இருக்க முடியும் என இந்த இரண்டு வசனங்கள் நீருபிக்கின்றது.

தேவன் படைத்த சிருஷ்டிகளான மிருகங்களில் இந்த பெகெமோத்தின் சிருஷ்டிப்பு பிரதானம் என்று சொல்லும் போது அது முதலில் சிருஷ்டிக்கப்பட்ட மிருக ஜாதியாக இருந்திருக்ககூடும். இந்த பிகெமோத்தை பார்க்கும் போது அது மிகப் பெரியதாக இருந்தது. அது ஆரம்பத்தில் இருந்தது இப்போதில்லை. இந்த பிகெமோத் என்பது ஆங்கில வார்த்தை இதை தமிழில் மொழி பெயர்க்காமல் அப்படியே ஆங்கிலத்தில் பதிவு செய்துள்ளனர். இதை Ice Age Movie ல் பார்க்கலாம். இது 13 அடி உயரம் அதன் தந்தம் 10 அடி தலையின் மேல் முடி இருக்கும். தும்பிக்கை நீளமாக இருக்கும்.

அடுத்ததாக, நாம் பார்ப்பது லிவியாதான் மிருகம்.

**யோபு 41:1–24**

***“லிவியாதானை தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ? அதின் நாக்கை நீ விடுகிற கயிற்றினாலே பிடிக்கக்கூடுமோ?......அதைப் பிடிக்கலாம் என்று நம்பினவன் மோசம்போய், அதைப் பார்த்தவுடனே விழுவான்.....அதின் அங்கங்களும், அதின் வீரியமும், அதின் உடல் இசைவின் நேர்த்தியும் இன்னதென்று நான் சொல்லாமல் மறைக்கமாட்டேன்.....அதின் இரண்டு தாடைகளின் நடுவே கடிவாளம் போடத்தக்கவன் யார்?.....அதின் பற்கள் பயங்கரமானவைகள்......அம்பு அதைத் துரத்தாது; கவண்கற்கள் அதற்குத் துரும்பாகும்......மேட்டிமையானதையெல்லாம் அற்பமாய் எண்ணுகிறது; அது அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜாவாயிருக்கிறது என்றார்.”***

இந்த மிருகம் இருந்த காலம் குளிர்காலம், இந்த மிருகத்தின் சரீரம் அதிக கடினமான தோல் சூடான சரிரமாக காணப்படுகிறது. அதனால் அந்த குளிர்காலத்தில் அதன் வாயின்று

புகை போல காற்று வரும். அக்கினி பொறிகள் பறக்கும். அதன் நாக்கு வெளியே வரும் போது அக்கினி தெரியும். அதின் கண்கள் விளக்கைப் போல இருக்கும். பிகெமோத்தின் பெலன் தொடையில் இருப்பதை பார்த்தோம். இந்த லிவியாதானுக்கு பெலன் கழுத்து பகுதியில் காணப்படுகின்றது. ஈட்டி, இரும்பு, கல் இந்த ஆயுதங்களால் லிவியாதானை காயப்படுத்த முடியாது. அதன் உடம்பில் உள்ள தோல்களின் வலிமை பலமானது. பூமியில் அதற்கு ஒப்பானது ஒன்றுமில்லை. இப்படியிருக்க இது என்னவாக இருக்கும்? ஆம் இது பழைய மிருகம் டைனோசரஸில் ஒன்று. இதன் பெயர் - டீ ரெக்ஸ்.

இது Jurasic Park என்கிற Movieயில் காணலாம் இதன் உயரம் 16 அடி நீளம் 43 அடி இதன் எடை 6000 கிலோ கிராம் இதன் கழுத்து பகுதி பலமானது. இது லிவியாதான். இந்த மிருகம் இருக்கும் போது மனிதர்களே இல்லை. இதின் தோல், வால் எவ்வளவு பயங்கரமானதாக உள்ளது. இந்த விசேஷித்த இரண்டு சிருஷ்டிகள் எதை குறிக்கிறது என பார்க்கலாம்.

இந்த விசேஷித்த சிருஷ்டிகள் இரண்டும் இரண்டு விடிவெள்ளி நட்சத்திரங்களை குறிக்கிறது. இவர்களில் முதலாவது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அவரைதான் இந்த பிகெமோத் அடையாளப்படுத்திகிறது.

***யோபு 40:15 – "..உன்னை உண்டாக்கினதுபோல அதையும் உண்டாக்கினேன்;..."***

தேவனின் ஆரம்ப சிருஷ்டி; முதலில் சிருஷ்டிக்கப்பட்டார்; அவர் ஒருவராக சிருஷ்டிக்கப்பட்டார்; இனி செய்யமாட்டார், அவர் மிகாயேல்.

***யோபு 40:16 – "..அதினுடைய பெலன் அதின் இடுப்பிலும்,..."***

இடுப்பு எதை குறிக்கிறது.? **எபே 6:14 – "சத்தியம் என்னும் கச்சையை அரையில்(இடுப்பில்)..."**. ஆம், அவரின் பெலன் சத்திய ஊழியத்தில் உள்ளது. அவர் சத்தியத்தின் ஊழியக்காரர். யோவான் – 18:37 வசனத்தை பார்க்கும் போது அவர் சத்தியத்தை குறித்து சாட்சி சொல்ல வந்தார். யோவான் – 1:17 வசனத்தை வாசிக்கும் போது அவர் சுயமாய் பேசாமல் தேவனின் வார்த்தையை சொல்லி வந்தார். கர்த்தராகிய இயேசு இந்த தீமையான உலகில் வாழும்போது சத்தியம்தான் அவருக்கு பெலனாக இருந்தது.

***யோபு 40:16 – "..அதின் வீரியம் அதின் வயிற்றின் நரம்புகளிலும் இருக்கிறது."***

இன்னொரு விஷயம் அவரின் விரியம் வயிற்றின் நரம்புக்குள் இருக்கிறது. வயிற்றின் நடுவே தொப்புள் உள்ளது. இது எதை குறிக்கிறது என்றால் இது தாயின் தொப்புள் கொடியுடன் உண்டான தொடர்பை குறிக்கின்றது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தாயும் தகப்பனும் பிதாவாகிய தேவன் மட்டுமே. பிதாவானவர்தான் எனக்கு ஜீவன் கொடுத்தார். என் வீரியம் என் வாஞ்சை பிதாவாகிய தேவன் மட்டுமே இதை குறித்து யோவான் – 6:57, யோவான் – 11:42, யோவான் - 16 :32 ல் வாசித்து அறிந்துக்கொள்ளலாம். கொடுமையான

சூழ்நிலையில், அவமான சூழலில், ஏமாற்றம் நிறைந்த சூழலில் தீமை நிறைந்த சூழலில் இருள் சூழ்ந்த சூழலில் விசுவாசமாய் இருந்தார். அநேக போராட்டங்கள் மத்தியில் விசுவாசமாய் உள்ளவர்கள் பலவான்கள். யோபுவைப் போல அவர் என்னை கொன்று போட்டாலும் கூட அவரை நம்புவேன் என்கிற விசுவாசம் வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வீரியம் அவரின் சத்தியத்தின் ஊழியத்தில் இருந்தது என்கிற விஷயத்தை யோபு – 40:16 ல் சொல்லியிருக்கிறது.

**யோபு 40:18 – "அதின் எலும்புகள் கெட்டியான வெண்கலத்தைப்போலவும்,....."**

"அவரின் எலும்புகள் ஒன்றும் முறிக்கபடுவதில்லை" எப்படி, அவரின் எலும்புகள் வெண்கலம் போல் இருந்தது. இங்கு எலும்புகள் நம்பிக்கையை விசுவாசத்தை குறிக்கிறது(எசே 37:11). எந்த எந்தளவுக்கு நாம் விசுவாசம் தேவன் மீது காண்பிக்கின்றேனோ அந்தளவு எலும்புகள் உறுதிப்படும் என்று நம்புகிறேன். ரோமர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வாரினால் அடிக்கும் போதும் கூட அவரின் எலும்புகள் ஒன்றுக்கூட உடையவில்லை அது ஏனென்றால் அவர் பிதாவின் மேல் வைத்த விசுவாசம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கடைசி வரைக்கும் அதாவது சிலுவையின் கடைசி நேரத்தில் என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று லொல்லும் போதும் கூட அவரின் விசுவாசம் தேவனை விட்டு விலகவில்லை. யோபு – 40:18 வசனத்தின்படி அவரின் எலும்புகள் வென்கலம் போல கெட்டியாக உள்ளது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாசம். ("நீதிமான்களின் எலும்புகள் முறிக்கப்படுவதில்லை".)

**யோபு 40:19 – "..தேவனுடைய கிரியைகளில் பிரதானமான ஒரு கிரியை,..."**

தேவன் கிரியைகளில் பிரதானமான கிரியை அவருடைய ஒரேபேறான குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதை தெளிவாக இந்த வசனம் காண்பிக்கின்றது. தேவனுடைய சகல சிருஷ்டிகளில் முதல் பேறானவர் இவர்(கொலோ 1:15 – "*அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.*").

யோபு 41ம் அதிகராத்தில் மற்றுமொரு மிருகம் லிவியாதான் குறிக்கிறது, இன்னொரு தேவனுடைய பெரிய மறைமுக படைப்பான லூசிபர்.

**யோபு 40:19 – "..மேட்டிமையானதையெல்லாம் அற்பமாய் எண்ணுகிறது; அது அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜாவாயிருக்கிறது,..."**

தேவன் இவருக்கு கொடுத்த பெரிய வேலை ஆதாமையும் ஏவாளையும் பாதுகாக்க வேண்டும் என்பதே, காலபோக்கில் தேவனுடைய எதிராளியான சாத்தானாக மாறினார். வஞ்சனைகளை கொண்டு வந்தார்; உலகத்தை பயத்தின் அடிமைத்தனத்தில் வைத்தார். அவரின் வல்லமையால் எவ்வளவு அழிவில் மனுக்குலம் போய்க் கொண்டிருக்கிறது.

இந்த இரண்டு மிருகங்கள் பிகெமோத் மற்றும் லிவியாதன் விஷயத்தில் தேவன் நமக்கு காண்பிப்பது "நீதி" மற்றும் "தீமை". நீதியை விரும்பி தீமையை வெறுக்க வேண்டும்.

ஆ! நாம் இன்னும் என்ன சொல்ல முடியும்?

மெய்யாக இந்த புஸ்தகம் விசேஷமான ஒன்றுதான்!

மேலும் எவ்வளவு அழகாக அது தொகுக்கப்பட்டுள்ளது!!

மிகவும் நேர்த்தியான மற்றும் வண்ணமயமாக கையால்
உறையிடப்பட்டப் பரிசு போல!

உண்மையில்.....

நாங்கள் நம்புவது யாதெனில் முதலில் யோபுவே.......

**தேவன் "தன் வழக்கைக் கேட்பார்" என்று விரும்பினவர்**

**மேலும் “விருப்பத்தையும்” வெளிப்படுத்தினவர் ...**

**“சர்வவல்லவர் எனக்கு உத்தரவு அருளிச்செய்யவும்” என்று நாடவும் செய்தவர்**

**மற்றும்... ஆம் !...“என் எதிராளி தன் வழக்கை எழுதிக்கொடுக்கவும்”.**

**(யோபு 31:35) என்று கூறவும் செய்தவர்.**

ஆம்! ஒரு நாள், உயிர்த்தெழுதல் மற்றும் தேவனுடைய ராஜ்யத்தின்
“கண்ணுக்குத் தெரிகின்ற” பாகத்தில், பூமியெங்கும் இந்த முற்பிதா மற்றும்
“பிரபுவான” - யோபு – என்னும் பொறுமைசாலி... (யாக்கோபு 5: 11)

தன் “எதிராளி” என தவறாக புரிந்துக்கொண்ட “சர்வ வல்லவரிடமிருந்து”

அவரது பதிலை
...பெற்றிருப்பார்...


ஆம்! யோபுவின் புஸ்தகம்

*யோபு! ஆ! எப்பேற்பட்ட புத்தகம்!!*

ஆமென்!

# தேவனுடைய தெய்வீக திட்டம்




“நீ தர்சனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை.” ஆபகூக் 2:2

